3-   2

உ

வேதஸாரவிளக்கம்

எனும்

இஃது

ப்ருஹ்மஸ்ரீ, மருவூர்-கணேசசாஸ்திரியார் அவர்கள்

ஸ்ரீராமேச்வரம் தேவாலயத்தில்

ஆனந்த௵ ஆடிப்பூர உத்ஸவத்தில்

செய்த

உபந்யாஸங்களின் தொகுதி

841
1.15

ராமேச்வரம் தேவஸ்தான அதீனமாக

ஷை டிரஸ்டி

ஆர். ஸ்ரீநிவாஸய்யர், B. A., அவர்களால்

பிரசுரிக்கப்பட்டு

சென்னை

எஸ். மூர்த்தி அண்டு கம்பெனியாரால்

கடாலி அச்சுயந்திரசாலையில்

அச்சிடப்பட்டது.

All Right Reserved

உ

அட்டவணை.

	பக்கம்.
மனிதப் பிறவிக்கும் ஏனைய பிறவிகளுக்கு முள்ள தாரதம்மியம்	1
விவேகம் ஒன்றினாலேயே மனிதப்பிறவி சிறந்ததென்பது	3
பகுத்தறிவுள்ளவரை நோக்கியே சாஸ்திரவிதி	4
மனவின் ஸ்தானம்-கிரியை முதலியவைகளின் இயல்பு	5
மனஸ்தானத்தைப்பற்றிய யுக்திப் பிரமாணம்	7
ஸ்தூல தேஹத்திற்கு ஜீவன் அந்நியனே	9
ஸூக்ஷ்ம சரீர ஸ்வரூபம்	10
ஸ்தூலத்தினின்றும் ஜீவன் புறப்படுதல்	11
ஸ்வர்க்க நரக இயல்பு	12
ஸ்தூல சரீர பேத நிரூபணம்	15
ஸ்தூல சரீரபேத விஷயமான பிரமாண நிரூபணம்	20
கர்மகதி	25
ச்ராத்தம் முதலியது இறந்தவரிடம் சேரும் முறை	27
ஈச்வர ஸ்வரூப விசாரணை	28
ஈச்வர ஸ்வரூப அநுமானம்	31
ஈச்வரன் செயல்	32
ஈச்வரன் கர்மபல தாதா	34
ஈச்வர ஆக்ஞை	37
ஈச்வரன் ஸர்வ வியாபகன்	38
ஈச்வரன் ஸர்வக்ஞன், நித்யதிருப்தன், அநாதிபோதன், ஸ்வதந்திரன், அலுப்தசக்தன், அநந்தசக்தன்.	40
ஈச்வரோபாஸனை	43
விவேகோபாஸ்தி	46
மூடோபாஸ்தி	47
ஈச்வராநுக்ரஹம்	48

INTRODUCTION.

I am indebted to my dear and esteemed friend, Mr. R. Srinivasa Aiyar, B. A., Trustee of the Ramesvaram Temple, for a request to write an Introduction to the lectures contained in this little volume. It gives me sincere pleasure to comply with his request, not only because the friendship between Mr. Srinivasa Aiyar and myself, the foundation of which was laid nearly thirty-five years ago during the days when he was a student of the Kumbakonam College, has grown and matured into warm personal attachment and respect,—but also because I admire the spirit of devotion to this ancient and sacred land of our race which has induced him, after retiring from his high appointment in the Revenue Department of the Provincial Service, to give the benefit of his ideals of life and work to the honourable and arduous task of improving the working, and perfecting the organisation, of what I may call the foremost of all our Indian sacred temples,—that which carries the mind back to the associations and memories of an epoch of our history which, enveloped as it is in the mist of antiquity and legend, remains the most precious and glorious of all our traditions and the undying witness of the mission of our race in the world and its living faith in Him who has not only given it the instruction needed for the maintenance of that mission but has always been accepted as the supreme support and aim of human knowledge and endeavour. Mr. Srinivasa Aiyar, in arranging for the delivery of these lectures, seems to me to have recognised that the masses of our people and even others are still ardently wedded to that mission and that faith in spite of the losses wrought by the revolutions of the ages that are past and the decay of reverence for holiness and of the rapture of faith that has recently overtaken some minds among us in consequence of the introduction of an attitude of preference for several modern social and political ideals. So long as the spiritual *ideals* of our race remain to us in all the glory of their eternal truth and so long as the masses retain their faith in them, those who rule the land have to shape the aims of their policy and their machinery of administration towards the helping of them to fulfil what they desire and strive for. No doubt each age brings with it its own special tasks and responsibilities, and rulers and people have to

move in accord with each other in order properly to fulfil them. But where a land and people like ours have a special and even unique mission entrusted to them no events, discoveries, or achievements in the material world,—however momentous their import on the merely external life of the communities forming the nation—can change their feeling of loyalty to the ideas which have for ever maintained their hold on them. These ideas dominate the course of the daily life of our people, and hence they form a community apart. It is their unlikeness to all other communities that we have to recognise and maintain,—especially because it forms the sheet-anchor of our claim to live and the assurance of our safety and prosperity among the communities of the world. Wealth and power, art and freedom have been the central themes of the regard and enthusiasm of other nations and groups of the human race. But, while we have not altogether neglected them, we have made them subservient to the preservation of our leading racial ideas, *viz.*, the purity, reality, joy and freedom which constitutes the soul of man, its close kinship with the divine soul, and the solidarity of the organism of the universe. At the same time we have preserved the practical character of our religion by our stern and unbending faith in the means and steps by which the realisation of its leading ideas is to be achieved and in the necessity of preserving all the Indian racial and religious types which have endured here so long. And this firm and unswerving allegiance we owe to the fact that, unlike men in the West, we have insisted on religion being a reality,—a predominant, and even absorbing, factor in the daily life, external and internal of every individual, of the community. As Mr. J. M. Kennedy, the author of a translation of Bhartrihari's Satakas, says :—"In India the religion and philosophy of the people are commingled to such a degree that it is very difficult and decidedly inadvisable to consider them separately. Furthermore the Indian is much more logical than the European in that the theories he holds are his practical ideals of life. Very few Europeans, for example, have ever tried to put into practice the essential principles of the Christian religion which most of them profess to hold. The Indian, on the other hand, is not merely familiar with the chief tenets of his faith, but he endeavours according to his lights to carry them out in his daily life. Again the organisation of the entire social order is based on philosophical and religious

principles, those principles which are expressed perhaps with the greatest clearness in the collection of writings known to us as the Laws of Manu. But in Modern Europe our sociological and economic order has not necessarily anything to do with religion at all." And again:—"What is bound to strike the European visitor above all is the caste system, the vigour and efficacy of which has in no wise diminished. The caste system in India withstood the terrific spiritual onslaught of Buddhism, the combined spiritual and physical onslaught of the Moslems, and the English occupation. An interval of hundreds of years separated each of these strong attacks, and yet the caste system is as powerful in theory and even in practice as we can imagine it to have been six thousand or seven thousand years ago. A system which has endured so long, a system which is so old and yet always youthful, must surely be of unique interest." To us in India, its interest and its importance lie in the fact that, as already stated, it has been indispensable to us for the preservation of the racial types of Hinduism and its leading systems of practical religion. Our racial types and religious systems have lived together and prospered side by side,—and, as the one is the body, so the other is the soul of Hinduism; as one is the means, so the other is the goal of Hinduism.

Holding these views regarding the characteristic phenomena of religious life and thought in India, I think that the funds at the disposal of those to whom the preservation and prosperity of our religious institutions are entrusted cannot be devoted to a higher or more useful purpose than the popular exposition by competent men of our religious ideas and ideals, especially at places where large and pious crowds of Hindus gather from all parts of the province to witness the great religious festivals and ceremonials for which Hinduism is well known. My friend, Mr. Srinivasa Aiyar, has earned the lasting gratitude of all by arranging for the delivery of these lectures at one of the leading Ramesvaram festivals of last year by one of the most gifted, most learned, most prominent, and most enthusiastic of the Pandits and expositors of Hinduism at the present age,—Brahmasri Ganesa Sastrigal, of Maruvur (a village in the Tanjore District). The selection of this eminent and esteemed Pandit is especially happy, as none can be better fitted for the task of expounding the leading topics in Hinduism to as to satisfy the demand for an effective

rationalistic treatment of them and to establish them against the attacks of modern criticism in such a manner as to evoke serious thought and gain intelligent acceptance. The Pandit deals ably and conclusively with the dignity, value and the special characteristics of human life, the divisions of mind and their functions and capacities, the various steps in the passage of the Jiva from this stage of life to the future world and the fate which awaits it therein, the nature of the Supreme Being and the means available to man for the realisation and attainment of Him and the gaining thereby of the release of man from the bondage of phenomenal existence. And all these subjects are treated not only with the wealth of argument and illustration needed to satisfy the modern mind, but also with such explanations as are needed to confirm the faith and to remove the doubts or difficulties of those who study the Hindu source—books of spiritual knowledge with a mind which believes in their truth while it confidently inquires into the sufficiency and validity of the truths which they have proclaimed for the benefit not only of the elect who form the Aryas of India in all their Varnas, but also for all humanity,—for it is the mission of the former in the world to furnish the vehicles needed for those who are, in the course of evolution, qualified and fitted to soar into those effulgent regions of meditation where we come face to face with the unruffled serenity and the immeasurable joy of the Infinite in ourselves.

We live in a rationalistic age with its own difficulties, problems, and aims. Hence we are in urgent need of a re-statement of the truths taught by our unmatched sages which will be suited to the requirements of the present time—a restatement which will effectively resist the pressure, now so intense, self-sufficient and noisy, of the rampant forces of sensualism and materialism,—a re-statement which will fully satisfy those Hindu minds which, in spite of their contact with influences, disruptive or educational, pressing on us from without, are still so sufficiently impressed with the claims of spiritual truth as to be unbending in their resolve to maintain the continuity of Indian tradition. To men of the latter class—and most of them are men who have not received any education in the English language—Pandit Ganesa Sastriar speaks with authority and to the manner born so that the Sanatana Dharma may continue to remain to them a most fruitful national inheritance

from the past, the source of inspiration, hope, and strength for the future. It is to the men of this latter class that Mr. Srinivasa Iyer invited the Pandit to speak. We know that none of that class belongs to the category of those who, under the influence of of modern education or so-called modern enlightenment, believe in what passes as the religion of science,—the religion which the modern doctrine of evolution, physical and biological, has helped to bring into existence,—the religion which believes the world to have originated entirely from matter and motion without the action of an intelligent personality,—the religion which holds that we know only that there was originally a fire—mist, a sea of incandescent gas which, during millions of years, cooled and condensed, till the outer atoms which kept whirling and buzzing round and round in the form of a ring drew together towards a common point from every part of the ring and helped to form a globe still whirling along the path occupied of old by the whirling sea of atoms. Then globe after globe was similarly formed till the sun and all that constitutes the solar system were formed, and later the conditions came in which made possible the existence of life, and later the existence of man, on earth. Matter, life, man came successively into existence,—and now, under the influence of the great agencies of modern civilisation, the printing-press, the railway train, and the telegraph wire or wireless, a federated society and a universal social mind have been created or are being developed in place of the old societies and civilisations each of which formed a separate entity, pursuing its own course in isolation and habitually behaving towards other social entities with treachery, ferocity, and even brutality. The conception of an eternal God and an eternal law of justice and morality has been dispensed with, and hence all the prophecies of a new epoch of peace and progress—of a new heaven and a new earth—have now been swallowed up in an ocean of weltering hatred, strife, and slaughter among the greatest nations and powers of the world.

It is against the creed of science and the ethics of evolution which have resulted in the preaching of the Darwinian gospel of "Marry, multiply, let the strongest live, and the weakest die" that our eminent Pandit—lecturer really delivers a merciless attack when he builds up his elaborate edifice of argument for the existence of Isvara and his over-ruling, impartial, and beneficent

dispensation of the fruits of Karma. This doctrine of an over-ruling, beneficent and Omniscient God who is the world's origin, desire, and goal has been the message of the Rishis to mankind from immemorial antiquity, and the Pandit preaches it to us today with the same ardour of enthusiasm and abundance of argument as the sages and teachers who laid the foundations, and built up the superstructure, of Indian wisdom. The Pandit draws upon their precious and beautiful store of wisdom with the skilful and confident witchery of a master and an artist, and the result is a work, however small, of high value and importance to the masses of the Hindu community of all classes and sects.

May we conclude by expressing our earnest hope that not only will this useful little work have a wide circulation among those for whom it is intended, but also among others who, in spite of their many advantages of *modern* culture, are in most cases lacking in one of the essential elements of *true* culture,—a knowledge of their own national and traditional systems of thought and practice, systems which, unlike those of other countries, have had a profound influence in settling the course of the life of the Indian community, past and present, and which certainly have had an expansive influence even in recent time not less promising than that which they have had in the past! May we hope that it will induce many to take up the Pandit's larger work of which this is but an introductory epitome and there find the argument stated and built up more completely than here and in such a manner as to carry conviction and solace to all! May we hope that it will fire men with the enthusiasm needed for taking up and mastering the eternal oracles of Indian and Aryan wisdom and still more for maintaining and developing the great types and ideals of Indian and Aryan culture so as to resist and destroy the subtle fascinations of the flesh which are daily invading this ancient and holy land and threatening those ideals and types with rapid and thorough extinction!

KUMBAKONAM,
3—2—15

K. SUNDARARAMAN.

உ

ஆனந்தவருஷ ஆடிப்பூர உத்ஸவத்தில்

ஸ்ரீ ராமேச்வரம் தேவஸ்தானத்தின் ஆதரவினில்

வியாழக்கிழமை மாலை நடந்த உபந்நியாஸம்.

மானுஷ ஜன்மத்தின் பெருமை.

இன்று மானுஷ ஜன்மத்தின் பெருமையைச் சற்று விசாரிப்பாம். இவ்வுலகில் உள்ள எண்ணிறந்த ஜீவராசிகளுள் மனுஷ ஜன்மத்தின் பெருமையைப்பற்றி இவ்வாறு விசாரிக்கின் அது நன்கு விளங்கும். மிருகம், பறவை, ஊர்வனவாகிய திரியக் ஜந்துக்களின் பிறவி சிறந்ததா? மானுடப் பிறவி சிறந்ததா? சற்று கவனித்துப் பார்க்கின் மானிடப் பிறவியிலும் ஏனைய பிறவிகளே சிறப்புடையன எனக்காணப்படும். உதாரணமாக, எறும்பு முதலிய ஜந்துக்களுக்குள்ள நற்குணம் மனிதரிடத்தில் காணப்படுகின்றதில்லை. ஓர் சிறு ருசி பதார்த்தம் தென்படின் எறும்பு அதனை "தான் மாத்திரம் புசிக்க வேண்டும் தன்னினத்தவைகளுக்குத் தெரியப்படுத்தக்கூடாது" எனும் எண்ணத்தைச் சிறிதுங் கொள்ளாமல் தன்னினத்தனவாகிய கோடானு கோடி ஜந்துக்களுக்கு அறிவித்து அவைகளோடு கூடச்சென்று, அவ்வுணவுப்பொருளில் தான் புசிப்பது ஒரு சிறு அணுவளவே ஆயினும் தன்னினத்தனவோடு புசித்தல் பற்றி மிகவும் திருப்தியடைகின்றது.

அன்றியும் காக்கை முதலியவைகளுக்கு யாரேனு மொருவர் அன்னமிட்டு அழைக்க அதனைக் காதில் வாங்கிய காக்கை மட்டுந்தனியே சென்று "நம்மினத்தாருக்ந அறிவிக்காமல் நாமே இதனை விலாப்புடைக்கத்தின்று திருப்தியடைவோ" மென்று எண்ணுகின்றதுண்டா? இல்லையன்றோ? தனக்குக் கிடைப்பது இரண்டு மூன்று பருக்கைச்சோறே யாயினும் தம்மினத்தைச் சேர்ந்த ஜந்துக்கள் எல்லாவற்றையும் கூவி யழைத்துக்கொண்டே செல்லுவதைப்பிரத்தியக்ஷமாகக் காணுகின்றோமன்றோ. இவ்வாறுள்ள குணம் மனிதரிடம் சாமான்னியமாய்க் காணப்படுகின்றதா?

எருது முதலியவை மற்றோர் எருதின் ஸங்கத்தால் கர்ப்பமாயுள்ள பசுவைக் காமுறுகின்றதில்லை யென்பதும் சற்றுக்கவனிப்போருக்கு விளங்கும். அன்றியும் ஸ்திரீகளோடு சேருவதற்குத்தக்க பருவமாகிய ருது காலமெனும் (சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட) காலவரையை மீறியும் எருதுகள் செல்லுகின்றதில்லை. செல்லத்தக்க காலவரையையும் மற்றோர் எருது இதனிடம் கலந்திருக்

கின்றதா வென்பதைப்பற்றியும் அறிந்து கொள்வதற்காகவே, எருதுகள் ஆக்களின் பிற்பக்கத்தை முகர்ந்து கவனிக்கின்றன. அங்ஙனம் கவனித்து இதனைக் காமுறக்கூடாதென்பதை அறிந்த பின்னர் அதனை விரும்புகின்றதில்லையன்றோ. இப்படிப்பட்ட குணங்கள் மனிதனிடம் சாமான்னியமாய் உள்ளதென்று சொல்லக்கூடுமா ?

பூனை, கீரி, நாய் முதலிய ஜந்துக்கள் விஷந்தீண்டப்படின் அவ்விஷத்தை நீக்கும் பச்சிலை மூலிகை முதலியவைகளை இவையே யெனத்தெரிந்து கொண்டு அதனைச் சேவித்து விஷத்தினால் துன்புறாமல் இருக்கத்தக்க அறிவு பரிபாகத்தைப் பெற்றிருக்கின்றன. இவ்வறிவு பரிபாகம் மனித சாமான்னியத்திற்குள்ளதோ ? இங்ஙனம் குணங்களினாலும் அறிவு பரிபாகத்தினாலும், மனித ஜன்மத்திலும் ஏனைய ஜந்துக்களின் பிறவிகளே. சிறப்புற்றன வென்பது நிச்சயமே. இனி ஏனைய ஜந்துக்களின் பிறவி உலகில் எப்படி பயன்படுகின்றதோ அப்படி மனித ஜன்மம் பயன்படுகின்றதுமில்லை.

அதாவது, அசுத்தமெனத் தள்ளத்தக்கவை உரோமம், கேசம், எலும்பு, தோல், மலம், மூத்திரம் முதலியவை என்பதில் சிறிதுஞ் சந்தேகமில்லை. ஆயினும் ஆடு முதலியவைகளின் உரோமங்கள் உத்தமோத்தமமாய் தர்ம நூல்களிலும்புகழப்பெற்ற கம்பளம் முதலியவைகளுக்கு உபயோகப்படுகின்றன. சவரிமான் முதலியவைகளின் கேசம் ராஜஸ்திரீகளும் கூந்தலில் வைத்து அலங்கரிக்கத்தக்கனவாயுள்ளன. யானை முதலியவைகளின் எலும்பும் உத்தமோத்தமாகிய தந்த மென்று கொண்டாடப்படுகின்றது.

புலிநகம் முதலியவை மகாராஜாக்களும் அணியத்தக்க ஆபரணமாகின்றன. புலி, மான் முதலியவைகளின் தோல்கள் யோகிகளுமிருந்து தியானிக்கத்தக்க பாவனமாகிய ஆஸனங்களாகின்றன. கோவின் மல மூத்திரங்களும் புனிதமாகிய விபூதிக்கும், சகல பாபங்களையும் போக்கடிப்பதாகிய பஞ்சகவ்வியத்திற்கும், ரோக நிவிருத்திக்கு வேண்டப்படுவதாகிய ஔஷத சுத்திக்கும், உபயோகப்படுகின்றன. இங்ஙனம் மனிதருடைய உரோம மேனும் கேச மேனும் எலும்பு தோல்களாவது மல மூத்திரங்களாவது நல்விஷயங்களுக்கு உபயோகப்படுகின்றனவெனச் சொல்லக்கூடுமா ?

இவ்விதம் எவ்வாற்றாலும் உபயோகப்படாத மனிதப்பிறவியை ஏனைய ஜன்மங்களிலும் உத்தமமெனக் கொள்வதற்குக்காரணம் யாது ? வேதம் முதலிய பிரமாண நூல்களில் மனித ஜன்மமே சிறந்ததெனச் சொல்லப்படுகின்றதன்றோ. சங்காரசாரியார் முதலிய முன்னோர்களும் "ஜந்தூநாம் நரஜந்ம துர்லபம்" "ஜந்துங்களுக்குள் நர ஜன்மமே பெறற்கரிதாம்" எனக்கூறியிருக்கின்றனரே! இங்கு நாம் விசாரித்த வரையில் ஜந்துக்களுக்குள் மனித ஜன்மமே துச்சமானது என்றல்லவோ அறியப்படுகின்றது. இப்படியிருக்க மனித ஜன்மம் சிறந்ததெனச் சொல்லப்படுதல் எக்கருத்தைக் கொண்டது எனின், அது பிறவியைப் பயன்படுத்திக் கொள்ளுதலாகிய அரிய விவேகத்திற்குத்தக்கதென்பதே

இனி அந்த விவேகம் யாதெனின், இப்பிறவி எமக்கு எக்காரணத்தால் வந்திருக்கின்றது? உலகில் எவராலும் காலவசமாகாமலிருக்கும்படி தப்பித்துக் கொள்ள இயலவில்லையே! அப்படிப்பட்ட காலவசம் எமக்கும் வருவது நிச்சயமே. அங்ஙனம் நிகழ்ந்தால் இச்சரீரத்தில் இருந்து கொண்டு ஸகலவியவகாரியங்களையுஞ் செய்யும் அறிவுப்பொருளானது எத்தன்மையுடையதாகும்? எனும் விஷயத்தை விசாரித்து நன்றாய் அறிந்து கொண்டு மறுமைக்கு ஸாதகமாகும் மார்க்கத்தை நாடுவதாகிய பரிபாகமே இங்கு விவேக மென்பதாம்.

இனி இந்த விவேகத்தை ஸம்பாதித்துப் பரலோகத்திற்குத் துணையாகும் வழியைத் தேடிக்கொள்ளல் என்பது, மனிதர்களுள் எல்லோருக்கும் தக்கதா? அல்லது ஓர் சிலருக்கே தக்கதா? இவ்விஷயத்தில் அதிகாரிகள் யார் என்பதை நிச்சயித்துக் கொண்டாலல்லவோ உறுதியோடு அவ்விஷயத்தில் உழைக்கத் தகும்! எனின் அதனைச்சற்றுக்கூறுவோம்.

உலகிலுள்ள மனிதர்களுக்கு ஜாதி, மதம் முதலியவைகளில் எவ்வளவோ வித்திசாஸமிருக்கினும் பரலோகத்திற்கு ஸாதகமாகும் வழியை நாடும் விஷயத்தில் சகல மனிதர்களும் அதிகாரிகள் ஆவர் என்பதே அறியத்தக்கது. அங்ஙனமாயினும் வேத சாஸ்திரங்களின் மூலமாய் அவ்வழியை நாடும் விஷயத்தில் ஓர் சிலருக்கே அதிகாரம் உளது. இவ்விஷயத்தில், கருணைக்கடலாகிய இறைவன் அருளிய சாஸ்திரங்களில் உள்ள விதிவரம்பை மீறாமல் நடந்து கொள்வதே உசிதமாகும். அதாவது வேத சாஸ்திரங்களின் மூலமாய் பரலோக ஸாதனத்தைத்தேடிக்கொள்ளுதலை எவரைக்குறித்து சாஸ்திரங்கள் விதிக்கின்றனவோ அவர்கள் அவ்வகையாலும், அது எவருக்குக் கூடாதென விலக்கப்பட்டிருக்கின்றதோ அவர் தமக்குரியவாறு பரலோக ஸாதக வழியைப் பாஷாந்தர மொழிபெயர்ப்பு முதலியவைகளின் மூலமாகவும் சம்பாதித்துக்கொள்ள வேண்டும். இதன் விபரத்தை இங்கு குறிக்க அவகாசமில்லை. ஆதலால் விடுகின்றனம். இதுவரையில் கூறியதனால், பகுத்தறிவுள்ளவர் தமக்குரிய விதிவரம்பை மீறாது நடந்துகொள்ளவேண்டும் என்பதும் பரலோக ஸாதநத்தைத் தேடிக்கொள்ளத்தக்கவருமவரோ என்பதும் நிர்ணயிக்கப்பட்டது.

மிருகம், பறவை முதலியவைகளுக்குப் பகுத்தறிவு நிகழாதாதலின் அவை இவ்விவேகத்தைச் சம்பாதித்துக்கொள்ளவும் விதிவரம்புக்குட்பட்டு நடந்து கொள்ளவும் இயலாது. ஒருக்கால் மிருகம் முதலியவைகளுக்கும் விதிவிலக்குகளை அறிந்து கொள்ளவும் பரலோக ஸாதநத்தை நாடவும் அறிவு பரிபாகமிருக்குமாயின் அவைகளும் இதனில் அதிகாரிகள் என்பது தகும். அங்ஙனமிராமையால் மனிதரே இதனில் அதிகாரிகள் என்பதாம். அறிவு பரிபாகமுள்ளவர் யாவராயினும் விதிவரம்புகளை மீறக்கூடாது எனும் விஷயத்தில் ஸ்ரீராமாயணத்தில் சொல்லப்படும் வாலிவதப்பிரகரணத்தை திருஷ்டாந்தமாய்க் கொள்ளலாம்.

அதாவது குரங்கினத்திற்கு ஒருவனது பெண்டிரை மற்றொருவன் சேரக் கூடாது எனும் விலக்கு சாஸ்திரத்தில் சொல்லப்படாமலிருக்க அக்குற்றத்

திற்காக என்னை நீ தண்டித்தது உசிதமாகுமா, ஓ ராமா! எனிப்படி அநீதியாய்த் தண்டித்தாய் என வினவிய வாலியை நோக்கி இறைவன்,

ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ்ஞேய: ஸதாம் தர்ம: ப்லவங்கம||

"தாண்டிச்செல்லும் தன்மையுடைய" ஓ வாலியே? (குரங்குகளுக்குப் பிறன் பெண்டீரெனும் வரம்பு இல்லை என நீ சொல்லியது பற்றியே நீ தரும நூலறியும் பரிபாகம் பெற்றவன் என்பது விளங்குகின்றதல்லவா. விதி வரம்புகளையறியும் பரிபாகமுள்ளவர் எவரோ அவரையே நோக்கி சாஸ்திர விதிபிரவர்த்திப்பதாம் எனும் கருத்தை யடைக்கி "பெரியோர்களின் தர்மம் மிகவும் நுட்பமானது ஆதலின் யானுனைக் கொன்றேன்" என ஸ்ரீராமபிரானாலும் போதிக்கப்பட்டுளது. இதனால் பகுத்தறிவுள்ளவராயிருப்பவர் குரங்குமுகமுடையராயினும் மற்று எத்தகைய அங்கங்கள் அமைந்தவராயினும் விதிவரம்புகளுக்குட்பட்டு நடக்கும் விவேகத்திற்கு அதிகாரிகளே என்பது அறியத்தக்கது. ஆதலால் வாலிக்கிருந்தது போல் அறிவு பரிபாகமுள்ள மிருகம் பறவை முதலியன தற்காலமுமிருக்குமாயின், அவையும் இத்தகைய விவேகத்திற்கு அதிகாரிகளேயாம். அங்ஙனம் பரிபாகம் மனிதரொழிந்த ஏனைய ஜந்துக்களுக்கிருந்தால் அரிதிலும் அரிதே. ஆதலால் மனிதரே இதனில் அதிகாரிகள்என்பது துணிபு.

இனி, பல காலமாய் இம்மைப்பொருள்களையே பரமெனக்கொண்டுழன்று கெட்டழிந்த மனிதனுக்கு இன்று நிகழ்ந்த இந்த விவேகம் ஸபலமாவது எப்படி? எனின் கூறுவாம்.

பூர்வம் கட்டுவாங்கன் எனுமோர் அரசன் அஸுர யுத்தத்தில் இந்திரனுக்கு ஸகாயஞ்செய்ததினால் திருப்தியடைந்த இந்திரன், அவ்வரசனை நோக்கி "ஓ கட்டுவாங்க ராஜனே" உன்னிடம் நான் மிகவும் ப்ரீதியடைந்தேன், உனக்கு வேண்டுமென்பதைப் பெற்றுக்கொள், என்னிடம் ஐராவதம், கல்பகதரு, காமதேனு, சிந்தாமணி முதலிய அரும்பொருள்கள் பல விருக்கின்றன. உனக்கு விருப்பமுள்ளதை அடையலாம் எனக்கூற, அதற்கு அவ்வரசன், அஹோ என்ன ஆச்சர்யம்! த்ரிலோகநாதனாகிய இந்திரனே வேண்டுமெனும் பொருளைப்பெற்றுக்கொள்ளென நம்மிடம் நேரில் சொல்லும்பாக்கியத்தைப் பெற்றனம். ஆனால் இவர் சொல்லுகிறபடி நமக்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுக்கொண்டு நமது ராஜ்ஜியத்திற்குச் சென்று நாம் இவ்வுலகில் எவ்வளவு காலம் ஜீவித்திருப்போம் என்பதை அறிந்திலம். ஒருக்கால் பலகாலமின்றி சில வருஷங்களுக்குள்ளேயே நமது காலம் முடிந்து போமாயின், இவைகளைப்பெற்றும் அனுபவிக்கவேண்டிய அவகாசமில்லாமற்போம். ஆதலால் முதலில் எமக்கு இன்னம் ஆயுள் எவ்வளவு என்பதைத் தெரிந்து கொள்வோம். அதன் பின்னர் அவர் கொடுக்கும் இன்பப்பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் விஷயத்தைப் பற்றியோஜிப்போம், எனத்தனக்குள் தீர்மானித்துக்கொண்டு 'ஓ தேவர்கோனே எமக்கு இன்னம் ஆயுள் எவ்வளவு? என்று கேட்டான். அதற்கு இந்திரன் அந்தோ அரசனே உனக்கு இன்னும் மூன்றே முக்கால் நாழிகையளவே ஆயுள்" எனக்கூறினான். அதனைக் கேட்டதும் அவ்வரசன் இவ்வுலகச்சுக மெலாவற்

றையும் ஓர் கணப்பொழுதில் துச்சமாய் வெறுத்துத்தள்ளி பரம வைராக்கியத்தைப் பெற்று அம்மூன்றே முக்கால் நாழிகையளவிலேயே பிறவிப்பிணிநீங்கும் வழியைத்தேடிக்கொண்டான் என, பாகவதம்முதலிய முந்நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றதல்லவா. அங்ஙனமே எவ்வளவோ பல கோடி காலமாய் உலகப்பொருள்களில் பற்றுடன் உழன்றோமாயினும் திடவைராக்கியத்துடன் கூடிய விவேகத்தால் உடனே ஜீவன் முக்தாகும் வழியைத்தேடிக்கொள்ள இயலும்.

மானிட ஜன்மத்தைப்பெற்றும் இவ்விவேகத்தின் வழி செல்லாத சித்தமுடையோரை மிருகம் பறவை முதலியவைகளிலும் இழிவுடையவர்களென்பது உசிதம். ஏனெனின் விவேகமின்மை ஸமமாயினும் அவைகளின் குணம் முதலியவை சிறப்புற்றிருத்தலால் இவனுக்கு அங்ஙனமிராமையால் இவன் பிறவி துச்சமென்பது நிச்சயமே. இவ்வுண்மைபற்றியே மனிதப்பிறவி அரிதென்பதாம்.

முதலாவது உபந்யாஸ ஸங்கிரஹம் முற்றிற்று.

வெள்ளிக்கிழமை மாலை இரண்டாவது உபந்நியாஸம்.

மனவின் நிலைமை.

இன்று மனவின் நிலைமையைப்பற்றிச்சற்றுக் கூறுவாம். நேற்று உபந்நியாஸத்தில், மனிதராய்ப்பிறந்தவர் விவேகத்தைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டியதவசியம் என்பது அறிவுறுத்தப்பட்டது. இனி விவேகத்தைச்சம்பாதிப்பது எங்ஙனமெனின், இந்த ஸ்தூல தேகத்திற்குள்ளிருக்கும் ஜீவாத்மா, அவனது கர்மங்களுக்கேற்பபயனைத் தருவோனும் எங்கு முள்ளவனுமாகிய ஸர்வ வல்லமை பொருந்திய பரமாத்மா, ஜீவாத்மாவினிடமுள்ள பாப புண்ணியங்களாகிய கர்ம பந்தங்கள் ஆகிய இவை முதலிய பொருள்களை நன்றாய் விசாரித்து சந்தேக மறத்தெரிந்து கொள்ளுவதே அதற்குபாயம் என்பதறிக. இனி ஜீவாத்மா முதலிய பொருள்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அவ்வான்மாவோடு ஒன்று பட்டுள்ளதாய்க்காணப்படும் மனவின் நிலைமையையே முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

மனஸ்ஸு என்பது மிகவும் நுட்பமான சக்தி போன்ற ஓர் அருமையாகிய பொருள். அது இந்த ஸ்தூல தேகத்தின் ஹ்ருதய கமலம் என்னும் இடத்தையே இருப்பிடமாய்க் கொண்டது. அது ஜாக்ரம் ஸொப்னம் முதலிய அவஸ்தைகளை பெறுகின்றது. விருப்பம் வெறுப்பு சந்தேகம் நிச்சயம் முதலிய சகலமும் மனத்தின் செய்கையே. அது ஸ்தூலமாகிய கருவி கரணங்களால் காணமுடியாதது ற்றி ஸூக்ஷ்மம் என்பதாம்.

சங்கை, இனி ஸ்தூல தேகத்தின் ஓர் பாகமாகிய மூளையே மனவின் ஸ்தானமென்று மேற்குத்திசைப் படிப்பினர் நிச்சயித்திருக்கின்றனரே! மனஸு கெட்டுத் தாறுமாறாய்ச்சிந்திப்போருக்கு மூளை கெட்டிருத்தலும் பிரத்தியக்ஷமாய்க் காணக்கூடியதே. இப்படியிருக்க ஹ்ருதய கமலம் மனவின் ஸ்தானமென்பது எப்படிப்பொருந்தும் என்பதாம்.

இப்படிச்சங்கிப்பது உசிதமன்று. அதாவது உலகில் நடைபெறும் ஸகல செய்கைகளுக்கும் ஸ்தானங்கள் வேறு. அவைகளிலும் அச்செய்கைகள் இல்லாமல் ஓய்ந்திருக்கும் பொழுதுள்ள ஸ்தானங்கள் வேறு. உதாரணமாக, உழுது பயிரிடுதல் என்பது ஓர் கிரியை. அது நிகழும் ஸ்தானம் வயல். அந்தக்கிரியையைச் செய்வோனுடைய இருப்பிடம் அதாவது வேலை செய்யாதிருக்குமிடம் அவனது வீடு. இதனால் கிரியாஸ்தானத்திலும் கிரியையைச்செய்வோன் தனது கிரியையை விட்டிருக்கும் போதுள்ள நிஜஸ்தானம் வேறென்று சொல்லப்பட்டது. அக்நியின் கிரியையாகிய தகித்தல் பிரகாசித்தல் முதலியது கட்டைக்கு வெளியிலும், அதனிருப்பிடம் சட்டையிலும் காற்றிலுமே யுள்ளது. மாடு குதிரை முதலியவைகளின் கிரியையாகிய வண்டியிழுத்தல் முதலியதின் ஸ்தானம் சாலை வீதி முதலியனவும், அவைகளின் நிஜஸ்தானம் தொழுவம் லாயம் முதலியனவுமே. நியாயாதிபதியின் கிரியையாகிய வழக்குவிசாரித்தலின் ஸ்தானம் (கோர்ட்டு) கச்சேரியும், அவரது நிஜஸ்தானம் வீடுமாயுள்ளது. இவ்விதம் உலகில் நடைபெறும் சேதனத்தின் கிரியையோ அல்லது அசேதனத்தின் கிரியையோ இவ்விருவகைக்கிரியையினில் எதனைக்கவனித்தாலும் கிரியாஸ்தானத்திலும் நிஜஸ்தானம் வேறு எனும் நியமம் சிறிதும் மாறாமல் காணப்படுகின்றது. ஆதலின் இந்த நிர்ணயத்தை மறுக்க நியாயஞ் சிறிதுமில்லை.

மனம் வேலை செய்யுமிடமாகிய கிரியாஸ்தானம் மூளை யென்பதை யாமும் ஒத்துக்கொள்ளுகின்றோம். அது கிரியையின்றி இருக்குமிடமாகிய நிஜஸ்தானமென்பது யாது? எனின் அதற்கு மேற்குத்திசைப்படிப்பினர் யாது சொல்லத்தகும்! இனி அதுவும் மூளை யெனுமிடமே என்பார்களாயின், பூர்வம் நிர்ணயித்தபடி கிரியாஸ்தானத்திலும் நிஜஸ்தானம் வேறு எனும் நியமத்திற்கு விரோதமாகும். ஆதலால் மனம் வேலையில்லாதிருக்கும் போது அடங்கி இருக்குமிடம் மூளைக்கு அந்நியமே என்று நிச்சயித்துக்கொள்ள வேண்டியதாகின்றது. ஆனால் அதனை அறிந்தவர் நம்மவரே. ஆதலால் நம் சாஸ்திரங்களில் அவ்வுண்மை விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது.

அதாவது இச்சரீரத்தில் முக்கியமாயுள்ள இடம் மூளை, சிறுமூளையெனும் கண்டம், ஹ்ருதயகமலம் எனும் மூன்றேயாம். விழித்துக்கொண்டிருத்தலாகிய ஜாக்கிரத் எனும் நிலைமையில் மனம் மூளையினில் நின்று வேலை செய்கின்றது. ஸ்வப்நமாகிய தாறுமாறாய்ச் சிந்திக்கும் நிலைமையில் (Cerebellum) சிறுமூளையில் நின்று உழலுகின்றது. எந்தச் சிந்தனையுமின்றி ஓய்ந்து இருத்தலாகிய ஸுஷுப்தி அவஸ்தையில் ஹ்ருதய கமலத்திலேயே அடங்கி இருக்

கின்றது. உலகிலுள்ள ஸகல பொருள்களுக்கும் ஸ்தூலம், ஸூக்ஷ்மம் என இரண்டு நிலைமையுள்ளது. சப்தானுகரண யந்திரத்தின் (Phonograph) உருளையில் அடங்கியிருக்கும் கீதநாதமானது ஸூக்ஷ்ம ரூபமும், அது பிறர்காதுக்கு எட்டும் நாத நிலைமையில் ஸ்தூலரூபமும் உடையதென்பதறிக. இவ்வாறு மனஸுக்கும் ஸ்தூலம், ஸூக்ஷ்மம் என இரண்டு நிலைமைகளுமிருக்கவேண்டுமன்றோ. இவைகளுள் ஸ்தூல நிலைமை ஜாக்கிரமும் ஸ்வப்நமுமே. ஸூக்ஷ்ம நிலைமையே எச்சிந்தனையுமின்றி சும்மா விருத்தலாகிய ஸுஷுப்தி என்பதாம்.

மேற்குத் திசையோர் உலகிலுள்ள ஸ்தூலப் பொருள்களையே இதுவரையிலும் பரிசோதித்து வாதலின் அவர்களுக்கு அப்பரிசோதனையும் ஜாக்கிரத் எனும் நிலைமையிலேயே நடைபெறுவது பற்றி, அவர்கள் ஜாக்கிரத் எனும் ஓர் அவஸ்தையைப்பற்றி மாத்திரம் பரிசோதிக்க வேண்டியதவசியமா யிருந்தது. ஆகையால் அவர்கள் அப்படி பரிசோதித்தவரையில் மூளை மனஸ்தானம் என்று அறியவேண்டியதாய் நிகழ்ந்தது. நம்மவர்களுக்கோ எனின்,

"ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்திஷு ஸ்புடதரம் யோ(அ)ஸௌ ஸமுஜ்ஜ்ரும்பதே ப்ரத்யக்ரூபதயா ஸதாஹமஹமித்யந்த: ஸ்புரந்நைகதா ॥

> "ஜாக்ரம், ஸ்வப்நம், ஸுஷுப்தி எனும் மூன்று அவஸ்தைகளிலும் யாதொரு பொருள் ஸாக்ஷியாய் எப்போதும் நான் நான் என ஒரேவகையாய் விளங்குகின்றதோ."

என்பது முதலிய ஆன்றோர் உபதேச மொழிகளில் உள்ளவாறு, மூன்று அவஸ்தைகளுக்கும் ஸாக்ஷியாய் எப்போதும் ஓரேவிதமாயுள்ள ஆன்ம வஸ்துவை அறிந்தே ஜன்மம் ஸபலமாக வேண்டுமென்பது கொண்டு, அவ்வாறு விசாரித்தறியும்போது அவஸ்தைகள் மூன்றையும் பற்றி நன்றாய்த் தெரிந்துக் கொள்ளவேண்டி யிருந்தமையால், மனவின் ஸ்தானங்களைப் பற்றிய உண்மை நன்கு அறியப்பட்டு வருகின்றது. இதனை

அத யதிதமஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேஶ்ம தஹரோ(அ)ஸ்மிந்நந்தராகாஶ: தஸ்மிந்யதந்த: ததந்வேஷ்டவ்யம் ॥

(சாந்தோக்யோபநிஷதம்.)

(எட்டாம் ப்ரபாடகம்.)

> "இனி இந்த பிரும்ஹபுரமாகிய தேகத்தினில் தெகரம் எனப்படும் கமலமாகிய வீடு உள்ளது. இதற்குள் இருக்கும் ஆகாயத்தினில் யாதொன்றுளதோ அதனைத் தேடத்தக்கது."

"நேத்ரஸ்தம் ஜாகரிதம் வித்யாத் கண்டே ஸ்வப்நம் ஸமாவிஶேத் ஸுஷுப்தம் ஹ்ருதயஸ்தம் து"

(பிரும்மோபநிஷதம்.)

நேத்திரம் முதலியவைகளுடன் கூடி சிரஸில் ஜாக்ரத்தி லிருப்பது. ஸ்வப்நத்தில் கண்டத்தை யடையும். ஸுஷுப்தியில் ஹிருதயத்திலிருக்கும்

என்பது முதலிய சுருதிகளாலும்

தத³பா⁴வோ நாடீஷு தச்ச்ருதேராத்மநி ச ।

எனும் பிரும்மசூத்திரத்தாலும்.

நாப்யா ஊர்த்வமத: கண்டாத் வ்யாப்ய திஷ்டதி யத் ஸ்திதம்
தஸ்ய மத்யே ஸ்திதம் ஹ்ருதயம் ஸநாலம் பத்மகோஶவத் ॥
அதோமுகம் ச தத்ராபி ஸூக்ஷ்மம் ஸுஷிரமுத்தமம்
தஹராகாஶமித்யுக்தம் தத்ர ஜீவோ(அ)வதிஷ்டதி ॥

நாபிக்குமேல் கண்டத்திற்குக்கீழ் அகண்டு யாதொன்றுளதோ, அம்மார்பின்னடுவில் தாமரை மொக்குப்போல் காம்போடுகூடியதும் கீழ்முகம் நோக்கியதுமாய் ஹிருதயமிருக்கின்றது. அதில் மிக்க நுட்பமாகிய இடை வெளியுள்ளது. அது தகராகாசமெனப்படும். அங்கு ஜீவனிருக்கின்றான்

எனும் சிவகீதா வாக்கியத்தாலும்.

மநோ தஶேந்த்ரியாத்யக்ஷம் ஹ்ருத்பத்மகோலகே ஸ்திதம் ।
நேத்ரே ஜாகரணம் கண்டே ஸ்வப்ந: ஸுப்திர்ஹ்ருதம்புஜே ॥

மனம் பத்து இந்திரியங்களுக்கு அதிபனாக ஹிருதய கமலத்திலிருக்கின்றது. சிரஸ்ஸில் ஜாக்ரமும், கண்டத்தில் ஸ்வப்நமும், ஹிருதயகமலத்தில் ஸுஷுப்தியுமாம்

எனும் வித்யாரண்ணியர் முதலிய ஆன்றோர்களது வாக்கியத்தாலும் நிச்சயித்துக்கொள்ளத்தக்கது. சரீரத்தில் மூளை ஹிருதயம் எனும் இரண்டு இடங்களுள், மூளைக்குக் கேடுவரின் பைத்தியம் முதலிய வியாதிகளோடு ஜீவித்திருத்தலையும், ஹிருதய கமலத்திற்குக் கேடுவரின் மரணமே வருதலையும் கவனித்தால், மூளையினும் ஹிருதயகமலமே முக்கியமான இடமென்பதாக ஊகிக்கக்கூடியது. அன்றியும் விழித்துக்கொண்டிருக்குங்காலத்தில் தலை நேராக நிற்பதையும், தூங்குங்காலத்தில் மாத்திரம் அவ்விதமிராமற் போவதையும் கவனித்தாலும் தூங்குஞ்சமயத்தில் மனம் சிரஸ்ஸைவிட்டு இறங்கி எங்கேயோ அடங்கிப்போகின்றதென்பதும் அறியக்கூடியது. திடீரென யாதானும் விபத்து நேரிடின் ஒன்றுந் தோன்றாமல் மனந்திகைத்து மார்பு படபடவெனத் துடிக்கக் காண்கின்றோமன்றோ; இதைக் கவனித்தாலும் தெருவில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவன், யாதானும் பயம் நேரிட்டால் உடனே ஓடித் தனது

வீட்டிற்குள் புகுந்துகொள்வதுபோல மனம் சிரஸ்ஸைவிட்டுச் சுடிதியில் தன தில்லமாகிய ஹிருதயத்தை யடைகின்றது. ஆனதுபற்றியே ஒன்றுந்தோன்றாமல் ஹிருதயந்துடிப்பதென நிச்சயிக்கக்கூடியதே.

இங்ஙனம் சுருதி, யுக்தி, அனுபவங்களால் மனத்தின் ஸ்தானம் ஹிருதய கமலமே என்பதும், வேலை செய்யுமிடம் மூளையும் சிறுமூளையு மென்பதும் நம் முன்னோர்களால் பலகாலமாய் நிச்சயிக்கப்பட்டிருக்கும் விஷயத்தில் சிறிதுஞ் சங்கைக்கு இடமில்லை. என்பது நிர்ணயம்.

இரண்டாம் உபந்நியாஸ ஸங்கிரஹம் முற்றிற்று.

சனிக்கிழமை மூன்றாவது உபந்நியாஸம்.

ஸ்தூல சரீரம் நழுவியதும் ஜீவனுடைய கதி.

இந்தஸ்தூல தேகம் நழுவிய பின் இதற்குள்ளிருக்கும் ஜீவாத்மா எவ்வாறாகின்றானென்பதைச் சற்றுவிசாரிப்போம். இந்த ஸ்தூலம் இங்கு தீயிலோ நீரிலோ மண்ணிலோ அழிந்து போகின்றது பிரத்யக்ஷம். இதனிலிருக்கும் ஜீவனின் கதியைப்பற்றி பிரத்தியக்ஷமாய்த் தெரிந்துகொள்ள இயலாமையால் சாஸ்திரங்களைக் கொண்டே அதனைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஸ்தூலம் இங்கு நழுவிய பின் அதனிலிருக்கும் ஜீவாத்மா தனது பாப புண்ணிய கர்மங்களுக்கேற்றவாறு நரகத்தையோ அல்லது ஸ்வர்க்கத்தையோ அல்லது மற்றெவ்வுலகத்தையோ அடைந்து அங்கு கர்மபலத்தைப்புஜித்து மீண்டும் இங்குவந்து சேருகின்றான் என்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றது.

சங்கை, இந்தஸ்தூலத்தைத்தவிர ஜீவாத்மா எனும்பொருள் இருக்கின்றது என்பது முதலில் ஸித்தித்தால், அதன் பிறகு ஜீவாத்மா எக்கதியாகின்றானென்னும் கேள்விக்கிடமாகும். ஸ்தூல தேஹத்தைத்தவிர ஜீமாத்மா என ஓர் பொருள் தனியாயில்லவே யில்லை என்று ஏன் கொள்ளக்கூடாது? என்பதாம்.

இது விசாரியாமல் செய்யும் சங்கையேயாம். அதாவது உலகிலுள்ள ஸகல மனிதருக்கும் உள்ளத்தில் விருப்பம் வெறுப்பு ஊஹம் நிச்சயம் முதலிய சிந்தனஸ்வரூபமான அறிவுத்தொழில் நடக்கின்றதே! அப்படிப்பட்ட வேலையைச் செய்துகொண்டிருக்கும் அறிவானது ஸ்தூலதேஹத்திலும் வேறு என்பதை ஒத்துக்கொள்ளாவிடில் ஸ்தூல தேஹத்தின் குணமென்றேசொல்ல வேண்டியதைத்தவிர வேறில்லையே! அப்படியாயின் அது இயற்கை குணமா? சேர்க்கை குணமா? இயற்கை குணமெனின் ஸ்வபாவகுணமென்பது பொருள். சேர்க்கை குணமென்பது யாதானும் ஓர் நிமித்தத்தினால் நிகழும் தன்மை என்பதாம். உதாரணமாக, சர்க்கரைக்குத் தித்திப்பு ஸ்வபாவகுணம். பானகத்தில் தித்திப்பு சர்க்கரையின் சேர்க்கையெனும் நிமித்தத்தினால் வந்ததாதலின் சேர்க்கைகுணம்

என்பதாம். இனி அறிவு ஸ்தூல தேஹத்திற்கு ஸ்வபாவகுணமே எனின் அது சிறிதும் பொருந்துவதல்ல. ஏனெனின் ஸ்வபாவம் நீங்கிஸ்வரூபம் தனித்திராது தித்திப்பு நீங்க ச்சர்க்கரை மாத்திரம் தனித்துளதென்பது பொருந்துவதில்லையன்றோ! அவ்வாறு கவனிப்போமாயின் இந்த ஸ்தூல தேஹமிருக்க அறிவு மாத்திரமிராமற் போவதற்கு நியாயமில்லாமற் போகின்றது. இறந்த சரீரமாகிய சவம் என்பது ஸ்தூல சரீரமே அல்லவா. அங்ஙனம் அது இருந்தும் அதற்கு அறிவு சிறிதுமிராமல் போகின்றதே! ஆதலால் சர்க்கரைக்குத்தித்திப்பு போல ஸ்தூலத்திற்கு அறிவு ஸ்வாபவகுண மென்பது சிறிதும் பொருந்தாது.

இனி ஸ்தூல தேஹத்திற்கு அறிவு, நிமித்தத்தினால் வந்த குணமென்று சொல்லுவோமே எனின், நல்லது! அங்ஙனமாயின் அது எந்த நிமித்தத்தினால் வந்ததென்பதைக்கவனிப்போம். பானகத்திற்கு த்திப்புப்பொருளாகிய சர்க்கரை முதலியவைகளின் சேர்க்கையின் நிமித்தத்தாலேயே தித்திப்பு குணமிருப்பது போல, ஸ்தூல தேஹத்திற்கு யாதேனும் ஓர் அறிவுப் பொருளின் சேர்க்கை யெனும் நிமித்தத்தினாலேயே அறிவு குணம் ஏற்பட்டிருக்கின்றதென்றே சொல்ல வேண்டியதாகின்றது! அங்ஙனமாயின் அறிவுப்பொருளை ஸ்தூல தேஹத்திற்கு அந்நிய மென்றே ஒத்துக்கொண்டதாகின்றது. அதாவது ஸ்தூலதேஹத்திலும் அந்நியமாயுள்ளதாகிய அறிவுவஸ்துவின் சேர்க்கையாலேயே விருப்பம் வெறுப்பு நிச்சயம் முதலிய அறிவின்வியவஹாரங்கள் நடைபெறுகின்றன வென்றும், அது ஸ்தூலத்தை விட்டுப் பிரிந்தமையாலேயே சவத்திற்கு அறிவு காணப்படுகின்றதில்லை என்றும் ஏற்படுகின்றது. அப்படியாயின் பிரிந்ததும் அந்த அறிவு எங்கு செல்லுகின்றதென்பதை விசாரிக்கவேண்டும். இங்ஙனம் யுக்தியையே கொண்டு விசாரிக்கினும் ஸ்தூல சரீரத்திலும் அறிவு அந்நியமே என்பதையும் ஸ்தூலம் அழிந்து போயினும் அது எங்கேயோ போகின்றதென்பதையும் அவசியம் ஒத்துக்கொள்ள வேண்டியதேயாகின்றது.

இனி ஸ்தூல சரீரமென்று பொதுவாகச் சொல்லப்படினும் அது, தோல் சதை நரம்பு ரத்தம் மாம்ஸம் எலும்பு முதலிய பதார்த்தங்களின் சேர்க்கையாயிருப்பதுபோல இந்த ஸ்தூல தேகத்திற்குள்ளிருக்கும் ஸூக்ஷ்ம சரீரத்தைக் கவனித்தால் அதனில் இந்திரியம் பிராணன் முதலிய பல பொருள்கள் அடங்கியிருக்கின்றன வென்பது அறிக. இந்திரியமாவது கர்மேந்திரியம் ஞானேந்திரியம் என இருவகையாம். கர்மேந்திரியம் வாக்கு, பாணி, பாதம், குஹ்யம், குதம் என ஐந்து. அவை நாக்கு, கை, கால் ஆண்பெண் குறி, அபானத்வாரம் எனும் இவ்வைந்திடங்களில் முறையே நின்று பேச்சு, கிரகித்தல், போதல், ஆநந்தித்தல், விடுதல் எனும் தத்தம் தொழிலைச் செய்கின்றன. ஞானேந்திரியங்களாவன சக்ஷுஸ், சுரோத்திரம், ஜிஹ்வா, கிராணம், த்வக் என ஐந்துள்ளன. அவை முறையே கண், காது, நாக்கு, மூக்கு தோல் எனும் இவ்வைந்து அவயவங்களில் நின்று பார்த்தல், கேட்டல், ருசித்தல், முகர்தல், ஸ்பரிசித்தல் எனும் ஐவகையான அறிவுக்கு ஹேதுவாகின்றன.

இனி பிராணன் எனப் பொதுவாகச் சொல்லப்படினும் அது பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன் எனும் ஐந்து வகையாகும். அப்படி ஐந்து விதமாவதற்குக் காரணம் மார்பு, வயிற்றின் கீழ்ப்பக்கம் முதலிய இடங்களின் வேற்றுமையும், மேல்முகம் நோக்குதல் கீழ்முகம் நோக்குதல் முதலிய தொழில் வேற்றுமையுமே என்பதாம். இனி மனமென்பது சங்கல்ப விகல்பங்களாக மாறுதலும் நிச்சயித்தலுமாகிய இருவகையான விருத்தியால் மனம் புத்தி என இரண்டு விதமாகும் என்பது மறிக. இங்ஙனம் கூறிய கர்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, பிராணபேதம் ஐந்து, மனம், புத்தி, ஆக இப் பதினேழின் சேர்க்கையே சூக்ஷுமசரீரம் என்றறியத்தக்கது.

இந்த ஸூக்ஷ்ம சரீரத்தினைச் சேர்ந்த பதினேழும், தனது ஆஸநத்திலிருந்து வழக்கு விசாரிக்கும் நியாயாதிபதிபோல், ஸ்தூல சரீரத்தின் அவயவங்களிலிருந்துகொண்டு தத்தம் வேலையைச் செய்கின்றன. இனி ஸ்தூல சரீரத்தின் அவயவங்களைத் தவிர ஸூக்ஷ்ம சரீரமென ஒன்றை ஒத்துக்கொள்ளாவிடின் குற்றம் யாது? பிரத்தியக்ஷமாய்க்காணப்படுவனவாகிய கண் காது முதலிய அவயவங்களைத் தவிர இந்திரியம் முதலியவைகள் வேறாகவில்லை என்போமே? எனின் இது அவிவேகமேயாம். ஸ்தூல சரீர அவயவங்களைத் தவிர இந்திரியாதிகள் வேறல்லவெனின், ஸ்தூல சரீர அவயவங்களிருக்கும் போதெல்லாம் பார்த்தல்கேட்டல் முதலிய இந்திரிய வியாபாரங்கள் நடைபெறவேண்டுமன்றோ. கண் காது முதலிய அவயவங்களிருந்தும், ஸ்வப்நம, தூக்கம், மூர்ச்சை முதலிய காலங்களில் பார்த்தல் கேட்டல் முதலியன நிகழாமையால் இந்த அவயவகோளங்களிலும் இந்திரியங்களென்பவை வேறு என நிச்சயிக்கப்படுகின்றது.

இங்ஙனம், இந்திரியப் பிராணமனங்களின் சேர்க்கையில் அடங்கிய முற்கூறிய பதினேழு தத்வங்களும் ஸூக்ஷ்ம சரீரமென்பதை

> ஜ்ஞாநகர்மேந்த்ரியப்ராண பஞ்சகைர்மநஸாதியா
> ஶரீரம் ஸப்ததஶபி: ஸூக்ஷ்மம் தல்லிங்கமுச்யதே ||
>
> ஞான, கர்மேந்திரிய, பிராணன்களின் ஐந்துகளும் மனம், புத்திகளும் சேர்ந்த இப்பதினேழும் ஸூக்ஷ்ம சரீரமென்றும் லிங்கசரீரமென்றுஞ் சொல்லப்படும்

எனும் ஆன்றோர் வாக்கியத்தாலறிக.

ஜீர்ணமாகிய வீட்டைவிட்டு மனிதன் வேறு வீட்டிற்குப் போவது போல, கர்ம பலத்தின் போகத்தால் ஜீர்ணமான இந்த ஸ்தூலத்தைவிட்டு ஜீவன் வேறு ஸ்தூலத்தைப்பற்றிக்கொண்டு, லோகாந்தரத்தில் இன்ப துன்ப மனுபவிக்கச் செல்லுகின்றான். வேறு வீட்டிற்குக் குடிப்போகும் மனிதன் பழய வீட்டிலிருந்த ஆடையாபரணம் பாத்திரம் பண்டம் முதலிய தனது பொருள்களை மூட்டைகட்டிச் சித்தஞ்செய்து கொள்ளும் கிரியை முதலிலும், பிறகு அவைகளை எடுத்துக்கொண்டு புதிய வீட்டிற்குச் செல்லுதல் ஒன்றும், இங்ஙனம் இருவகைக்கிரியை நடை பெறுவதுபோல, இந்த ஸ்தூலத்தைவிட்டு லோகாந்தரஞ்

செல்லும்போது ஜீவாத்மா, தனக்குச் சொந்தமாகிய இந்திரியப் பிராணமனங்களை முறையே இந்த ஸ்தூலத்தின் ஓரிடத்தில் ஆகர்ஷித்து ஒருங்கு சேர்த்துக்கொள்ளுதலெனும் கிரியை முந்தியும், பிறகு அதனைவிட்டுப் புறப்பட்டு வெளிப்படுதல் மற்றொன்றுமாக இருவகையான கிரியை நடைபெறுகின்றது. இந்திரியாதிகளை ஒருங்கு சேர்த்துக்கொள்ளுதல் மரணவஸ்தையென்றும், பின்னர் ஸ்தூலத்தைவிட்டுப் புறப்படுதல் உத்கிராந்தி அவஸ்தையென்றும் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

மரணவஸ்தை காலத்தில் கை, கால், கண், காது முதலிய அவயவங்களில் இருந்து வேலைசெய்து கொண்டிருந்த கர்மேந்திரிய ஞானேந்திரியங்களை முதலில், ஜீவஸ்தானமென முந்தின உபந்நியாஸத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஹிருதய கமலமெனுமிடத்தில் ஆகர்ஷித்துக்கொண்டு, பிறகு மனம் பிராணன் இவைகளையும் ஹிருதயத்தில் இழுத்துக்கொள்ளலாகிய மரணவஸ்தைகாலத்தில் ஜீவர்கள் படும்துன்பத்தை எவ்வாறுஞ் சொல்லவியலாது. உலகில் மரிக்கும் ஸகல ஜீவர்களும் இப்படிப்பட்ட மரணவஸ்தையை முதலிலடைந்து பிறகே உத்கிராந்தி அவஸ்தையை அடையவேண்டும். இந்த மரணவஸ்தையின் முறையே

வாங்மனஸி தர்ஶனாச்சப்தாச்ச	4—2—1
அத ஏவ ச ஸர்வாண்யநு	4—2—2
தந்மந꞉ ப்ராண உத்தராத்	4—2—3
ஸோऽத்யக்ஷே ததுபகமாதிப்ய꞉	4—2—4
பூதேஷு தச்ச்ருதே꞉	4—2—5

என்பது முதலிய பிரும்ம ஸூத்ரங்களால் சாந்தோக்கிய முதலிய சுருதி வாக்கியங்களை விஷயமாக வெடுத்துக்காட்டி நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

மன꞉ஷஷ்டானீந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தானி கர்ஷதி । ஶரீ।
ரம்யதவாப்நோதி

என்பது முதலிய பகவத் கீதாதி வாக்கியங்களாலும் இம்மரணவஸ்தை சொல்லப்பட்டிருக்கின்றது.

இனி ஜீவன் ஸ்தூலத்தைவிட்டு ஸூக்ஷ்ம சரீர அவயவங்களைச் சேர்த்துக்கொண்டு வெளிப்படும்போது எந்த அவயவத்தின் வழியாக வெளிப்படுகிறான்? எனின் கண், மூக்கு, காது முதலிய துவாரங்களின் வழியாய் ஸாமாந்நிய புண்ணியவான்களும், உபாஸகர் யோகீ முதலியவர் ஹிருதயத்தினின்றும் நாடி வழியாய்த் தலையைப்பேதித்துக் கொண்டும், பாபிகள் வாய், அபாநத்வாரம், நாபி, முதலியவைகளின் வழியாகவும் செல்லுவார் என்பதறியத்தக்கது.

இனி இவ்வாறு வெளிப்பட்டு ஜீவர் எங்கு செல்லுகிறார்களெனின் பாபிகள் நரகலோகங்களுக்கும் புண்ணியவான்கள் / ஸ்வர்க்கத்திற்கும், உபாஸகர் யோகி முதலியவர் ஸத்தியமெனும் பிரும்மலோகத்திற்கும் செல்லுவார். இனி ஸ்வர்க்கம் நரகமென வேறுலோகம் உள்ளதென்பது வித்தித்தாலன்றோ பிறகு

M/5 OFFICE OF THE REGISTRAR 4-MAR 1916

அங்கு போகின்றார்களென்பதை ஒத்துக்கொள்ளவியலும் இவ்வுலகத்தைத் தவிர வேறுலோகம் இல்லவேயில்லை எனக்கொள்ளலாமே! ஸ்வர்க்கம் நரகமென வேறு லோகமிருக்கின்றதெனின் அது ஒருவராலும் காணப்படவில்லையே! யுக்திக்கும் இது பொருந்தவில்லை. உலகநிலமையை நன்குபரிசோதித்த மேற்குத்திசையோர் ஆசியா முதலிய ஐந்து கண்டங்களுக் கந்நியமாய் வேறு இடம் ஜீவர்கள் வசிக்கத்தக்கதாய் உள்ளதெனச் சொல்லக்காணோம். அப்படியிருக்க நீங்கள் சொல்லுவதை எப்படி நம்புவது? எனின் அவ்வுண்மையைச் சற்று நிரூபிப்போம்.

ஆகாயத்தில் ஸூரிய சந்திராதி கிருக நக்ஷத்திரங்கள் காணப்படுகின்றனவே! இவை தீப்பொறிகள்போல காணப்படுகின்றனவன்றோ! அவை தீப்பொறிகளேயா? அல்லது பஞ்சபூதங்களாலாகிய உலகங்களா? என்பதைப்பற்றிச் சற்று விசாரிப்போம். இனி சூரியன், முதலியவை எரியுந்தீச்சுவாலையைத் தவிர வேறல்ல எனின் அது பொருந்தாது. நெருப்புச்சுவாலை யிருக்குமிடம் (oxygen, carbon) ஆக்ஸிஜன், கார்பன் எனும் இருவகைப்பொருள்களின்றி அதாவது ஓர்வகைக்காற்றும் கரிச்சக்தியுமின்றி சுவாலை எற்படாது என்பது தற்காலம் எவரும் அறிந்தவிஷயம். அன்றியும் சுவாலையானது யாதானும் ஓர் பொருளை ஆச்ரயித்தே (பற்றியே) இருப்பதன்றி நிராதாரமாயிருப்பதல்ல. சூரியமண்டலமானது தீச்சுவாலை மாத்திரமே யெனின் அதற்கு ஆதாரமாகிய பொருள் உள்ளதென்பதை அங்கீகரித்தே தீரவேண்டும். இனி அக்நிக்கு ஆதாரமாக உள்ள வஸ்து வாயுமாத்திரமாவது ஜலமாத்திரமாவது என்பதும் பொருந்தாது. வாயு முதலியவைகளின் மாத்திரத்தால் ஜ்வாலை காணப்படுகின்றதே எனின் அவ்வாயுவுக்கு ஆதாரமாய்பிருதிவி ஜலம் முதலியவைகளின் இனத்தைச் சேர்ந்ததாகிய யாதானும் ஒரு வஸ்து இருக்கவேண்டு மென்பது நிச்சயம். வாயுவின்றி கேவலம்பிருதிவி மாத்திரத்தில் அக்நியிராது. ஆதலால் ஜ்வாலையாகக் காணப்படும் ஆதித்திய மண்டலத்தில் வாயு பிருதிவி எனும் இரண்டு வகை பூதங்களு மிருக்கவேண்டுமென்று ஏற்படுகின்றது. இம்மூன்று பொருள்களு மிருக்குமாயின் இவைகளுக்கு இடந்தருவதாகிய ஆகாசமுமிருக்கவேண்டுமென்றே ஏற்படுகின்றது. இங்ஙனம் நான்கு பூதங்களுமிருக்கும்போது ஜலமுமிருக்கலாம். என ஒத்துக்கொள்வதும் உசிதம். இவ்விதம் சூரியனை யாதென விசாரிக்க அது பிருதிவியாதி பஞ்சபூதங்களாலேயே அமைந்த ஓர் மண்டலமென்பது ஸரியான யுக்தியினுலேயேநிர்ணயிக்கப்படுகின்றது. இவ்வுண்மையானது ஸநாதனமாகிய வேதத்தாலும் போதிக்கப்படுகின்றது.

அதாவது

11446

"ஆதித்யஸ்ய யச்சுக்லம் ததபாம் யத்க்ருஷ்ணம் தத்அந்நஸ்ய யல்லோஹிதம் தத்தேஜஸ:"

"ஆதித்யநிடம் வெளுப்பாயுள்ளது ஜலத்தினது. கருப்பாயுள்ளது பிருதிவியினது. சிவப்பு அக்நியினது."

என்பது முதலிய சாந்தோக்கியாதி உபநிஷவாக்கியங்களால் இதனை அறிக.

இவ்வாருயினும் ஆதித்தனிடம் அக்கினியம்சமே மிகுதியாகவும் பிருதிவி முதலிய ஏனைய பூதாம்சங்கள் ஸ்வல்ப்பங்களாகவும் அமைந்துள்ளன. ஆதித்தமண்டலத்தில் அக்கினியம்சம் மிகுதியாயமைந்துள்ளதுபோல, சந்திரமண்டலத்தில் சீதளக்கிரணம் காணப்படுகின்றமையால் அம்மண்டலம் ஜலாம்சமே மிகுதியாகவும் பிருதிவி முதலிய மற்ற பூதாம்சங்கள் ஸ்வல்பவங்களாகவும் அமைந்துள்ளது என்பதும் நிச்சயிக்கத்தக்கது. மனிதர் முதலியவர் ஜலத்திற்குள் ஜீவிக்க இயலாவிடினும் ஜலாம்சமே மிகுதியாயமைந்துள்ள தேஹத்தைப்பெற்றனவாகிய மின் முதலிய ஜலீய சரீரமுடைய ஜீவர்கள் ஜலத்திலேயே ஜீவிப்பதுபோல சூரியன் சந்திரன் முதலிய மண்டலங்களினது பூதாம்சங்களின் நிலமைக்குத் தக்கபடி அந்தந்த பூதாம்சங்கள் விசேஷமாயமையப் பெற்ற சரீரமுடைய ஜீவர்கள் அவ்விடங்களிலும் ஜீவிக்கலாம் என்றே அறியப்படுகின்றது. ஆதித்யன் சந்திரன் எனும் இவ்விரண்டையும் விசாரித்தவளவில் அவை ஐம்பூதாம்சங்களமைந்த உலகம் என்று நிச்சயிக்கப்படுவதுபோல, மற்றுமுள்ள அங்காரகன் புதன் பிருஹஸ்பதி சுக்கிரன் சனி மற்றுமுள்ள நக்ஷத்திரங்கள் இவையெல்லாம் நன்கு விசாரிக்கப்படின் ஐம்பூதாம்சங்களால் அமைந்த உலகங்களெனவே நிர்ணயிக்கப்படும். இப்பூவுலகிலுள்ள தேஹம் அங்கு ஜீவிக்கத்தகாவிடினும் அங்கங்குள்ள பூதாம்சங்களின் நிலமைக்குத்தக்கபடி சரீரமமைந்துள்ள ஜீவர் அங்கங்கு ஜீவிக்க இயலும்.

இவைகளுள் சூரியன் சந்திரன் புதன் ப்ருஹஸ்பதி முதலிய மண்டலங்களே ஸ்வர்க்கலோகங்களென்றும் சனி முதலிய மண்டலங்களே நரகங்களென்று மறிக. ஆதித்த சந்திராதி மண்டலங்கள் இங்கிருந்து புண்ணியம் செய்தவர்களால் அடையப்படுவனவாகிய புண்ணிய உலகங்கள் என்பதை

उत्क्रम्य गच्छतो [illegible] येषु स्थानेष्ववस्थि-
ताः। कीर्त्यमानानि तानीह तत्त्वतस्तन्निबोध मे। त-
च्छ्रुत्वा नैष्ठिकीं बुद्धिं बुद्ध्येथाः कर्मनिश्चयम्॥

ஜீவர் மேனோக்கிச் சென்று எந்தஸ்தானங்களில் நிலைபெறுகின்றனரோ அவைகளை உள்ளபடி கூறுகின்றேன் என்னிடம் தெரிந்து கொள்வாயாக. அதனைக் கேட்டு க்கருமநிச்சயத்தையும் திடமாகிய புத்தியையும் பெறுவாய்

तारारूपाणि लक्ष्यन्ते यच्चैतच्चन्द्रमण्डल-
म्। यच्च विभ्राजते लोके स्वभासा सूर्यमण्डलम्॥
स्थानान्येतानि जानीहि जनानां पुण्यकर्मणाम्॥

"ஆகாயத்தினில் நக்ஷத்திர மண்டலங்கள் காணப்படுகின்றனவன்றோ அங்கு சந்திரமண்டலமும் தனது காந்தியால் சூரிய மண்டலமும் காணப்படுகின்றன. அவை இங்கு புண்ணிய செய்தவர்களான ஜனங்கள் சென்று வஸிக்குமிடங்கள் என்பதறிக"

என ஸ்ரீமஹாபாரத அநுகீதாதிகளில் நன்குபதேசிக்கப் பட்டிருக்கின்றது. அன்றியும் யஜுர்வேத சிகை

𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌮𑍇𑌵 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌂 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿। 𑌪𑌿𑌤𑍄𑌣𑌾𑌮𑍇𑌵 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑌃 𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌂 𑌸𑌲𑍋𑌕𑌤𑌾𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿

"தேவர்களுக்குரிய பெருமையைப் பெற்று ஆதித்தியலோக மெய்துகின்றான். பிதுர்களுக்குரிய பெருமையைப் பெற்று சந்திர லோகமடைகின்றான்"

என்பது முதலிய சுருதிகளிலும் இவ்விஷயஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இனி ஆதித்ய சந்திர முதலிய மண்டலங்களான லோகங்களின் பூதாம்சங்களுக்குத் தக்கபடி அமையப்பெற்ற ஸ்தூல சரீரத்தோடு ஜீவர்கள் வஸிக்கக் கூடுமென்று சொல்லப்பட்டதே! அதனை எப்படி ஒவ்வுவது? இவ்வுலகிலிருக்கிற தேஹமேயன்றோ ஸ்தூலசரீரமென்பது. ஆதித்யாதிமண்டலங்களில் உள்ளசரீரங்களும் இங்குள்ளவைபோன்றனவா? அல்லது வேறுவிதமா? வேறுவிதமாயின் ஸ்தூலசரீரம் எவ்வளவு வகையாயுள்ளது? அங்குள்ள சரீரம் தாய் தந்தையரின் சேர்க்கையின்றி வருவது எவ்விதம்? என்பது முதலிய சங்கைகள் நிகழும். ஆதலால் அவ்வுண்மையைச் சற்றுச் சொல்லுவோம்.

அதாவது ஸ்தூல சரீரமென்று பொதுவாய்ச் சொல்லப்படினும் அதனில் மிகுந்தபேதமுளது. இறக்குங்காலத்தில் வரும் மற்றோர் சரீரமும் இங்கு நம்மவர்க்குள்ள சரீரம்போலிருக்குமானால் நம்மவரால் காணக்கூடும். அவ்விதமின்றி வேறுவிதமாகிய சரீரமாதலால் காணப்படுவதில்லை என்பதுமறிக. அதாவது ஸ்தூலசரீரமானது பார்த்திவம், ஜலீயம், ஆக்கிநேயம், வாயவீயம் என்று நான்கு வகைப்படும்.

பார்த்திவ சரீரமாவது பிரிதிவியின் அம்சமே முக்கியமாயும் ஏனைய பூதங்களின் அம்சம் ஸ்வல்பமாயும் அமைந்துள்ள தேகமேயாம். அது பிரிதிவியாகிய இவ்வுலகிலுள்ள ஜீவப்பிராணிகளின் சரீரமேயாம். எறும்பு கொசுகு முதல் மனுஷ்யன் ஈறாகிய ஸகலஜீவர்களின் தேகங்களும் பார்த்திவ சரீரங்களே. பார்த்திவ சரீரத்திலடங்கியுள்ள அவாந்தர பேதம் இவ்வளவென்று கணக்கிடக் கூடியதல்ல. ஆமை முதலிய ஜந்துக்களுக்கு வெளியில் எலும்பும் உள்ளில் மாம்ஸமும், பாம்பு முதலியவைகளுக்குக் கண்ணே காதாகவும், காக்கை முதலியவைகளுக்கு மூக்கே வாயாகவும், இவ்வாறு எண்ணிறந்த வித்தியாஸங்கள் இருக்கின்றனவென்பது யாவராலும் அறியக்கூடியதேயாம். பார்த்திவ சரீரம் பிரிதிவியினாலேயே தோன்றி, பிரிதிவியினாலேயே வளர்ந்து பிரிதிவியிலேயே ஒடுங்குவதாம். பார்த்திவ சரீரத்திற்கு ஜலம் வாயு முதலியனவும் வேண்டுமாயினும், அவை பிரிதிவி ஸம்பந்தமாகவே இருக்கவேண்டியன ஜலத்திற்குள் மூழ்கிய மனிதன் முதலிய ஜீவப்பிராணிகள் ஜலத்திற்குள்ளிருக்கும் வாயுவைக்கொண்டு ஜீவிக்கமுடியாது. அவ்வாறே பூமியிலிருந்து மிக்க உயரச்சென்ற மனிதன்

அங்குள்ள காற்று முதலியவைகளைக்கொண்டு ஜீவிக்க இயலாது. ஏனெனின் அங்குள்ள காற்று முதலியதற்கு பார்த்திவ தர்மமாகிய கனம் குறைந்திருக்குமாதலின் என்க. பார்த்திவ சரீரமாகிய நம்மவரது தேஹத்தில் ஜலம் முதலியவைகளின் அம்சங்களும் இருக்கினும் பிரிதிவியின் அம்சமே மிகுதியாய் முக்கியமாயிருக்கின்றமையால் பார்த்திவ தேகமெனப்படுவதாம்.

ஜலீய சரீரமாவது, ஜலாம்சத்தையே முக்கியமாய்க்கொண்ட தேகமாம். அதில் மற்ற பூதாம்சங்களும் உள்ளனவாயினும் ஜலாம்சமேமுக்கியம். அது ஜலத்திலேயே உண்டாய் அதிலேயே வளர்ந்து அதிலேயே ஒடுங்குவதாம். அச்சரீரம் ஜீவிப்பதற்கு வேண்டிய ஆகாரம் வாயு முதலிய ஸகலமும் ஜலஸம்பந்தமாகவே யிருக்கவேண்டும். மீன் முதலிய ஜலீய சரீரப்பிராணிகளைக்கரையிலெடுத்துப் போட்டுவிட்டால், அங்குள்ள ஆகாரம் வாயு முதலியவைகளைக்கொண்டு அவை ஜீவிப்பனவல்ல. பார்த்திவ சரீரத்தில் உத்தம, மத்திம, அதமமெனும் தாரதம்மியம் போலவே இதனிலுமுள்ளது. மாவட்டை சாணப்புழு முதலிய பார்த்திவ சரீரங்கள் அதமங்களாம். பசு பக்ஷி முதலியன மத்திமங்களாம். மனித சரீரம் உத்தமமாம். இவ்வாறே ஜலீய சரீரத்திலும் அறிந்து கொள்ளவேண்டும். இங்கு ஜலத்திலுள்ள மீன் முதலியன அதம ஜலீய சரீரிகளாம். இதனில் மத்திம உத்தம சரீரங்கள் வருணலோகம் சந்திரமண்டலம் முதலியவிடங்களிலிருக்கின்றன. சந்திராதி லோகங்களில் ஜலாம்சம் விசேஷமாயிருத்தலால் அங்கு ஜலீய சரீரமிருக்கவேண்டுமென்பது நிச்சயம். அச்சரீரிகள் பித்ருக்கள் எனப்படும் ஓர்வகை தேவர்களாம். அன்றியும் இவ்வுலகில் இஷ்டாபூர்த்தாதி தானதர்மங்களைச் செய்தவரும் இறந்ததும் சந்திரலோகஞ் சென்று ஜலீய தேகத்தோடிருந்து அங்கு இன்ப துன்பங்களைப் புஜிப்பவராவர். இங்கு செய்த கர்மத்தினால் தேவத்தன்மை பெற்றவர் கர்ம தேவர் எனப்படுவர். இக்கர்ம தேவரும் வெகு காலமாய் சந்திராதி மண்டலத்திலேயே இருக்கும் பிதிரரும் இவ்வாறு ஜலீய சரீரம் பெற்றவர்களே. மாவட்டை முதலிய அதம பார்த்திவ சரீரிகளுக்கும் மனிதராகிய உத்தம பார்த்திவசரீரிகளுக்கும் எவ்வளவு வித்தியாஸமுள்ளதோ அவ்வளவு வித்தியாஸம், இங்கு நதி தடாகம் முதலியவைகளிலுள்ள மீன் முதலிய அதமஜலீய தேகிகளுக்கும் சந்திர மண்டலத்திலுள்ள தேவர்களுக்கும் என்றறிக. மீன் முதலியவை ஜலீய அதமதேகம் பெற்றுள்ளன. இங்கிருந்து கர்மவசத்தால் தேவத்தன்மை பெற்றுச்சந்திரலோகஞ் சென்றவர் மத்திம ஜலீய தேகமுடையவர். அவ்விடத்திலேயே உள்ளவராகிய பிதிரர் முதலியவர் உத்தம ஜலீய தேகிகளாம். அவர்கள் யாவர் எனின் இவ்வுலகிலிருக்கும் மனிதரை அபிமானித்துக்கொண்டு இவர்களால் செய்யப்படும் சிராத்தாதிகளைப் பெற்றுத் திருப்திசெய்விப்பவராகிய ஓர்வகைத் தேவராம். ஜலீய தேகிகளுக்கும் ஆகார முதலிய ஸகலமும் ஜலசம்பந்தமாகவே இருக்க வேண்டுமெனும் உண்மைபற்றியே பித்ருக்களுக்கு ஜல தர்ப்பணம் விதிக்கப்பட்டிருக்கின்றது. பித்ருக்களுக்கு ஜலீய சரீரமுள்ளது பற்றியே புண்ணிய தீர்த்தங்களுக்குச் சென்றால் அங்கு மனிதர் பித்ருக்களை உபாஸிக்க வேண்டுமென்று சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றது.

இனி ஆக்கிநேய சரீரமாவது, ஜ்வலித்தல் என்பது அக்நியின் தர்மமாதலின் ஆக்கிநேய சரீரம் பெற்றவர்கள்மிகவும் ஜோதிமயமாய் ஜ்வலிப்பவர் என்று அறியப்படுகின்றது. ஆக்கிநேய சரீரிகளின் தேகத்தில் பிருதிவி ஜலம் முதலியவைகளின் அம்சங்களும் இருக்கினும் விசேஷமாயுள்ளது அக்நியின் அம்சமேயாதலின் அப்பெயர் வழங்கப்படுவதறிக. ஜலத்திற்கும் அக்நிக்கும் பகையாதலின் ஆக்கிநேய சரீரத்தில் ரக்தம் அவ்வளவாக இராதென்றும், சுக்கிலம் ஆக்கிநேய தர்மமாதலின் ஆக்கிநேய சரீரிகளுக்கு சுக்கிலம் எனும் தாதுமிக்க விசேஷமாயிருக்கக்கூடும் என்றும் அறிக. சுக்கில தாது மிகவும் விசேஷமாய் அமையப் பெற்றவர்க்கு அது தேகத்திலிருந்து வெளிச்செல்ல வேண்டியதாகும். ஆதலால் அவர்களுக்கு ஸ்திரீகாமனை மிக்க விசேஷமாய் ஏற்படக்கூடும் என்பதுமறிக. உஷ்ணம் மிகுதிப்பட்டுள்ள ஸமயம் தூக்கம் விசேஷமாயிருப்பதில்லை என்பது நம்மவர்க்கு அனுபவஸித்தம். இதனால் ஆக்கிநேய சரீரம் பெற்றுள்ளவர்களுக்கு விசேஷமாய்த்தூக்கம் வாராது என்றும் அறியக்கூடியது. விசேஷமாய் அக்நியம்சம் தேகத்திலிருக்குமாயின் அசுத்தியும் அவ்வளவாயிராது. உலகில் அசுத்தியை நீக்கிச்சுத்திசெய்யும் பொருள் ஜலம். ஜலத்தினாலும் நீக்க முடியாத அசுத்தியை நீக்கும் பொருள் அக்நி. ஆதலின் ஆக்கிநேய சரீரம் அமைந்தவரிடம் அசுத்தியிராதென்பதும் தவிர அவரருகில் சென்ற அசுத்தி தேகமுடையவரும் சுத்தி பெறலாகும் என்றும் அறிக. தந்ததாவனம் (பல் துலக்கல்) ஸ்நாநம் முதலிய காரியங்கள் தேகத்திலுள்ள அசுத்தியை நீக்கிச்சுத்தி செய்தலின் பொருட்டேயாம். சகல அசுத்தியையும் சுத்தஞ் செய்வதாகிய அக்நியின் அம்சம் விசேஷமாய் அமையப் பெற்றுள்ள சரீரத்தில் எவ்வித அசுத்தியு மிருப்பதற்கு இடமிராதாதால் அச்சரீரிகளுக்கு பல் துலக்கல் ஸ்நாநம் முதலியன அவசியமில்லை என்றும் அறியப்படுகின்றது. இனி ஆக்கிநேய சரீரிகள்யாவர் எனின் தேவர்களேயாம். ஆனதுபற்றியே தேவர்கள் ஜோதிமயமாய் ஜ்வலிப்பவரென்றும், லௌகிக ஸுகத்தில் மிகவும் விருப்பமுள்ளவரென்றும், நித்திரையில்லாதவரென்றும், மிக்கச்சுத்தர் என்றும், மற்றவரையும் தமது ஸாந்நித்தியத்தால் சுத்தராக்குவோரென்றும், அவர்கள் தந்த தாவன ஸ்நாநாதிகளையும் அவசியமாய் வேண்டுவோர் அல்லரென்றும் நம் சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றது. இவ்வுலகிலும், புத்தி விசேஷமாய் வேலை செய்வோர்க்கு தேகத்தில் உஷ்ணமே விசேஷமாய் ஓங்கிக்கொண்டிருக்கும் என்பது அனுபவஸித்தம். இதனால் ஆக்கிநேய சரீரிகளுக்குப் புத்தி அபார சக்தியுடையதாயிருக்கும் என்றறியப்படுகின்றமையால் தேவர்கள் மிகுந்த புத்திமான்கள் என்பதும் உசிதம் என்றறியப்படுகின்றது. ஆக்கிநேய சரீரிகளுக்கு அன்னம் ஜலம் வாயு முதலியன அக்நி ஸம்பந்தமாகவே இருக்க வேண்டும். ஆதலின் தேவர்களை உத்தேசித்து அக்கிநியில் ஹோமம் முதலியது விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆக்கிநேய சரீரிகளுக்கு அக்நி மூலமாகவே அன்னபானாதிகள் வேண்டுமெனும் உசிதம்பற்றியே நமது முன்னோர் பரம்பரையிலும் அவ்வாறே செய்யப்பட்டு வருகின்றது. இங்கு இறக்கும் மிகுந்த சிரேஷ்டமாகிய புண்ணியத்தைச் செய்தவர்களும் ஸகுணோபாஸகர்களும்

யோகிகளும் இறந்ததும் ஆக்கிநேய (திவ்வியம் எனப்படும் ஜோதி) சரீரமாகிய ஸ்தூலத்தைப்பற்றிக்கொண்டு ஸூர்யன், இந்திரன், பிருஹஸ்பதி, பிருமன் முதலியவர்களது உலகஞ் செல்லுகின்றனர். இவ்வுண்மைப்பற்றியே மகாபாரதம் ஆநுசாஸநிகபர்வாவில் பீஷ்மர் உத்கிராந்தி பெறும் பிரகாணத்தில்,

𑌜𑌗𑌾𑌮 𑌭𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌮𑍂𑌰𑍍𑌧𑌾𑌨𑌂 𑌦𑌿𑌵𑌮𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌪𑌾𑌤 𑌹। 𑌮𑌹𑍋

𑌲𑍍𑌕𑍇𑌵 𑌚 𑌭𑍀𑌷𑍍𑌮𑌸𑍍𑌯 𑌮𑍂𑌰𑍍𑌧𑌦𑍇𑌶𑌾𑌜𑍍𑌜𑌨𑌾𑌧𑌿𑌪। 𑌨𑌿𑌃𑌸𑍃𑌤𑍍𑌯𑌾

𑌕𑌾𑌶𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌕𑍍𑌷𑌣𑍇𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌧𑍀𑌯𑌤।

மூர்த்தாவைப் பேதித்துக்கொண்டு ஆகாயத்தை யடைந்தனர், பீஷ்மருடைய தலைப்பக்கத்தினின்றும் மஹாஜ்வாலைபோல ஒன்று தோன்றி ஆகாயத்தில் சென்று க்ஷணத்தில் மறைந்து விட்டது.

எனும் இவ்வாக்கியத்தில் பெருஞ்சூழ்ந்து வெளிச்சம் போல என வியக்தமாய்ச் சொல்லியிருத்தலால் பீஷ்மர் முதலியவர்களுக்கு ஜோதிமய ஸ்தூலத்தைப்பற்றிக்கொண்டே லோகாந்தரகதி என்பது நிச்சயிக்கப்படுகின்றது. பீஷ்மர் முதலிய யோகிகளுக்கு மாத்திரமே இத்தகைய ஸ்தூலம் என்பதல்ல. ஸகுணோபாஸ்தி செய்தவருக்கும் தேவாலயப்ரதிஷ்டை தான தருமம் முதலியவைகளைச்செய்தவருக்கும் இவ்வாறு ஆக்கிநேய ஸ்தூலமேயாம்.

இங்கு மற்றொன்றும் அறியத்தக்கது. அதாவது, சந்திராதி பித்ரு மண்டலம் செல்லுவோரும் சூரியன் ப்ருஹஸ்பதி முதலிய மண்டலமாகிய தேவலோகம் செல்லுவோரும் ஸ்தூலத்தைப்பற்றிக்கொண்டே லோகாந்தரம் செல்லுகின்றன ரென்பது உண்மையே! ஆனால் அப்படிப்பற்றப்பட்டுச் செல்லும் ஜலீய ஆக்கிநேய ஸ்தூல சரீரங்களுக்கு கர்மேந்திரிய ஞானேந்திரியங்கள் கிரியை செய்யத்தக்க யோக்கியதை உத்க்ராந்தி காலத்தில் இல்லை. அப்படிப்பட்ட யோக்கியதை ஜலீய ஆக்கிநேய உலகங்களில் பிரவேசிக்கும்போது அந்தஸ்தூலங்களுக்கு ஏற்படுகின்றன. மார்க்கத்தில் இந்திரிய மனுதிகள் சேஷ்டிக்கத்தக்க யோக்கியதை அந்தஸ்தூலங்களுக்கிராமை பற்றியே ப்ரும்ம ஸூத்திரம் முதலிய நூல்களில் ஆதிவாஹிக அதிகரணத்தில் ஆதிவாஹிக தேவதை எனும் ஓர் சக்தியே அந்தஸ்தூலங்களை அம்மண்டலங்களுக்குத் கொண்டுபோய்ச் சேர்க்கின்றது என நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இனிப்பின்னர் நிரூபிக்கப்படும் வாயவீய ஸ்தூலத்திற்கோவெனின் இந்த நியமமில்லை. மார்க்கமத்தியிலும் கர்மேந்திரிய ஞானேந்திரியங்கள் சேஷ்டிக்கவும் மனம், செய்த கர்மங்களைச்சிந்திக்கவும் சுகதுக்கங்களை உணரவும் யோக்கியதை உண்டென்பதே நிர்ணயம். ஆனது பற்றியே

“𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌽𑌪𑍍𑌯𑍇𑌵 𑌯𑌾𑌤𑌨𑌾𑌦𑍇𑌹𑌧𑌾𑌰𑌿𑌣𑌾𑌂 𑌪𑌾𑌪𑌿𑌨𑌾𑌂

[illegible] 𑌯𑌮𑌦𑍂𑌤𑌾 𑌬𑌾𑌧𑌯𑌨𑍍𑌤𑍇”

மார்க்கமத்தியிலும் யாதநாதேஹதாரிகளாகிய பாபிகளை யமதூதர் உபத்திரவிக்கின்றனர்.

என ஸூரேச்வராசிரியர் முதலிய ஆன்றோர்களால் ப்ருஹ்மஸூத்திர உரையில் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வுண்மைகளை குருமுகமாய் ஆழ்ந்து விசாரியாமலே தற்காலத்தவராகிய சிலர் இறந்துபோன ஜீவர் ஸ்தூலப்பற்றேயின்றி ஸூக்ஷ்ம சரீரத்தோடு மாத்திரமே லோகாந்தரம் செல்லுகின்றனர் என்று பிதற்றுவதைக்காணலாம். அது சாஸ்திரங்களைக்கிரமமாக ஆராய்ச்சி செய்யாமையால் அப்படிச் சொல்லுதலென உபேக்ஷித்தலே யுசிதம். இனி வாய்வீய சரீரமாவது யாது? எனின் அதனைக்கூறுவாம். அவ்விஷயம் அடுத்த உபந்நியாஸத்தாலறிக.

இங்ஙனம் மூன்றும் உபந்யாஸம் முற்றிற்று.

இனி நான்காம் உபந்யாஸம்.

தூலசரீரம் நழுவியதும் ஜீவனுடையகதி

இரண்டாம் பாகம்.

இனி வாயவீய சரீரத்தைப் பற்றியும் மற்றுஞ் சில விஷயங்களையும்பற்றி இப்பொழுது சொல்லுவாம். வாயவீய சரீரமாவது, வாயுவின் அம்சமே மிகுதியாகவும், மற்ற பூதாம்சம் ஸ்வல்பமாகவும் அமைந்துள்ள சரீரமாம். வேகம் வாயுவினுடைய தாதலால் அவ்வினமாகிய சரீரம் மிகவும் வேகமாய்ச் சஞ்சரிக்கும் என்று அறியப்படுகின்றது. பிராணன் வாயு விசேஷமாதலால் அவ்வினமாகிய சரீரத்திற்கு எவ்வளவு நிமித்தங்கள் நிகழ்ந்தாலும் மாணம் நேரிடுதலரிது. வாயவீய சரீரத்தில் மற்ற பூதாம்சங்களும் உள்ளனவாயினும் மிகுதியாகிய வாயுவினில் அவை அடங்கிக்கலந்துள்ளமையால் நன்றாய்க்கண்ணுக்குத் தெரிதல்அரிது. இனி அச்சரீரத்தைக் காணவேண்டுமானால் நமக்கு இப்போதிருப்பதைக் காட்டிலும் பின்னும் விசேஷமாக நேத்திரேந்திரிய சக்தியமைய வேண்டும். அப்படியானால் வாயுவினில் கலந்திருக்கும் நுட்பமான மற்ற பூதாம்சங்களையுங் காணலாம்.

இனி அச்சரீரத்தையுங் காணும்படி நேத்திரேந்திரிய சக்தி ஏற்படுவதற்குச் சாதநம் யாதெனின் யோகம் ஆதித்திய உபாஸ்தி முதலியவைகளேயாகும். வாயவீய சரீரமுடைய ஜீவர் யாரெனின் பூதப்பிரேத பிசாசங்களே. பிசாசங்களுக்குச் சரீரம் வாயவீய மாதலால் அது நமது கண்களுக்குத் தென்படுவதில்லை. பூதங்கள் என்பவர் அபாரமாகிய சித்திகளைப் பெற்ற சிறந்த வாயவீய சரீரத்தைப் பெற்ற ஜீவர்களாம். பிரேதங்களாவன இங்கிருந்து பாபத்தைச் செய்து இறந்ததும் நரகஞ்செல்லும் ஜீவர்களாம். நம்மவர்க்கு இருளிலிருக்கும் வஸ்துக்களைப் பார்க்க இயலாவிடினும் கோட்டான் நாய் பசு பூனை முதலிய ஜந்துக்களின் நேத்திரத்திற்கு அப்படிப்பட்ட சக்தி இருக்கின்றது. ஆதலால் அவைகள் வாயவீய சரீரத்தைக்காணக்கூடும். இவ்வுண்மை பற்றியே இராக்

காலத்தில் நாய் பூனை அழுதாலும், கோட்டான் கத்தினாலும் பசு கதறினாலும் அது மரணஸூசகமென நாட்டுப் புறங்களிலுள்ள வ்ருத்தபரம்பரையில் வழங்கி வருகின்றது. வாயவீய சரீரத்திலும் உத்தம மத்திம அதம தாரதம்மிய முண்டு. பிரேத பிசாசங்களுக்கே அதம வாயவீய சரீரம். அதுவே யாதனா சரீரமென்றுஞ் சொல்லப்படும்.

“ந த்ருதீயே ததோபலப்³தே⁴:”

என்னும் பிரும்ம சூத்திரத்தின் உறையில் சுரேச்வராசாரிய சுவாமிகளாலும்

“கோ⁴ரேஷ்வேவ யாதநாஶரீராணி பா⁴விநம் பாபாநாம் யஸ்மாத்தாபாயநே”

எனும் வாக்கியத்தால் யாதனாசரீரம் பெற்றபாபிகளை மார்க்கமத்தியிலும் யமதூதர்கள் வாட்டி வதைக்கின்றனர், எனச்சொல்லப்பட்டிருக்கின்றது. மனுஸ்மிருதியிலும்

பஞ்சப்⁴ய ஏவ மாத்ராப்⁴ய: ப்ரேத்ய து³ஷ்க்ருதிநாம் ந்ருணாம் | ஶரீரம் யாதநார்தீ²யம் அந்யது³த்பத்³யதே த்⁴ருவம் ||

“பாபிகளுக்கு மரித்ததும் பஞ்சபூதாம்சங்களாலாகிய சரீரம் ஒன்று யாதனையின்பொருட்டு பற்றப்படுகின்றது

எனவும், மஹாபாரதம் சாந்திபர்வாவில்

ததா² மநுஷ்யோ விஸ்ருஜ்ய காயம் அத்³ருஶ்யம் அந்யத் விஶதே ஶரீரம் ||

அவ்வாறு மனுஷ்யன் இச்சரீரத்தை விட்டு காணமுடியாததாகிய வேறு ஓர் சரீரத்தைப் பற்றுகிறான்

என்பது முதலிய சுலோகங்களால் அது சாமான்னியரால் காணமுடியாத வேறுவகைச் சரீரம் எனவும்,

அங்கு³ஷ்ட²மாத்ர: புருஷோ ஹாஹாகாரம் க்ரந்த³ந்நேவ ஸ்வகம் | தமேவ க்³ருஹம் ஈக்ஷமாணோ யமதூதை: ப³லாத்³ க்³ருஹ்யதே | அங்கு³ஷ்ட²மாத்ரோ வாயுஸ்து கர்மபோ⁴கா³ய வை ஸ்வகம் | யாதநாதே³ஹமாஸாத்³ய ஸஹ யாம்யைர்வ்ரஜதி ச ||

“அங்குஷ்ட மாத்திரனாகிய புருஷன் ஹா ஹா வெனக் கதறிக்கொண்டு தனது இல்லத்தையே பார்க்கின்றவனாயிருக்க யமதூதர்களால் அப்பொழுது பலாத்காரமாய் கிரகிக்கப்படுகிறான். கர்மபலத்தை புஜிப்பதின் பொருட்டு, வாயுவே யாதனா தேகமாய்வர அதனைப் பற்றிக்கொண்டு யமதூதர்களோடு ஆகாயத்தில் (நரகலோகத்திற்கு) போகின்றான்.”

எனும் கருடபுராண வாக்கியங்களாலும் யாதநாதேகம் வாயவீயமே என்பதும் நிச்சயிக்கப் படுகின்றது.

இவ்விதம் ஸ்தூலசரீரம் நான்குவகை என்பதறிக. இவைகளுள் நரகஞ் செல்லுவோர்க்கு வாயவீய சரீரமும், சூரியன் பிருஹஸ்பதி முதலிய அக்கியம்சம் மிகுதியாயுள்ள ஸ்வர்க்க லோகத்திலுள்ள ஜீவர்க்கு ஆக்கிநேய சரீரமும், சந்திரன் வருணுதிபுவனம் முதலிய ஜலாம்சம் மிகுதியாயுள்ள உலகிலுள்ள தேவர்க்கு ஜலீயதேகமும், இப்பூவுலகிலுள்ள ஜீவர்களுக்கு பார்த்திவ சரீரமும் உள்ளதெனநிர்ணயிக்கப்பட்டது. இவ்விஷயம் என் ஆசிரியராகிய பிரும்மஸ்ரீ ஸஹஜாநந்த உபாத்தியாய ஸ்வாமிகளாலும் போதிக்கப் பட்டிருத்தலை

உஷ்மாதிஜே வாயவ்யதேஹ ஜீவா:
ஜலீயலோகேது ஜலீயதேஹா: ।
வாயவ்யதேஹாஸ்ஸ்வயாதநாயை
ஹ்யாக்நேயதேஹா: திவி தேவலோகே ॥

என்பது முதலிய சுலோக வாக்கியங்களால் அறிந்துகொள்க.

அன்றியும்

ஆப்யதைஜஸவாயவீயாநி லோகாந்தரே ஶரீராணி தேஷ்வபி பூதஸம்யோக:

என்பது முதலிய வாக்கியங்களினுல் ந்யாய ஸூத்ரபாஷ்யத்திலும்

“ப்ரதிகாலமேலோ ப்ராஹாவவாதநம் உத்தப்ராலிவ்யாயேண । யதாதித்தவாயவீயஶரீரவ்யவச்சேதா ப்ரநகாமே விஹாரமோஹவதி । அதோ யத்ராமோக்ஷ:வஹோமவாக்யாநுபபத்தே:”

கமநகாலத்தில் போகமில்லை யெனும் வாக்கியம் ஸாமாந்நியமாகவே சொல்லியது. ஏனெனின் வாயவீய சரீரத்தைப் பற்றிக் கொண்டு கமநகாலத்திலும் போகமுள்ளது. ஆதலால் யமலோக மார்க்கத்தில் துக்கபோக முளது எனும் வாக்கியங்கள் பொருந்துவனவே

என ஸாங்கியதெர்சனம் மூன்றும் அத்தியாயம் ஏழாவது ஸூத்திரத்தின் பாஷ்யத்திலும் சொல்லப்பட்டிருக்கும் வாக்கியங்களை கவனித்தால் ஸ்தூல சரீரபேதத்தைப் பற்றிய விபரம் நன்ருய் விளங்கும். இவ்விஷயம் தற்காலத்தவரால் படிக்கப் படுவதாகிய ஸித்தாந்த முக்தாவளி முதலிய கிரந்தங்களிலும்

பார்திவஜலீயதைஜஸவாயவீய ஶரீராணாம்வா யிர்வஹாமோவஷ்டம்ஹார்தவஹோமக்ஷகம்

என்பது முதலிய வாக்கியங்களினுல் நன்கு சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனல் தற்காலம் வேதாந்தம் படிக்கும் பண்டிதர்களுக்கு இவ்விஷயம் அநேகமாய்த் தெரியவில்லை யென்பதை நாம் கூசாமற் [illegible]. அதற்குக்காரண

மென்ன வெனின் நியாயம் ஸாங்கியம் யோகம் முதலிய ஏனைய தெரிசன நூல் களைப்படித்த பின்னரே வேதாந்தம் படிக்கவேண்டும் என முன்னோர் பரம்பரையில் நடைபெற்றுவந்த வேதாந்த விசாரக் கிரமமானது தற்காலம் மாறபட்டுப் போய், எடுத்ததும் வேதாந்தம் விசாரிக்கப்புகும் அவிவேகமே அதற்குக்காரணம்.

இனி லோகாந்தரஞ் செல்லும் ஜீவன் ஸ்தூல பூதாம்சங்களின் பற்று சிறிதுமின்றி ஸூக்ஷ்மசரீர மாத்திரமாகவே செல்லுகின்றானென ஏன் சொல்லக்கூடாது? எனின் அதனைச்சற்று விசாரிப்பாம்.

ஸூக்ஷ்ம சரீரத்திற்கு ஸ்தூல பூதாம்சங்களின் பற்றில்லாமல் (கதாகதி) போக்குவரத்து ஸம்பவியாது. அப்படியே அங்காவயவங்கள் அமைந்து பூர்ணமான ஸ்தூல தேகத்தைப் பற்றாமல் ஸுகதுக்க போக ஞானாதிகளில்லை. எனும் இவ்விரண்டு விஷயங்களும் வேதசாஸ்திரங்களில் கண்ட நிர்ணயம். இதனை

"ஸஏஷ மாயாபரிமோஹிதாத்மா ஶரீரமாஸ்தாய கரோதிஸர்வம்"

அந்த இம்மாயாபரி மோகிதனான ஜீவன் சரீரத்தைப் பற்றிக் கொண்டே எல்லாவற்றையுஞ் செய்கின்றான்.

என கைவல்யசுருதியில் ஜீவனது ஸகல செய்கைகளும் சரீரத்தைப்பற்றிக் கொண்டே நடைபெறுவனவென ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்தூலமின்றிலிங்கமாத்திரத்தால் ஜீவனுக்கு கதாகதி உள்ளதென்போமானால் இந்தச் சுருதிக்கு விரோதமாகும். அன்றியும் ஐதரேயசுருதியில்

ஸோ(அ)ஸ்யாயமிதர ஆத்மா க்ருதக்ருத்யோ வயோகத: ப்ரைதி ஸ இத: ப்ரயன்னேவ புநர்ஜாயதே ததஸ்ய த்ருதீயம் ஜந்ம

"இனி இவன் வயது முதிர்ந்து செய்கையோய்ந்து இச்சரீரத்தைவிடுத்துப் போகின்றானன்றோ இங்கிருந்து புறப்பட்டுப்போகும் பொழுதே மற்றோர் தேகத்தோடு தோன்றுகின்றான். அப்படி (துரும்பட்டை எனும் ஜந்துபோல) உடனே பற்றப்படுவதாகிய தேகமானது மூன்றாவது ஜன்மமாம்"

எனும் வாக்கியங்களினால் ப்ரயன்னேவ புநர்ஜாயதே புறப்படும்பொழுதே யென ஏவ எனும் சொல்லினால் தாணிந்தோதப்பட்டமையாலும், மற்றோர் ஸ்தூலத்தைப் பற்றிக்கொண்டே பிரயாணஞ் செய்கின்றான் என்பது வியக்தமாகின்றது.

இனி இந்தச் சுருதிக்கு துரும்பட்டையானது முன் பக்கத்தால் மற்றோர் பக்கத்தைப் பற்றிக்கொண்டே பின்பற்றை விடுவதுபோல எனும் திருஷ்டாந்தத்திற் கிணங்க மற்றோர் ஸ்தூலத்தை உடனே பற்றிக்கொண்டு லோகாந்தரஞ் செல்லுகின்றானென இங்ஙனமே பொருள் கொள்ளவேண்டு மென்பதற்குப் பிரமாணம் என்னவெனின்

"ஸ ஜீவ: - முக்யப்ராணஸசிவ: - ஸேந்த்ரிய: ஸமனஸ்க: த்ரு
ணஜலூகாவத் தேஹாந்தரம் உபாதாய கர்மோபஸ்தாபிதம்
ப்ரதிபத்யதே"

"அவன் இச்சரீரத்தை விடும்பொழுதே த்ருணஜலூகைபோல
கர்மாவினால் வரும் மற்றோர் தேகத்தைப் பற்றியவனாய்"

என் இந்தச் சுருதிக்கு சங்கரபகவத்பாதர் அருளிய பாஷ்ய வாக்கியத்தினால் இதுவே பொருளென்பது நிச்சயமாகின்றது. அன்றியும் ஸ்ரீமகாபாரதம் சாந்திபர்வம் பிருகுநாரத ஸம்வாதப் பிரகரணத்திலும்

"ஜீவஸ்து தேஹாந்தரித: ஸ்யாதி ப்ராய: ஸதா தஸ்ய
ஶரீரபேத:"

"ஜீவன் வேறுதேகத்தை யுடையோனைச் சொல்லுகின்றான்.
அது பஞ்சபூதத்தினால் ஆகியதேயாம். வேற்றுமைப்பட்ட சரீரமே"

என்பதாக பஞ்சபூதத்தாலாகிய வேறு ஸ்தூலத்தைப் பற்றிக்கொண்டே பிரயாணமெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. அன்றியும் கீதையிலும்

வாஸாம்ஸி ஜீர்ணானி யதா விஹாய நவானி க்ருஹ்ணாதி
நரோ(அ)பராணி। ததா ஶரீராணி விஹாய ஜீர்ணான்ய
ன்யானி ஸம்யாதி நவானி தேஹீ ॥

"கிழிந்த வஸ்திரங்களை விடுத்து மனிதன் புதிய வேறு வஸ்திரங்களை எப்படிக் கட்டிக்கொள்ளுகின்றானோ அப்படியே ஜீர்ணமான அந்த ஸ்தூலங்களை விட்டு ஜீவன் புதிய வேறு ஸ்தூலங்களைப்பற்றிச் செல்லுகின்றான்"

எனும் ச்லோகத்திலுள்ள திருஷ்டாந்தத்தினாலும் மனிதன் பழைய வஸ்திரத்தை விட்டெறிந்து நிர்வாணமாகவே சென்று புதிய வஸ்திரத்தை ஸம்பாதித்துக்கட்டிக் கொள்ளுதல் என்பது எப்படி உலகில் ஸம்பவமில்லையோ அப்படியே ஜீவன் இந்த ஸ்தூலத்தை விட்டு ஸூக்ஷ்மசரீர மாத்திரமாக லோகாந்திரன் செல்லுகின்றான் என்பதும் ஸம்பவமில்லை யென்றே ஏற்படுகின்றது. அன்றியும்

ஶரீரம் யதவாப்நோதி யச்சாப்யுத்க்ராமதீஶ்வர:।

"சரீரத்தைப் பற்றுதலும் லோகாந்தரத்திற்குச் செல்லுதலும்"

என்பது முதலிய வாக்கியங்களில் மற்றோர் தேகத்தைப்பற்றுதலையே முதலில் கூறி பின்னரே பிரயாணஞ் சொல்லப்பட்டிருத்தலாலும் கீதையிலும் இதுவே நிர்ணயம் என்பதைக் காணலாம். இனி இந்த நிர்ணயத்தை அங்கீகரியாமல் ஸூக்ஷ்மசரீர மாத்திரமாகவே ஜீவன் லோகாந்தரம் செல்லுகின்றான் என்பதை சாதிக்கப்புகுந்தால்

𑌶𑌿𑌰𑍋𑌦𑍇𑌶𑌾𑌚𑍍𑌚 𑌭𑍀𑌷𑍍𑌮𑌸𑍍𑌯 [illegible] 𑌮𑌹𑌾𑌰𑌾𑌜 [illegible] । 𑌨𑌿
𑌸𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌾𑌕𑌾𑌶𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌕𑍍𑌷𑌣𑍇𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌧𑍀𑌯𑌤 ॥

"பீஷ்மருடைய தலைப் பக்கத்தினின்றும் பெருஞ் சூழ்ந்து நெருப்புப்போல ஒன்று (காணப்பட்டு) ஆகாயத்தில் சென்று க்ஷண நேரத்தில் மறைந்துவிட்டது"

என. பீஷ்ம உத்கிராந்திப் பிரகாரண வாக்கியத்தினுல் அக்கினிபோன்ற ஓர் ஸ்தூலத்தைப் பற்றிக்கொண்டே பீஷ்மருடைய சூக்ஷ்மசரீரம் லோகாந்தரம் சென்றதென மஹாபாரதத்தில் நன்கு சொல்லப்பட்டிருக்கும் விஷயம் பிசகென்று சொல்லவேண்டியதாகும்.

ஏனெனின் இந்திரியங்களுக்கு விஷயமல்லாததாகிய ஸூக்ஷ்ம சரீரமாத்திரத்திற்கு பெருஞ் சூழ்ந்து நெருப்புப்போன்ற பிரகாசமிருத்தல் பொருந்தாது என்பது நிர்ணயமாதலின் அது ஸ்தூலத்திற்கே திருஷ்டாந்தமாய்ச் சொல்லப்பட்டதென வியக்தமாய் அறியப்படுகின்றது அவ்வாக்கியத்தைக்கொண்டும் உத்கிராந்திகாலத்தில் ஜீவனுக்கு ஸ்தூலபூதாம்சங்களின் பற்றுள்ளதென்பது நிர்ணயமே.

அன்றியும் உத்கிராந்தியில் மார்க்கமத்தியிலும் பாப ஜீவர்களுக்கு துக்கயாதனையுள்ளதெனச் சொல்லப்பட்டிருக்கும் சாஸ்திர வாக்கியங்களைக் கவனித்தாலும் ஸ்தூலத்தைப்பற்றிக்கொண்டே பாபிகள் நரகம் செல்லுகின்றனரென்பதும் நிச்சயிக்கப்படுகின்றது. ஏனெனின் ஜீவனுக்கு ஸுகதுக்க ஞானாதிகள் ஸ்தூல சரீரத்தை ஆச்ரயிக்காமல் நிகழாதென்பது சாஸ்திரங்களின் நிர்ணயமாதலால் என்க.

இனி அங்ஙனம் எங்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றதெனின் கீதை பதினெட்டாம் அத்தியாயத்தில் பகவான் அருச்சுனனை நோக்கி

𑌪𑌞𑍍𑌚𑍈𑌤𑌾𑌨𑌿 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑌿 𑌨𑌿𑌬𑍋𑌧 𑌮
𑍇 । 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑍇 𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮
𑌣𑌾𑌮𑍍 ॥

"ஸகல கர்மங்களும் ஸித்திப்பதற்கு அவசியம் வேண்டியனவெனத் தத்துவ சாஸ்திரத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஐந்து காரணங்களையும் என்னிடம் தெரிந்துகொள்வாயாக"

என்று கூறி, அவை யாவையெனின்

𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌂 𑌤𑌥𑌾 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌕𑌰𑌣𑌂 𑌚 𑌪𑍃𑌥𑌗𑍍𑌵𑌿𑌧𑌮𑍍 ।
𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌶𑍍𑌚 𑌪𑍃𑌥𑌕𑍍𑌚𑍇𑌷𑍍𑌟𑌾 𑌦𑍈𑌵𑌂 𑌚𑍈𑌵𑌾𑌤𑍍𑌰 𑌪𑌞𑍍𑌚𑌮𑌮𑍍 ॥

(இச்சாத்து வேஷஸுக துக்கஞானாதிகள் அபிவ்யக்தமாவதற்கு ஆதாரமாகிய) சரீரம், உபாதிலக்ஷணமாகிய சிதாபஸானேடுகூடிய அஹங்காரம், இந்திரியமனோபுத்திகள், பிராணபானுதி வியாபாரங்களாகிய சேஷ்டைகள், ஐந்தாவது அநுக்கிரஹாபிமானி தேவதை எனும் இவையாம்

என சங்கரபகவத்பாத பாஷ்யத்தில் சொல்லியவாறு இந்த ச்லோகத்தின் அர்த்தத்தைப்பார்க்கின் இங்குள்ள அதிஷ்டானமெனும் சொல்லால் ஸ்தூலசரீரமே சொல்லப்பட்டிருத்தல் வியக்தமாய்விளங்குகின்றது.

இனி மனோமாத்திரத்தினால் ஆகும் காரியமன்றோ சுகதுக்கஞானாதிகள். அவைகள் ஸம்பவித்தலுக்கு ஸ்வப்பனத்திற்போல ஸ்தூலசரீரமேயின்றி மனமே போதுமென்பதுகூடாதோ எனின் இதுவும் அறியாமையால் நிகழும் சொல்லேயாம். ஏனெனின் அதற்கு அடுத்தச்லோகத்தில்

“சரீரத்தினாலாவது வாக்கினாலாவது மனதினாலாவது நியாயமாகவேனும், அல்லது விபரீதமாகவேனும் எவ்வகையாய்ச் செய்யினும் அதற்கு இவ்வைந்து காரணங்களும் வேண்டியன”

என் மனோமாத்திரத்தில் நடைபெறும் காரியத்திற்கும் ஸ்தூலசரீரம் முதலிய ஐந்து காரணங்களும் வேண்டியன என பகவானால் போதிக்கப்பட்டிருத்தலைக்காண்க.

இனி யுக்தியாகவே கவனிக்கினும் சுகதுக்காதிகள் மனஸையேபற்றியன. ஆனால் மனம் ஸ்தூலசரீரத்தின் ஓர் பாகமாகிய மூளை கண்டம் எனும் அவயவங்களில் நின்று வேலைசெய்யாமல் ஸுகதுக்க ஸங்கற்பாதிகள் நிகழாவென இரண்டாம் நாள் உபந்யாஸத்தில் விசேஷமாகச் சொல்லியிருக்கிறோம். அன்றியும் எம்மால் எழுதியச்சிடப்பட்டிருக்கும் மனஸ்தத்துவம் வேதசாஸ்திரதத்துவம் எனும் நூல்களில் இதே விஷயம் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. விரிவஞ்சி இதனை இவ்வளவோடு விட்டு மேல் விஷயத்தை நாடுவோம். அங்கு சொல்லப்பட்டிருக்கும் யுக்தி விசாரங்களைக் கவனிப்பவருக்கு ஸ்தூலசரீரமின்றி எவ்விதமாகிய அனுபவமும் நிகழாதென்வது நன்றாய் விளங்கும்.

இனி ப்ரும்மலோகம் சென்ற உபாஸகருக்கு ஸ்தூலதேஹமின்றி மனோமாத்திரத்தினால் ஸகலகாரியங்களும் நடைபெறுகின்றனவென ப்ரும்மஸூத்திரத்தில் நிர்ணயிக்கப்பட்டிருத்தலுக்கு இது விரோதமாகின்றதே எனின் அல்லவென்க. ஏனெனின் அது யோகஸித்திபோன்ற உபாஸனா ஸித்திமஹிமையால் அங்ஙனமுள்ளதென்று சொல்லப்பட்டது. அதனிலும் நன்கு விசாரிக்கவேண்டிய மர்மமுள்ளது. அதனை விசாரித்தவருக்கு ப்ரும்மலோகம் சென்றவருக்கும் ஸ்தூலசரீர ஸம்பந்தத்தினாலேயே அனுபவமுள்ளதெனும் மர்மம் தெரிந்திருக்கும். அப்படியின்றி ஸூத்ரபாஷ்ய வாக்கியங்களை நெட்டுரு மாத்திரம் போட்டுவிட்ட பண்டிதருக்கு இவ்விஷயம் எட்டாதென்பது நிச்சயமே. இனி ப்ரும்மலோகம் சென்ற ஜீவர்களுக்கு உபாஸனா ஸித்திமஹிமையுள்ளதென்பதையறியாமல் அந்த வாக்கியமாத்திரத்தை மேற்பார்வையாய் படித்துவிட்டு, இங்குமரிக்கும் ஸகல ஜீவருக்கும் அந்த நியாயத்தை ஒப்பிடப்பிரவர்த்திப்பவரை சாஸ்திர மரியாதையறியாதவர் என்றே கொள்க.

இனி பிரகிருதத்தை நாடுவோம். இங்கு மரிக்கும் ஸகல ஜீவர்களும் லோகாந்தரஞ் சொல்லுகின்றனரா? அல்லது ஏதோ ஓர் சிலரோயா? அங்ஙனமாயின் அவர்கள் யாவர், எனின் சொல்லுவாம்.

இந்த லோகத்தில் கொடும்பாபங்களைச் செய்தவர் நரகலோகங்களுக்கும் பெரும் புண்ணியத்தைச் செய்தவர்கள் ஸ்வர்க்கலோகங்களுக்குஞ் செல்லுகின்றனர். ஸாமான்னிய பாபபுண்ணியத்தைச் செய்த மனிதர் லோகாந்தரஞ் செல்லாமல் இவ்வுலகிலேயே பிறக்கின்றனர். மிருகம் பறவை ஊர்வன முதலிய ஜந்துக்களும் லோகாந்தரஞ் செல்வனவின்றி தமது பூர்வ கர்மங்களுக்குத் தக்கபடி இங்கேயே பிறக்கின்றன என்பதறியத்தக்கது.

மிருகம் பறவை முதலியவைகளுக்கும் கர்மமுண்டோ எனின் அவ்வுண்மையறிக. இவ்வுலகில் உள்ள ஸகல ஜீவராசிகளும் அநாதிகாலந்தொட்டு இப்பிரபஞ்சத்தில் மாறி மாறிப்பிறந்து கொண்டிருக்கின்றமையால் அதனில் ஒவ்வொரு ஜந்துவும் இதற்குமுன் எப்பொழுதோ மனிதஜன்மம் எடுத்திருக்கக்கூடுமன்றோ! அப்படி எடுத்த மனிதஜன்மத்தில் செய்யப்பட்ட நல்ல காரியங்களும் கெட்டகாரியங்களும் புண்ணிய பாபவடிவமாகப் புத்தியில்பதிந்து கிடக்கின்றன. அப்படிக் கிடக்கும் கர்மங்களின் பயனை அநுபவிப்பதற்காகவே பலகோடி ஜன்மங்கள் எடுக்கப்படுகின்றன. ஆதலால் இந்த ஜன்மத்தில் மிருகம் பறவை முதலியன செய்யுஞ் செய்கைகள் பாபபுண்ணியங்களாக ஏற்படுவதற்கு நியாயமில்லை என்பது நிச்சயமே. இதற்குமுன் எடுத்திருந்த மனிதஜன்மத்தில் நிகழ்ந்திருக்கும் கர்மவசத்தாலேயே இவைகள் மாறி மாறிப்பிறக்கவேண்டியனவாயிருக்கின்றன. அப்படி பிறக்கும் கிரமத்தில் யாதானும் ஓர் புண்ணியகர்ம பரிபாகத்தால் அவைகளுக்கு மனித ஜன்மங் கிடைக்கக்கூடும்.

ஸ்வர்க்க நரகங்களில் இன்பதுன்பங்களை அநுபவிக்க இங்கிருந்து சென்றவர், அங்கு அவ்வாறு புசித்த பிறகு கர்மங்கள் ஒழிந்து போகின்றமையால் முக்தியை யன்றோ அடையவேண்டும்! அப்படி இருக்க அவர் மீண்டும் இங்கு வருகின்றனர் என்பதுபொருந்தவில்லையே எனின் இது அறியாமையாம். ஏதோ கொடும்பாவங்களைச் செய்தவரே நரகத்திற்கும் பெரும் புண்ணியத்தைச் செய்தவரே ஸ்வர்க்கத்திற்குஞ் செல்லவேண்டுமென்று பூர்வமே சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படிக்குறிப்பாயுள்ள அக்கருமங்களின் பயனே அவ்வுலகங்களில் புசிக்கப்படுகின்றமையால் மற்றுமுள்ள ஸாமான்னிய கர்மங்களின் பயனைப் புசிப்பதற்காக அவர்கள்மீண்டும் இவ்வுலகில்வரவேண்டுமென்பது உசிதமேயாம். அதாவது உகிலுள்ள ஒவ்வொரு ஜீவனிடமும் கோடாநு கோடி பாபபுண்ணியங்கள் இருக்கக்கூடும். அவைகளுள் ஏதோ ஓர் முக்கியமாகிய கர்மமே மறு உலகத்தில் புசிக்கப்படுகின்றமையால் மிச்சமாயுள்ள கர்மங்களெல்லாம் ஒழிந்துபோகுமா?

இனி இறந்தவர்களைக் குறித்து நாமிங்கு செய்யும் சிராத்தம் முதலியன பயன்படுவது எவ்விதம்? இறந்த நமது முன்னோர் ஸ்வர்க்கத்தையடைந்தாரோ? அல்லது இங்கேயே மீண்டும் பிறந்தனரோ! அல்லது ஸத்திய லோகாதிகளுக்குச் சென்றனரோ? அல்லது முக்தியடைந்தனரோ? எவ்வாறு ஆயினர் என்று நிர்ணயிக்கமுடியவில்லையே! இப்படியிருக்க அவர்களைக் குறித்துச் செய்யுங் கர்மங்கள் பயன்படுவது எவ்விதம் என்றால் சொல்லுவாம்.

இங்கு செய்யும் சிராத்தம் முதலியவைகளால் பித்ருலோகத்திலுள்ள ஓர் வகை தேவரே நேரில் ஆராதிக்கப்படுகின்றனர். அவர் நாம் செய்யும் சிராத்த முதலியவைகளின் பயனை நமது முன்னோர் எந்த வுலகில் சென்றிருந்தாலும், அல்லது இவ்வுலகிலேயே பிறந்திருந்தாலும், அந்த ஜீவரிடத்திலேயே சேர்த்துவிடுகின்றனர். அதாவது இறந்த முன்னோர் ஸ்வர்க்கஞ் சென்றிருப்பாராயின் பித்ரு தேவர்களால் அவர்களிடம் அமுதமுதலிய ஸ்வரூபமாக சிராத்த பலன் அளிக்கப்படுகின்றது. நரகத்திலிருப்பாராயின் பித்ரு தேவர்கள் அதன் பயனை அவர்களிடம் அந்நமுதலியவைகளாய்ச் சேர்த்துவிடுகின்றனர். மிருகம் பறவை வடிவமாய்ப் பிறந்திருப்பார்களாயின் நாம் சிராத்தஞ் செய்யுந்தினம் அவைகளுக்கு யாதுந்துன்பமின்றி நல்ல புல் முதலியவடிவமாய் சிராத்தபலன் பரிணமிக்கின்றது. முக்தி அடைந்திருப்பாராயின் அந்தப் பிதிர் தேவர்கள் அதன் பயனை நம்மிடமே தர்மார்த்தகாம வடிவமாய் வந்து சேரும்படி அருளுகின்றனர். இங்கிருந்து காசிக்குச் சென்றிருக்கும் ஒருவருக்கு நாம் (மணியார்டர்) பணம் அனுப்புவோமாயின் அவர் அங்கு இறந்துபோயினராயின் மறுபடி அது நம்மிடமே எப்படி திரும்பச் சேர்க்கப்படுகின்றதோ அதுபோலவே, முக்தியடைந்தவரைக் குறித்துச் செய்யும் சிராத்தாதிகளைப் பெற்ற பித்ருக்கள் சிராத்தகர்த்தாக்களையே அநுக்கிரஹிக்கின்றனர். இதனால் பித்ருக்கள் என்போர் இங்கு செய்யும் சிராத்தங்களின் பயனை இறந்தவரிடம் சேர்ப்பிக்கும் அதிகார நிலைமையிலமர்ந்த ஓர்வகை புண்ணிய புருஷர்கள் என்பதும் அறியத்தக்கது. இவ்வுண்மையானது

[illegible]

[illegible]

> "ஹவ்விய கவ்வியங்களான ஹோம சிராத்தங்களை பெயர் கோத்திரம் முதலியவை பிதிர்க்களிடம் சேரச்செய்வன. அக்நிஷ்வாத்தர் முதலியவர் அப்படிச் சேர்ப்பிக்கும் அதிகார நிலைமையில் அமர்ந்தவர். பெயருடன் கூடின மந்திரங்கள் ஜன்மாந்தரங்களை அடைந்திருந்த பிராணிகளாயிருக்கும் நமது முன்னோர்களையும் திருப்தி செய்விக்கின்றன. நமது முன்னோர் புண்ணிய வசத்தால் ஸ்வர்கஞ் சென்று தேவத் தன்மை பெற்றிருப்பாரானால் இங்கு நாம் செய்யும் சிராத்தம் அங்கு அவரிடம் அம்ருதமாய்ப் பரிணமிக்கின்றது. கந்தர்வராயிருந்தால் போகவடிவமாகவும் பசு முதலியவைகளாய்ப் பிறந்திருந்தால் புல் முதலிய வடிவமாகவும் அவரிடஞ் சேருகின்றது"

என ஹேமாத்ரி முதலிய அரும் பெரும் நூல்களில் உதகரிக்கப்பட்டிருக்கும் மாத்ஸ்ய தேவலாதி வாக்கியங்களால் நன்கு அறியத்தக்கது. இவ்விஷயங்களெல்லாவற்றையும் பற்றி விஸ்தாரமாகவும் விசதமாகவும் தெரிந்துகொள்ள வேண்டின் எம்மால் சிலமாதங்களுக்குமுன் எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தப் பட்டிருக்கும் வேதசாஸ்திரதத்தவ மெனும் நூலைப் படித்தல் அவசியமேயாம். இங்ஙனம் இந்த உபந்நியாஸத்தை இம்மட்டோடு நிறுத்திக்கொள்ளுகின்றனம்.

நான்காம் உபந்நியாஸம் முற்றிற்று.

ஐந்தாம் உபந்யாஸம்.

ஈ ஸ் வ ர ஸ் வ ரூ ப ம்.

இப்போது ஈச்வரஸ்வரூபம் யாது என்பதைப்பற்றிச் சற்று உபந்யஸிப்பாம். ஈச்வரன் எங்குமுள்ளவனும் எல்லாமறிவோனும் ஸகல வல்லமையும் பொருந்தியவனும் அனாதி முக்தனுமாயுள்ள ஆனந்தஸ்வரூபனே.

ஈச்வரனை நாம் காணாவிடினும் அவன் நம்முடைய செயலை எப்போதும் பார்த்துக்கொண்டேயிருக்கின்றான். அவனது பெருமை மனஸுக்கும் வாக்குக்கும் எட்டாததே. சுத்தமாயை என்னப்படும் திவ்ய மஹாமாயா சக்தியே அவனது மஹிமை எனப்படும். அவனில்லாத ஓர் அணுவும் இல்லை. உண்மையில் அவன் எங்கும் வியாபகனான பரிபூர்ணனாதலால் உருவமிராதவனே. ஆயினும் அவன் மாயாசக்தி விசேஷத்தால் எவ்வுருவத்தையும் எடுக்கத்தக்க ஆற்றலுள்ளவன் என்பதறிக.

இனி, ஈசன் எங்குமிருக்கின்றானென்றதினால் நாமிருக்குமிடத்திலு மிருக்கின்றானென்றே ஏற்படுகின்றது. அப்படியானால் அவன் நமக்கெதிரில் காணப்படவேண்டுமே! அவ்விதம் எவராலும் காணப்படவில்லையே! ஆதலால் ஈசன் கெட்டகாரியஞ் செய்வோர்களைத் தண்டிப்பவன் என்ற எண்ணமிராவிட்டால் ஸாமான்னிய ஜனங்கள் ஒன்றுக்கு மஞ்சாமல் தோன்றியவாறு நடந்து உலக நிலை ஸரிவர நடைபெறாமல் கெட்டுவிடுமாதலின் ஸாமான்னிய ஜனங்கள் கெட்டகாரியம் செய்யாமலிருக்கவேண்டுமென்பதையே கருதி நமது முன்னோர்களால் ஈசனிருக்கின்றான் என்று சட்டுப்பாடாகவே எழுதிவைக்கப்பட்டதெனச் சொல்லக்கூடாதோ? எனின் இது அறியாமல் சொல்லுவதே.

அதாவது உலகம் யாவும் மண் ஜலம் தீ வாயு ஆகாயம் எனும் ஐந்து மூலப் பொருள்களிலேயே அடங்கும் என்பது நிச்சயம். இவ்வைந்துபொருள்களையும் நாம் பிரத்தியக்ஷமாய்க் காண்கின்றோ மென்பதில்லை. நம்மால் காணப்படும் பொருள்கள் மண் ஜலம் தீ எனும் இம்மூன்று பொருள்களே. நமக்கெதிரில் காணப்படாமையால் ஈசனில்லை என்போமானால் வாயு ஆகாசங்களும் காணப்படாமையால் அவ்விரண்டையும் இல்லையென்றுசொல்ல வேண்டி

யதாகும். பிரத்தியக்ஷமாய்க் காணப்படாவிடினும் யுக்தியனுபவங்களுக்கொட்டிய சாஸ்திரங்களால் கண்டு நிச்சயிக்கப்பட்டிருக்கும் வாயு ஆகாசங்களை இல்லையென்பது உசிதமா? இல்லையன்றே.

பொருளை நேரில் காணவிட்டாலும் அதனாலேற்படும் செய்கைகளைக்கண்டு பொருளை நிச்சயித்துக்கொள்கின்றனம். இதுவே அநுமானம் என நமது சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றது.

உதாரணமாக, நள்ளிருளில் வீட்டிற்குள் உடம்பு முழுதும் போர்த்திக்கண் மூடிப்படுத்திருக்கும் காலத்தில் கேட்கப்படும் இடிச்சத்தத்தைக் கொண்டு நேரில் காணப்படாத மேகத்தையுள்ளதென்று அனுமானித்துக்கொள்கின்றனம். மேகத்தைக்காணவிடினும் அதன்செயலாகிய இடிச்சத்தத்தைக்கொண்டு அதனையுள்ளதாக நிச்சயிப்பதுபோன்ற காரியங்கள் உலகில் ஏராளமாய் அனுபவத்திலிருக்கின்றன. உலகில் யாதேனும் ஓர் வேலைநடக்கவேண்டுமானால் அதனைச் செய்யும் வஸ்து ஒன்று இருக்கவேண்டியது அவசியம். பெரிய மரங்களை வேற் பிடுங்கிச் சாய்த்தல் கப்பல்களைக் கவிழ்த்தல் முதலிய அஸாத்தியவேலைகளைச் செய்துவிடும் பொருள் வாயுவே யன்றே! ஓர்விதமான உருவமுமில்லாமலிருந்துகொண்டு இப்படிப்பட்டகாரியங்களை எப்படிச் செய்கின்றதென்று யோஜிப்போமாயின் அது நமது புத்திக்கெட்டவில்லை. ஏதோ இப்படிப் பட்ட செயல்களை செய்யும் யோக்கியதை அதற்கிருக்கின்றதென்றே சொல்லவேண்டியதாகின்றது.

இவ்விதம் வாயு எனும் பூதத்தை நேரில் காணக்கூடா விடினும் அதன் குணமாகிய பரிசத்தையும் நமக்குப் பரிச உணர்ச்சியிராத போதும் தூரத்தில் காணப்படும் மரங்களின் அசைதலாகிய செய்கையையும் கொண்டு அத்தகைய செய்கைகளைச் செய்யும்பொருளாகிய வாயுவென ஒன்றுள்ளதாகத் தீர்மானிக்கின்றோம். இது போல ஈசன் எனும்பொருள் நம்மெதிரில் காணப்படாவிடினும் உலகெங்கும் நடை பெறுவதாகிய அவனது அரிய செயல்களைக்கொண்டு அச்செயல்களையுடையோன் ஒருவன் உள்ளவன் என்று நிச்சயிக்கத்தகும்.

இனி வாயுவின் செய்கையாகிய விருக்ஷசலனம் முதலியது பிரத்தியக்ஷமாய்க்காணப்படுகின்றமையால் அச்செய்கையையுடைய பொருள் ஒன்று இருக்கவேண்டுமென்று நிச்சயிக்கின்றோம். அதுபோல ஈசனது செயல் ஒன்றும் உலகில் பிரத்தியக்ஷமாய்க்காணப்பட வில்லையே? எனின் அல்ல. அதாவது வாயுவின் செயல்களைக்காட்டிலும் உலகில் நடைபெறுகின்றதாய் சொல்லப்படும் ஈசன்செயல் மிக்க நுட்பமாயிருக்கின்றமையால் எல்லோருக்கும் வெளிப்படையாய்க்காணப்படுகின்றதில்லை. இனி அத்தச்செயல் யாதென்றும் அது எதனால் நிகழுகின்றதென்றும் சற்று யோஜித்துப்பார்ப்போமாயின் ஈசனை யுள்ளபடி கண்டு கொள்ளலாம். சற்று யோஜித்துப்பார்க்கின் பிறகு புலப்படுவதாகிய செயல்கள் உலகில் ஏராளமாயிருக்கின்றன. உலகிலுள்ள ஸகல செயல்களும் ஒரே மாதிரியாய் வெளிப்படையாய்க் காணக்கூடுமென்பதல்ல. பொருள்களின் நிலைமைக்குத்தக்கபடி அவைகளுக்குச்செய்கைகள் ஏற்படுகின்றன. ப்ருதிவியிலும்

ஜலமும் ஜலத்திலும் அக்கினியும் அக்னியிலும் வாயுவும் வாயுவிலும் ஆகாயமும் நுட்பம். ஆதலின் அதனதன் நிலமைக்குத்தக்கபடி அதனதன் செய்கையும் முறையே நுட்பமாயமைந்திருக்கின்றது!

வாயுவின் செயலாகிய மரத்தை யசைத்தல் முதலியவைபோலப்பிரத்தியக்ஷமாய்க் காணக்கூடியனவாயிராவிடினும் உள்ளத்திலேயே நடைபெறும் சிந்தனை முதலிய மிகவும் நுட்பமான செயலைக்கொண்டு அந்தச்செயலைச் செய்யும் மனம் எனும் ஓர் பொருள் இருக்க வேண்டுமெனத்தீர்மானிக்கின்றோம்.

இதுவே மூளை, இதுவே ரக்தாசயம், இதுவே ச்வாஸாசயம் என்பதாக சரீரத்தின் ஸ்தூலாவயவங்களை கத்தி முதலியவைகளாலறுத்துச் சோதித்துப்பிரத்தியக்ஷமாகக்காண்பிப்பது போல, கத்தி முதலிய கருவிகளால் அறுத்துச் செய்யுப் பரிசோதனையில் மிகவும் சிறந்தவர்களான (டாக்டர்கள்) வைத்தியர் இதுவே மூளை, இதுவே ச்வாஸாசயம், இதுவேரக்தாசயம் என்பதாகப்பிரத்தியக்ஷமாய்ச் சரீரத்திலுள்ள ஸ்தூலாவயவங்களைக் காண்பிக்கின்றனரே. இவ்வாறு கத்திகொண்டறுத்து “இதுவேமனஸ்” எனக்காண்பித்த வைத்தியர் இதுகாலம் வரையில் யாரேனும் ஒருவரிருந்ததாக ரூபிக்க முடியுமா? எவ்வளவோ அனுபோகமுடைய வைத்தியர்களின் பரிசோதனைக்குமகப்படாமல் பூதக்கண்ணாடி முதலியஎக்கருவிகளாலும் காண இயலாமல் இப்படியோர் பதார்த்தமுள்ளதென யோஜித்துச் பார்க்கினும் எட்டாததேயாயினும் அபாரமாயும் அற்புதமாயுள்ள சிந்தனைகளைச் செய்துகொண்டிருக்கும் பொருளாகிய மனஸ் எனும் ஓர் பதார்த்தமிருக்கவேண்டுமெனத் தீர்மானிப்பதுபோல, அதனிலும் நுட்பமாய் உலகில் நடைபெற்று வரும் ஆச்சரியமான செயலைக்கொண்டு அந்தச் செய்கையைச் செய்யும் அற்புத வல்லமை பொருந்திய பொருள் ஒன்றுள்ளதெனத் தீர்மானிப்பது குற்றமற்றதேயாம் என்றறிக.

கருவிகரணங்களின் பரிசோதனைக் கெட்டாத பொருளை அறிவின் ஆழ்ந்த விசாரணையாலேயே தெரிந்துகொள்ள வேண்டுமென்றி வேறுவழியில்லை. ஓர் பொருளிருக்குமிடத்தில் மற்றோர் பொருள் இராதென்பது ஸ்தூலமாய் அறியப்படுகின்றது. மாம்ஸம் ரத்தம் நரம்பு எலும்பு முதலியவையடர்ந்து நெருங்கியுள்ள இத்தேஹத்தினில் மனம் எனும் ஓர் பொருளிருந்துகொண்டு ஆச்சரியமான வேலைகளைச்செய்கின்றதே. இது எப்படி நடக்கின்றதெனின் அதற்கு விடை யாது சொல்லுவது? ஏதோ இப்படி இது ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது என்றே சொல்லவேண்டியதாகின்றது. புத்தியைச் சற்றுத் தீக்ஷணமாய்ச் செலுத்திப் பார்க்கின் உலகில் ஒரே இடத்திலிருந்து ஏக காலத்தில் ஆச்சரியமாகியகிரியைகளைச் செய்துகொண்டிருப்பவைகளாகிய பல பொருள்களுள்ளன என்று அறியப்படுகின்றது. அதாவது பிருதிவிஜலாக்கினிகள் இருக்குமிடத்திலேயே வாயுவும் வாயு விருக்குமிடத்திலேயே ஆகாசமும் இருக்கின்றதன்றோ. இதனிலும் ஸூக்ஷ்மமாய் மனஸ் எனும் பொருளானது மாம்ஸம் ரக்தம் முதலியவைகளடர்ந்திருக்குமிடத்திலேயே இருக்கின்றது. இப்படியிருந்துகொண்டு அதனதன் வேலையையும் செய்து கொண்டிருக்கின்றதன்றோ. அவ்வாறே இவ்

வளவு பொருளிருக்கினும் அவைகளினும் ஸூக்ஷ்மமாய் உலகெங்கும் நடைபெறும் ஆச்சரியமாகிய செயலொன்றிருக்கின்றது. இனி அச்செயல் யாதெனின் அதனைச் சற்றுச் சுருக்கமாய் நிரூபிப்பாம்.

“தமக்குத் துன்பம் வரக்கூடாது; இன்பமே வரவேண்டும்” எனும் எண்ணத்தைக்கொண்டே ஸகல ஜீவர்களும் தத்தம் யோக்கியதைக்குத் தக்கவாறு முயற்சியைச் செய்துகொண்டிருக்கின்றனர். அங்ஙனமாயினும் ஓரோர் ஸமயம் எவ்வளவோ அரிய முயற்சிகளைச் செய்தும் அவையெல்லாம் சிறிதும் பயன்படாமல் பெருந்துன்பத்திற்கே ஆளாகும்படியாகின்றதன்றோ. அப்படி இவர்களது செய்கையாகிய முயற்சிகள் பயனற்றவையாதற்குக் காரணம் யாதேனும் ஒன்றிருக்கவேண்டுமென்பது நிச்சயமல்லவா! இவர்களது முயற்சியை வீணாக்கும் பொருள் யாதென்பது நமது ஸ்தூலமாகிய பார்வைக்குத் தெரியாவிடினும், நம் திருஷ்டிக்கெட்டாமல் இதற்குப் பிரதியாய் நடந்துகொண்டிருக்கும் அரிய பெரிய முயற்சியொன்று இராவிடில் இவர்களது முயற்சிபயனற்றதாவதற்கு நியாயமில்லை என்பது அறியப்படுகின்றதன்றோ.

சங்கை: முயற்சியை எப்படிச் செய்தால் அத்துன்பம் வராமற் போகுமோ அப்படிச் செய்திருந்தால் அத்துன்பம் வந்திருக்காது. புருஷயத்தினத்தைச் சரியாய்ச் செய்யாததினாலேயே அந்தந்த துன்பத்திற் காளாகும்படியாகின்றதென்று சொல்லலாமே! இதற்கென வேறு காரணத்தைத் தேடவேண்டியதில்லையே எனின் இது அறியாமையேயாம். ஏனெனின், அபாரமான தேகபலமும் புத்திபலமும் பொருந்தியவராய் ஆக்ஞை செல்வம் முதலிய ஏனைய ஸம்பத்துகளிலும் மிக்கப் பெருமைபெற்றவராயுள்ள மனிதரும் “இத்துன்பம் வராமலிருக்கும் வழியை நாம் தேடிக்கொள்ளவேண்டும்” எனப் பற்பலவாறாய்ச் செய்யும் அரியமுயற்சிகளும் வீணாய்ப்போய் முடிவில், அங்ஙனம் எத்துன்பத்திற்கு பயந்து முயற்சியைச் செய்தனரோ அத்துன்பத்திற்கே உட்படும்படியாகின்றதே! அதற்கு எக்காரணத்தைச் சொல்ல இயலும்? அந்தோ காலஞ்சென்ற சக்கிரவர்த்தியாகிய நமது ஏழாவது எட்வர்டு மஹாராஜாதிராஜாவாகிய ஸ்ரீமானுக்கு மரணம் வரக்கூடாதென நம்சக்கிரவர்த்தியாகிய ஜார்ஜமஹாராஜன் முதலிய ராஜவர்க்கத்தார் செய்வித்த சிகிச்ஸையிலும் சிறந்த சிகித்ஸையைத் தற்காலத்தவராகிய மற்றவர் செய்ய இயலுமோ? அவர்களுக்கு அனுபவமுள்ள மேதாவிகளாகிய டாக்டர்கள் கிடைக்கவில்லையா? அந்த ஸ்ரீமான் உயிர் பெற்றுய்ய வேண்டுமென்பதைக்குறித்துச் செய்யப்பட்ட முயற்சியும் போதுமானதல்ல என்பது உசிதமாகுமா? அவ்வளவிருந்தும் பயன்படாமற் போச்சுதே? ஆதலால் இவர்கள் எவ்வளவு அரிய முயற்சியைச் செய்யினும் இவ்வளவையும் பயனற்றதாகும்படிச் செய்வதும் நம்மால் பிரத்தியக்ஷமாய்க் காணக்கூடாததுமாயுள்ள ஏதோ ஓர் ஆச்சரியமாகிய செயல் உலகில் நடந்துகொண்டிருக்கின்றது என்பதை ஒத்துக்கொள்ளவேண்டியது அவசியமாகின்றது.

இனி மனிதர்களது முயற்சி வீணாவதுபோல ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் பறவைகளின் முயற்சியும் நீரில்வாழும் ஜந்துக்களின் முயற்சியும் வீணாகின்ற

தும் பிரத்தியக்ஷமாய்க் காணலாம். இனி இவ்விந்தியா தேசத்திலுள்ளவரது முயற்சிமாத்திரம் வீணாய்ப்போகின்றது மற்றதேசத்திலுள்ளவரது முயற்சியெல்லாம் ஸபலமாகின்றதே எனச்சொல்ல முடியுமா? இம்மட்டுமல்ல. இவ்வாசியா முதலிய ஐந்து கண்டங்களிலுள்ள எத்தேசத்திலும் இவ்வாறே ஓரோர் ஸமயம் அங்குள்ளவரது அரிய முயற்சிகளும் வீணாய்ப்போகின்றன என்பதை உலக வியல்பறிந்தவர் அறியாதிரார். ஆதலால் இங்ஙனம் ஜீவர்கள் வஸிக்குமிடமெல்லாம் இவ்விஷயம் நடைபெறுகின்றமையால் ஜீவர்களின் முயற்சிகளை வீணாக்குகின்றதெனச் சொல்லிய அவ்வற்புதமாகிய செயல் உலகெங்குமிருக்கின்றது. அன்றியும் லோகாந்தரமெனும் இரண்டாம் பாகத்தில் சூரியசந்திராதிக்ருஹ நக்ஷத்திராதிகளெல்லாம் ஜீவகோடிகள் வஸிக்குமிடமாகிய லோகாந்தரமே என நிர்ணயிக்கப்பட்டதன்றோ. அப்படிப்பட்ட லோகாந்தரங்களிலும் இவ்வரியசெயல் நடைபெறுகின்றதாக நம் இதிஹாஸபுராணங்களால் நிச்சயிக்கத்தகும். அதாவது

𑌯𑌨𑍍𑌤𑌾 𑌯𑌸𑍍𑌯 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌹𑌰𑌣𑌂 𑌵𑌜𑍍𑌰𑌂 𑌸𑍁𑌰𑌾
𑌸𑍈𑌨𑌿𑌕𑌾𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍋 𑌦𑍁𑌰𑍍𑌗𑌮𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌃 𑌖𑌲𑍁 𑌹𑌰𑍇𑌰𑍈𑌰𑌾
𑌵𑌤𑍋 𑌵𑌾𑌰𑌣𑌃 । 𑌇𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌬𑌲𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑍋𑌽𑌪𑌿 𑌬𑌲𑌭𑌿
𑌦𑍍𑌭𑌗𑍍𑌨𑌃 𑌪𑌰𑍈𑌃 𑌸𑌙𑍍𑌗𑌰𑍇 ॥

என முன்னோர் கூறியபடி புத்தியில் நிகரற்றவரும் வருங்கால இயல்பை நன்கறியும் யோக்கியதையுடையவரும் ஸகலகலைகளுமுணர்ந்தவருமான பிருஹஸ்பதி பகவானை மந்திரியாய்ப் பெற்றளோன். அவனது ஆயுதமோவெனின் எவ்விடத்திலேவிவிடினும் ஸபலமாகவே திரும்பும் இயல்புடைய வஜ்ஜிராயுதம். ஸேனைகளோ ஆகாரம் நித்திரை முதலிவைகளை வேண்டாதவரும் நம்மைப்போல ஜனனமரணாதிகளுக்குட்பட்டிராதவருமாகிய தேவர்கள். ஆகாசத்தினில் நடுநாயகமாய் ஓர்வகை வாயுஸ்கந்தத்தினால் நிலைபெற்றுள்ளதாகிய ஸ்வர்க்கமெனுமிடம் இருப்பு. ஸர்வஜகந்நாதனாயுள்ள ஸ்ரீ ஹரியினது பரமானுக்கிரஹமோ கிடைத்திருக்கிறது. எங்கு சென்றாலும் ஜயசீலமாகவே திரும்பும் ஐராவதமென்பது வாஹனம். இவ்வளவு ஆச்சரியமான யோக்கியதையுடையவனாயினும் அவ்விந்திரன் அஸுரர் நிமித்தமாய் ஸகல இன்பங்களையுமிழந்து இருப்பிடமுமிழந்து நிர்க்கதியாய்த் தவித்துக் கதறும்படியாய் ஏற்பட்டதென்பது முதலிய இதிகாஸபுராண சரிதங்களால் அந்த அற்புதமாகிய செயலுக்கு பிரும்மாண்ட கோடிகளிலுள்ள ஸகல ஜீவர்களும் உட்பட்டே இருக்கின்றனர் என்பது நன்றாயறியக்கூடியது.

இனி ஜீவர் தமக்கியல்பாயுள்ள சக்தியிலும் மிகுதியாகிய சக்தியை யோகாப்பியாஸம் முதலியவைகளால் ஸம்பாதித்துக்கொண்டால் அப்போதாவது அச்செயலை மீற முடியுமோ எனின் அல்ல. அதாவது எவ்வளவு அரிய யோகஸித்திகளைக் கைக்கொண்டாலும் சிறு துரும்பு ஓர் பெரியமலையை எங்ஙனம் சிறிதும் சலிக்கச்செய்ய முடியாதோ அப்படியே அந்தச்செயலைச் சிறிதும் மீற முடியாது.

இங்ஙனம் ப்ருமாண்ட மெங்கும் நடைபெறுகின்றதும் எவராலும் மீற வொண்ணாததுமாயிருக்கும் அந்தச்செயலைச் சற்றுக்கவனித்தால் இதனிலும் அரியதாகிய ஓர் உண்மை விளங்கும். அதாவது, செய்கை கிரியை எனப்படும் பதார்த்தமானது செய்வோன் கர்த்தா என்னப்படும் ஓர் ஆச்ரயப்பொருளின்றி தனித்திராது. ஆச்ரயமின்றி செய்கை மாத்திரமுள்ளதென்பது உலகினில் ஸம்பவமில்லையாதலால், செய்கையையுடைய பொருளை நேரில்காண முடியாவிடினும் செய்கையைக் கொண்டு அதற்காச்ரயமாயுள்ள பதார்த்தத்தை யுள்ளதென்று ஊஹித்தறிந்து கொள்ளலாம். உலகெங்கும் நடைபெறுகின்றதாகிய அவ்வரிய செயலைக்கொண்டு அதனையுடையதாகிய ஆச்ரயமான ஓர் பொருள் உலகெங்கு மிருக்கின்றதென்று நிச்சயமாய் விளங்குகின்றது.

இனி அந்தப்பொருளின் பெயர் யாதெனின் மீற வொண்ணாத செயலையுடையது எனும் பெயரே அதற்குத்தகும். இனி அந்தச்செயலை பிரிதிவியினதென்றுவது ஜலத்தினுடைய தென்றுவது அக்னியினுடைய தென்றுவது வாயுவினுடைய தென்றுவது ஆகாசத்தினுடைய தென்றுவது மனஸினுடைய தென்றுவது சொல்ல இயலாது. இவைகளுக்கந்நியமான யாதோ ஓர் பொருளினுடையது என்பதே நிர்ணயம் என்றறிக.

சங்கை, "தமக்கித்துன்பம் வரக்கூடாது" என ஸகலஜீவர்களும் முயற்சித்தல் உண்மையே. ஆனால் அது பயன்படாமல் போவதைக்கொண்டு அதற்கெதிரிடையான செயலையுடைய வேறொருபொருளிருக்கவேண்டுமெனக் கொள்ளுவது என்? இன்பம் துன்பம் முதலியவை மனஸைப்பற்றிய தென்பதில் ஸந்தேகமில்லையே. மனஸினால் இன்பமெனக்கொண்டால் அது ஸுகமாகின்றது. துன்பமெனக்கொண்டால் துக்கமாகின்றது. ஆதலால் ஸுகதுக்கங்கள் அவரவர் மனஸினாலேயே வருவன எனக்கொள்வது உசிதமாயிருக்க இதற்கென எதிரிடையான செயலையுடைய வேறொரு பொருள் உலகெங்கும் இருக்கின்றதென்பது அநுசிதமே என்பதாம்.

இனி யிதனுண்மையறிக. மனஸினாலேயே ஸகல ஜீவர்களும் சுகதுக்கங்களைக் கற்பித்துக்கொள்ளுகின்றனர் என்பது மிகவும் அறியாமையேயாம். ஸகல ஜீவர்களும் விரும்புவது இன்பத்தையேயன்றி ஒருவரும் தமக்குத் துன்பத்தை விரும்பமாட்டார். மனஸினாலேயே இன்பதுன்பங்களைக் கற்பித்துக்கொள்ளுவது என்பது உண்மையாயிருக்கின் ஸகல ஜீவர்களும் எப்போதும் தத்தம் மனஸை என் இன்பமாகவே வைத்துக்கொள்ளக்கூடாது? இன்பமாகவே தம் மனஸைக் கற்பித்துக்கொள்ளவேண்டுமென எவ்வளவு முயற்சியைச் செய்யினும் புத்திர பார்யாதிகள் உயிர் நீங்கும்போது அது சிறிதுமியலவில்லையே! மஹாமேதாவிகளான மஹருஷிகளும்கூட மஹத்தான துன்பங்களை யனுபவித்ததாக இதிஹாஸபுராணங்கள் கூறுகின்றனவே. ஸுகதுக்கங்கள் மனக்கற்பனை மாத்திரமேயெனின் அது இன்பத்திற்குமாத்திரம் ஒருவாறு பொருந்துகின்றதாய்க் காணப்படுகின்றது. துன்பத்தை நோக்கச்சிறிதும் ஒவ்வவில்லையே. இன்ப துன்பங்கள் மனக்கற்பனை மாத்திரமே எனின் உலகிலுள்ள ஸகல ஜீவரும் ஓர்

க்ஷணமுமோய்வின்றி எப்போதும் மனதை ஸுகமாகவே ஏன் கற்பித்துக்கொள்ளக்கூடாது? அப்படியாயின் உலகில் துன்பமனுபவிப்பரே இல்லாமற்போக வேண்டுமென்றல்லவோ ஏற்படும். ஆதலால் மனக்கற்பனையே துன்பமென்பது தவறேயாம்.

இனி அவரவர் பூர்வஜன்மங்களில் செய்திருக்கும் வினையே அதாவது கர்மாவே ஜீவர்களின் முயற்சிகளையெல்லாம் வீணாகச்செய்து பலமான துன்பத்திற்கு உட்படுத்துகின்றதென்பதும் குற்றமாகுமோ? இதற்கென வேறுபொருளையங்கீகரிக்கவேண்டியதில்லையே? எனின் இதனைச் சற்றாராய்வாம்.

கர்மா என்பது வினை. அது தொழில் மாத்திரமேயாதலால் அது அறிவுப்பொருளல்லாத அசேதநமேயாம். அசேதனமாவது இந்தக் காரியத்திற்கு இது பயன் என்பதை அறிந்துகொள்ளுதற்கு இயலாதது என்பதாம். கர்மாவுக்குத் தக்கபடி இன்பதுன்ப மேற்படுகின்றதென்பது நமக்கு ஸம்மதமே. ஆனால் கர்மாமாத்திரமே அதற்குப் போதும் என்பது குற்றமே என்றறியவேண்டியது. யுக்தியனுபவங்களைக் கவனித்தால் கர்மாவுக்குத் தக்கபடியுள்ள பயனை அறிந்து அவ்வாறு அவரவருக்குத்தரும் செயலையுடைய பொருள்வேறொன்று இருக்க வேண்டுமென்பதே நிர்ணயம். உலகில் எங்கேயாவது கூலிக்காரன் செய்யும் வேலைமாத்திரமே அதற்குள்ள கூலியை அவனுக்குக்கொடுப்பதுண்டா? கூலிக்காரன் செய்யும் வேலையை அறிவோனாகிய சேதனனான எஜமானனேயன்றோ அதற்குள்ள கூலியைத்தருகின்றான். படிக்கும் பையன்கள் எழுதியவிடைகளை பரீக்ஷை தேரியதென்றாவது தவறியதென்றாவது சொல்லுகின்றதென்பது உலகிலுண்டா? இல்லையே? அவ்விடைப்பத்திரிகைகளைக் கவனிக்கும் பரீக்ஷகரேயல்லவோ தேரியதென்றாவது தவறியதென்றாவது சொல்லவேண்டும். உலகில் கூலிக்காரன் செய்யும் வேலையே அதற்குள்ள கூலியைத்தருதலையாவது பையன்களதுவிடையே பரீக்ஷை தேரியதென்று சொல்லுதலையாவது கண்டிருப்போமானால் அதனைத் திருஷ்டாந்தமாகக்காட்டி கர்மாவே இன்ப துன்பத்தைத் தருகின்றது என்பதை சாதிக்கப்பார்க்கலாம். அப்படிக்கின்றி எந்த திருஷ்டாந்தத்தைக் கவனித்தாலும் சேதனனாகிய ஒருவனாலேயே செய்கைக்குப்பயன் ஏற்படுகின்றதாக அறியப்படுகின்றமையால் கர்மாவே இன்பதுன்பங்களில் போதுமானது என்பது மிகவும் அநுசிதமேயாம்.

இனிக்காலத்தினாலாவது அல்லது ஸ்வபாவத்தினாலாவது இன்பதுன்பம் வருகின்றதெனின் அதுவும் குற்றமே. காலம் ஸ்வபாவம் முதலியன எவ்வளவு கூடினாலும் அவை அறிவில்லாத அசேதனங்களேயாதலால், எவ்வளவு கோடி மண்குவியலிருப்பினும் குலாலனின்றி குடமுண்டாகாததுபோல கர்மாவையும் கர்ம பலத்தையும் அறிவோனும், எவராலும் மீறவொண்ணாத சக்தியுடையோனும் ஆகிய ஓர் பேரறிவாளனிராமல் இவர்களுக்குக் கர்மபலபோகம் நிகழாதென்றறிக.

இனிக்கர்மாவென்று ஒன்றை உள்ளதாக வைத்துக்கொள்வதனாலன்றோ கர்ம பலத்தைத்தருவோனாகிய ஓர் சேதனன் வேண்டும் என்று சொல்ல வேண்

டியதாகின்றது. கர்மாவையே ஒத்துக்கொள்ளாவிடில் என்ன குற்றம். ஏதோ ஸ்வபாவமாகவே எல்லாம் நடைபெறுகின்றதென்று சொல்லக்கூடாதோ எனின் அல்ல.

உலகில் ஸகல ஜீவர்களுக்கும் ஒன்றிற் கிருப்பதுபோல மற்றொன்றிற்கிராமல் ஸுகதுக்கங்களில் தாரதம்மியங்காணப்படுகின்றதே! அதற்குக்காரணம் யாதெனின் சொல்ல வேண்டும். ஸ்வபாவமே அதற்குக்காரணமெனின் காலத்தின் ஸ்வபாவமா அல்லது தேசத்தின் ஸ்வபாவமா அல்லது வஸ்துவின் ஸ்வபாவமா என்பதை யோஜிக்க வேண்டும். காலத்தின் ஸ்வபாவமே காரணமெனின் வஸந்த காலத்திலோ அல்லது கிரீஷ்மகாலத்திலோ மற்றுமுள்ள காலத்திலோ ஸகல ஜீவர்களுக்கும் ஒரே விதமாய் இன்பமாவது துன்பமாவதிருக்க வேண்டும். உலகில் அப்படிக்காணப்படாமையால் அது மிக்கத்தவறேயாம். தேசத்தின் ஸ்வபாவமேகாரணமெனின், அமேரிக்கா முதலிய இடங்களில் உள்ளவரெல்லோரும் ஸுகத்தையே அனுபவிக்கின்றனரென்றாவது ஆப்ரிக்கா முதலிய இடங்களில் உள்ளவரெல்லோரும் துன்பத்தையே அனுபவிக்கிறார் என்றாவது சொல்ல வேண்டியதாகும். அவ்விதம் காணப்படுவதில்லையே! இவ்விடத்தில் உள்ளது போல்வே அவ்விடத்திலும் எவ்வளவோ தாரதம்மியங்காணப்படுகின்றதே. ஆதலால் அதுவும் உசிதமாகாது. இனி வஸ்துவின் ஸ்வபாவத்தினால் இன்பதுன்பமேற்படுகின்றதெனின், ஒரே வஸ்து ஓர் காலத்தில் இன்பத்திற்கும் மற்றோர்தில் துன்பத்திற்கும் ஹேதுவாகின்றதாதலால் அப்படியும் நிர்ணயிக்கமுடியவில்லை.

இனி ஸ்வபாவத்தினால் இன்பதுன்பங்களேற்படுதல் என்பதை ஒத்துக்கொள்ளாவிடினும், ஏதோ தற்செயலாய் ஸுகதுக்கங்களேற் படுகின்றன என்று சொல்லலாமே எனின் அதுவும் உசிதமல்ல. தற்செயலாவது, தனது செயலா? அல்லது பிறர்செயலா? யாதென்று கொள்ளுவது, இனித் தன்செயலுமல்ல பிறர் செயலுமல்ல ஏதோ அகஸ்மாத்தாய் (காரணமின்றி) நடைபெறுகின்றதென்னலாமே எனின் அல்ல. உலகில் காரணமின்றி நடைபெறுவதாய் ஓர் காரியமும் ஸம்பவிக்கின்றதில்லை. காரியம் காரணத்தினாலேயே ஏற்படவேண்டுமென்பதே நியதமாயிருக்கின்றது. ஆதலால் ஜீவர்களின் இன்பதுன்பங்களாகிய காரியத்திற்கும் யாதானும் காரணமுள்ளதென்றே சொல்லவேண்டும். உலகில் யாதானும் ஓர் காரியம் ஏற்பட்டால் அதற்கு ஓர் காரணமிருக்கின்றதேயன்றி காரணமில்லாமல் ஏற்படுகின்றதென்பது திருஷ்டாந்தமாய்க் காணப்படுவதில்லை. காரணத்தை நேரில் காணாவிடினும் காரியத்தைக்கண்டதும் அதற்குக் காரணமிருக்க வேண்டும் என்றே தீர்மானிக்கவேண்டுமென்பதே அறிவாளர் கொள்கை.

கர்மா என்பதை ஒத்துக்கொள்ளாமலிருப்பதற்குக் காரணமானது பிரத்தியக்ஷமாய்க் காணப்படவில்லை என்பதேயன்றோ. பிரத்தியக்ஷமாய்க் காணப்படாததை ஒத்துக்கொள்ளுவதில்லையெனின் பிரத்தியக்ஷமொன்றே பிரமாணம் என்பதாகின்றது. பிரத்தியக்ஷமல்லாதது பொய்பிரத்தியக்ஷமே உண்மையெனின், ஆகாயம் ஏற்றுச்சால் கவிழ்த்திருப்பது போலக் காணப்படுதல் பிரத்தியக்ஷமேயன்றோ. ஆதலால் அதுவே உண்மை என்று சொல்லவேண்டியதாகின்றது.

அன்றியும் ஆகாயம் கரிய நிலம்போலவும் நக்ஷத்திரங்கள் தீப்பொறிகளாக வும் காணப்படுகின்றன. இவைகள் உண்மையில்லையே! தோற்ற மாத்திரமே யன்றோ. பிரத்தியக்ஷமாய்க்காணப்படுவதே உண்மையெனின் இவைகளை நிஜ மென்றல்லவோ சொல்ல வேண்டியதாகின்றது. ஆகாயத்திற்கு உருவமில்லை யாதலால் அதனில் கருநிறம் இருக்க நியாயமில்லை எனும் யுக்தியைக்கொண்டு பிரத்தியக்ஷமாய்க்காணப்படுவதையும் பிசகென்று கண்டு கொள்ளுகின்றோம். விவேசனம் செய்து பார்க்கின் பிரத்தியக்ஷத்திலும் யுக்தி சாஸ்திரங்களே சிரே ஷ்டமாகியப்பிரமாண மென்றே அறியப்படுகின்றது.

தலவத் த்ருஶ்யதே வ்யோம கத்யோதோ ஹவ்யவாடிவ |
ந தலம் வித்யதே வ்யோம்நி ந கத்யோதே ஹுதாஶந: ||

ஆகாயம் நிலம்போலும் நக்ஷத்திரம் நெருப்புப்போலும் இருக் கின்றது. ஆகாயத்தில் நிலமில்லை நக்ஷத்திரம் நெருப்பல்ல.

தஸ்மாத் ப்ரத்யக்ஷத்ருஷ்டேபி யுக்தமர்த்தம் பரீக்ஷிதும் |
பரீக்ஷ்ய ஜ்ஞாபயந் ந்யாயம் ந தர்மாத் பரிஹீயதே

ஆதலின் பிரத்தியக்ஷமாய்க்காணப்பட்ட பொருளையும் நியாய வாயிலாய் விசாரித்துப்பரீக்ஷிப்பது யுக்தம். பரிசோதித்து விஷயத்தை நிர்ணயித்தல் தர்மத்தினின்றும் வழுவாது

என்பது முதலிய நாரத ஸ்ம்ருதி வசனத்தாலும் இவ்விஷயமே நிர்ணயிக் கப்பட்டிருக்கின்றது. உலகானுபவத்தைக் கவனிப்போமானால் பிரத்தியக்ஷ மொன்றே பிரமாணம் என்று சொல்லுவது பிசகு என்றறியப்படுகின்றது.

ஆதலால் கர்மாவானது பிரத்தியக்ஷ மல்லாவிடினும் யுக்தி வாயிலாய் விசாரித்துப்பார்க்கும்போது ஒத்துக்கொள்ளாமல் வேறுகதி காணப்படுவதில்லை. ஆதலால் கர்மாவுள்ளதென்பதும் கர்மாவுக்குத்தக்கபடி இன்பதுன்பங்களை ஓர் பேரறிவாளனே தருகின்றான் என்பதும் வாஸ்தவமேயாம்என்க. இந்தப் பேரறிவாளனையே வேதாகம இதிஹாஸபுராணாதி ஸகலநூல்களும் போற் றுகின்றன. பூர்வம் கடும்பாபங்களை மிகவும் ஸந்தோஷமாய்ச் செய்துபோட்டு, ஜீவர்கள் இந்தப்பேரறிவாளனது ஆணையால் இப்போது அவைகளுக்குப் பயனாக வரும் விபத்துகளுக்குட்பட்டு மிகவும் துயரத்தை யனுபவிக்கின்றனர். அப்படி யவனாணையால் வரும் விபத்தை மீறிப்போடவேண்டுமென அரிய பெரிய யுக்தி களைக்கொண்டு எவ்வளவோ முயற்சியைச் செய்தும் ஜீவர் முடிவில் அவ்வளவும் வீணாய்ப்போய் அவ்விபத்துகளுக்கே உட்படும்படியாதலைச் சற்று நன்கு கவனித் தால் அவனாக்ஞையின் பெருமை நிகாற்றதென்பது நன்றாய் விளங்கும். அவ் விறைவனது ஆக்ஞையின் வல்லமையே ஸூர்ய சந்திராதி கிரஹங்களையும் ஸகல புவனமண்டலங்களையும் கால சக்கரத்தில் இடைவிடாது சுழன்றுகொண்டே யிருக்கும்படிச் செய்திருக்கின்றது. இன்னம் இந்திராக்நி முதலிய தேவரும் நாரத வஸிஷ்டாதி மஹருஷிகளும் அவ்வாக்ஞையாலேயே தத்தம் தொழிலை நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

"𑌭𑍀𑌷𑌾𑌽𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌾𑌤𑌃 𑌪𑌵𑌤𑍇 𑌭𑍀𑌷𑍋𑌦𑍇𑌤𑌿 𑌸𑍂𑌰𑍍𑌯𑌃। 𑌭𑍀𑌷𑌾𑌽𑌸𑍍𑌮𑌾𑌦𑌗𑍍𑌨𑌿𑌶𑍍𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍍𑌚 । 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌧𑌾𑌵𑌤𑌿 𑌪𑌞𑍍𑌚𑌮 𑌇𑌤𑌿 ॥"

> இவனிடம் பயத்தினால் வாயு சலிக்கின்றான். இவனிடம் பயத்தினால் சூர்யன் உதிக்கின்றான். அக்நியும் இந்திரனும் தத்தம் வேலையில் ஜாகரூகராயிருத்தலும் இவனிடம் பயத்தினாலேயே! காலனும் தனது கிரியையை இடைவிடாது நடத்துவதும் இவனுடைய ஆணையினாலேயாம்

எனும் தைத்திரீயம் முதலிய சுருதிவாக்கியங்களாலும் இவ்விஷயமே உபதேசிக்கப்படுகின்றது.

இங்கு ஓர் சங்கை; அதாவது இந்த சுருதி நிர்க்குணமாகிய ஆத்மவஸ்துவையன்றோ போதிக்கின்றதெனப் பெரியோர் சொல்லுகின்றனர். இப்படியிருக்க ஜகதாக்ஞா காரணகிய ஸகுணனை பிரதிபாதிக்கின்றதெனின் அதை எப்படி ஒத்துக்கொள்வதென்பதாம்.

இனி யிதனுண்மையறிக. இந்த சுருதியில் ஸாக்ஷாத்தாக ஸகுணப்ருஹ்மமாகிய இறைவனே பிரதி பாதிக்கப்படுகின்றான். இதனை விட்டு நிர்க்குணத்தையே பொருளாகக்கொண்டால் "பீஷா" பயத்தினால் என்பது முதலிய சொற்கள் பிரவர்த்திக்க இடமில்லையன்றோ. ஆதலால் ராஜாவின் ஆக்ஞைக்குப்பயந்து நடக்கும் சேவகர் போல எவ்விறைவனது ஆணைக்குப்பயந்து வாயு வக்நீந்திராதிகள் நடக்கின்றனரோ அப்படிப்பட்ட ஸகுணப்ருஹ்மமாகிய இறைவனே இங்கு பொருளெனக்கொள்ள வேண்டியதென்பதை அறிக. அன்றியும் இந்த சுருதியின் பாஷ்யத்தில்

𑌵𑌾𑌤𑌾𑌦𑌯𑍋 𑌹𑌿 𑌮𑌹𑌾𑌰𑍍𑌹𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌃 𑌪𑌵𑌨𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑍇𑌷𑍍𑌵𑌾𑌯𑌾𑌸𑌬𑌹𑍁𑌲𑍇𑌷𑍁 𑌨𑌿𑌯𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌤𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑍍𑌤𑌰𑌿 𑌸𑌤𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌿𑌯𑌮𑍇𑌨 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌨𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌸𑍍𑌤𑌿 𑌭𑌯𑌕𑌾𑌰𑌣𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑍍𑌤𑍃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 । 𑌯𑌤𑌸𑍍𑌤𑍇 𑌭𑍃𑌤𑍍𑌯𑌾 𑌇𑌵 𑌰𑌾𑌜𑍍𑌞𑍋𑌽𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌭𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇।

> "மிக்க மஹிமையுடையவர்களாகிய வாயு முதலியவர் தாமே ஈச்வரர்களாயிருந்தும் மிகவும் ஆயாஸத்தை உடையதாகிய சலித்தல் முதலிய தத்தம் காரியத்தில் நியதமாகப் பிரவர்த்தித்து கொண்டிருக்கின்றனர். அப்படிப் பிரவர்த்தித்தல் பெரிய ஆக்ஞையுடையவனாய் மற்றொரு அதிபன் இருக்கும்போது யுக்தமேயாம். ஆதலால் அவர்களுக்கும் பயகாரணமான ஆக்ஞையுடையோனாகிய இறைவனிருக்கின்றான். ஏனெனின் அரசனிடம் ஸேவகர் போல அவர்கள் ப்ருஹ்மமாகிய இவ்விறைவனிடம் பயத்தினால் பிரவர்த்திக்கின்றனர்"

என சங்கரபகவத் பாதாசார்யஸ்வாமிகள் பாஷ்யத்தில் வியக்தமாய் ஸகுணனாகிய இறைவனையே போதித்திருக்கின்றவையால் இதுவே உசிதமென்பது இனிது விளங்குகின்றது.

இது மட்டுமென்பதல்ல.

"𑌯𑌦𑌿𑌦𑌂 𑌕𑌿𑌂𑌚 𑌜𑌗𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣 𑌏𑌜𑌤𑌿 𑌨𑌿𑌃𑌸𑍃𑌤𑌮𑍍 ।
𑌮𑌹𑌦𑍍𑌭𑌯𑌂 𑌵𑌜𑍍𑌰𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑌂 𑌯 𑌏𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍁𑌰𑌮𑍃𑌤𑌾𑌸𑍍𑌤𑍇 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿" ॥

"இந்த ஸகல ஜகமும் ஸகல ஜகத்திற்கும் பிராணன் போன்றுள்ள இந்தப்பரம்பொருளிருத்தல் பற்றி ஓர் நியமத்திற் கடங்கி சேஷ்டிக்கின்றது. இந்தப்பரம்பொருளானது ஓங்கப்பெற்ற வஜ்ஜிராயுதம்போல மிகவும் பயத்திற்கு ஏதுவாயுள்ளது. அதனையாரறிகின்றாரோ அவர் முக்தராகின்றனர்"

எனும் கடவல்லியாதி சுருதிகளிலும் இவ்வுண்மை போதிக்கப் பட்டிருக்கின்றது.

கூலிக்காரனுடைய வேலைக்குத்தக்க கூலியைத்தரும் யஜமானனால் அவனது வேலை நன்கு கவனிக்கப்பட்டிருப்பதுபோல, ஜீவர்களின் பூர்வ கர்மங்களுக்குத்தக்க பயனாகிய இன்பதுன்பங்களைத்தரும் இறைவனால் ஜீவர்களது செய்கைகளெல்லாம் நன்றாய்க் கவனிக்கப்பட்டிருக்குமென்பது நிச்சயமே. ஜீவர்கள் மனவினாலேயேயாவது அல்லது வாக்கு காயம் இவைகளினாலாவது நன்மை தின்மைகளைச் செய்கின்றமையால் அச்செயலுக்குப்பயன்தரும் ஈசன், மனவின் செயல்களையும் வாக்குக்காயங்களின் செயல்களையும் நன்றாயறிந்து கொண்டிருப்பவன் என்றேற்படுகின்றது. இவ்வாறு உள்ளீத்திலும் வெளியிலும் இருந்து கொண்டு ஸகல செய்கைகளையும் அறிந்துகொண்டிருக்கின்றவனாயினும் அவன் நம்மால் காணப்படுகின்றதில்லை. ஆதலால் அவனை ஸகல ஜீவர்களிடமும் உள்ள ரஹஸ்யமான பொருள் அதாவது "𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌗𑍂𑌢𑌃" என்பது தகும்.

பிரும்மாண்ட கோடிகளிலுள்ள ஸகல ஜீவராசிகளுக்கும் அவரவர் பூர்வ கர்மங்களுக்குத்தக்கபடி பயன்தருவோனாகிய இறைவன் ஸகல பிரும்மாண்டங்களிலும் வியாபகனாயிருப்பவன் என்பது நன்கு விளங்குகின்றது. அங்ஙனம் பிரும்மாண்டம் முழுதும் பரந்துள்ளவனை ஸர்வவியாபகன்(𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀) என்பது தகும்.

ஸகல ஜீவர்களும் தத்தம் வாஸனைக்குத்தக்கபடி சேஷ்டித்துக்கொண்டிருக்கின்றனர் என்பது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டது. அந்தவாஸனை அசேதனமாகிய ஜடப்பொருளாதலால் சேதனனாகிய ஓர் பிரேரகனை நிமித்தமாய்க்கொண்டே அது ஜீவர்களைச் சேஷ்டிக்கச் செய்யவேண்டுமென்பது நிர்ணயமாதலால் ஸகல ஜீவர்களுக்கும் வாஸனைக்குத்தக்கப்படி பிரேரகன் ஒருவன் பொது நிமித்தமாக இருக்கின்றான் என்றேற்படுகின்றது. அப்படிப்பட்ட பிரேரகனை அந்தராத்மா (𑌅𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾) என்பது தகும். இவனே ஜீவர்கள் மனவினாலா

வது வாக்கினாலாவது காயத்தினாலாவது யாதானும் சேஷ்டித்துக்கொண்டே யிருக்க அதனை நன்றாய்க் கவனித்துக்கொண்டு மிருப்பவன். ஆதலால் இவனை கர்மங்களுக்கு எதிரிலுள்ளவன் "𑌕𑌰𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃" "கர்மாத்தியக்ஷன் என்பது தகும். அன்றியும் கர்மங்களுக்கு அதிபதி என்பது பொருந்தும்.

இனி ப்ரிதிவி ஜலம் அக்கினி வாயு முதலிய பொருள்களின் உள்ளிலும் புறம்பிலும் வியாபித்துக்கொண்டிருக்கும் ஆகாயம் பிருதிவியாதி பூதங்களுக்கு ஆதாரமாகவே யிருக்கின்றதுபோல, ஸகல பிரும்மாண்டங்களிலும் வியாபகமா யிருக்கும் இவ்விறைவனை ஸர்வ பூதங்களுக்கும் ஆதாரம் என்பது உசிதம். இவ்வுண்மையே

𑌯𑌥𑌾𑌕𑌾𑌶𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌗𑍋 𑌮𑌹𑌾𑌨𑍍 ।
𑌤𑌥𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑍀𑌤𑍍𑌯𑍁𑌪𑌧𑌾𑌰𑌯 ॥

எங்ஙனம் எங்கும் செல்லுவதும் மஹத்துமாயுள்ள வாயு ஆகாசத்திலிருக்கின்றதோ. அங்ஙனம் ஆகாசாதி ஸகல பூதங்களும் என்னிடம் (பரம்பொருளிடம்) உள்ளவை என்றறிக.

என்பது முதலிய சுலோகங்களினால் அச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டிருக்கின்றது. இங்ஙனம் ஸகல பூதங்களுக்கும் ஆதாரமாயிருக்கும் இவ்விறைவனை "𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌧𑌿𑌵𑌾𑌸𑌃" ஸர்வ பூதங்களுக்கும் இருப்பிடமாயுள்ளவனென்பது தகும்.

ஸகல ஜீவர்களின் கர்மங்களையும் அறிந்துகொண்டு அவைகளுக்குத் தக்க பயனையும் தருவோனாகிய இவ்விறைவனுக்கு அச்செய்கைகளின் நிமித்தமாய் யாதானும் பற்று ஏற்படக்கூடுமோ எனின் அல்லவென்க. அதாவது அவன் அச்செயல்களில் ஸங்கம் யாதுமின்றி ஸாக்ஷிமாத்திரமாயுள்ளவன் என்பதறிக. ஆதலால் இவனை "ஸாக்ஷீ" என்பதே உசிதம்.

இனி உபநிஷத்தங்களில் முக்தரால் அனுபவிக்கப்படும் பொருள் நிர்க்குணமே என்றும் அவனுக்கந்நியமான பொருள் யாதுமில்லை என்றும் சொல்லப்படுகின்றதே. அதற்கு விரோதமாக இங்கு ஈஸ்வரன் ஸகுணன் என்று சொல்லியது எப்படிப்பொருந்தும்? எனின் இஃதறிக. முக்தி நிலைமையில் கேவலமாய் நிர்க்குணமாய் எந்தப்பொருள் எஞ்சி நிற்கிறதோ அதுவே ஶ்ரீக்தமொழிந்த வனையோருக்கு திவ்விய மஹாமாயாசக்தி விலாஸம் பொருந்தியுள்ளதும் உபாஸிக்கும் பக்தி கோடிகளுக்குக்கோரிய புருஷார்த்தத்தைத்தந்து அநுக்கிரஹிப்பதுமான ஸகுணபரம்பொருளா யிருக்கின்றது. உண்மை ஞானம் பெற்ற முக்தருக்கு அவனேகேவலமும் நிர்க்குணமுமாய் எஞ்சிநிற்கின்றனன். ஆதலால் அவ்விறைவனை கேவலன் "𑌕𑍇𑌵𑌲𑌃" "𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌶𑍍𑌚" என்பது தகும். ஆதலால்

𑌏𑌕𑍋 𑌦𑍇𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌗𑍂𑌢𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 ॥ 𑌕𑌰𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌧𑌿
𑌵𑌾𑌸𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌚𑍇𑌤𑌾 𑌕𑍇𑌵𑌲𑍋 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌶𑍍𑌚 ॥

ஒரேதேவன், எல்லாப்பூதங்களிலும் மறைந்துள்ளவன், எங்கும் வியாபகனாயிருப்பவன், எல்லாப்பூதங்களுக்கும் அந்தராத்மா, கர்மங்

களுக்கு அத்யக்ஷன், ஸர்வ பூதங்களுக்கும் இருப்பிடமாயுள்ளவன்,
ஸாக்ஷீ, சேதனன், கேவலன், நிர்குணனுமாம்.

என ச்வேதாச்வதரம் முதலிய சுருதிகள் கோஷிக்கின்றன. இவ்விறைவனதுபெருமையைச் சற்றுக்கவனிப்போமாயின் மனம் வாக்கு இவ்வகளில் ஒன்றிற்கும் அது எட்டாததாயிருக்கின்றது.

ஓர் வீட்டிலிருக்கும் ஈ எறும்பு கொசுகு கறையான் பேன் மூகடு முதலிய ஜீவராசிகளை இத்தனையென எண்ணிக் கணக்கிட்டுச்சொல்ல எவ்ராலாவது இயலுமா? தனக்கிணையாயுள்ள மேதாவி யுலகில் யாருமில்லை எனத்தீர்மானத்தைக்கொண்டிருக்கும் மனிதரெல்லோரும் ஒருங்கேகூடி முயன்றாலும் இக்காரியமியலாது என்பதே நிச்சயமே. இதற்கே அப்படியாயின் இவ்வுலகிலுள்ள ஸகல ஜீவராசிகளையும் கணக்கிடுவதைப்பற்றிப் பேசுவதற்குமிடமில்லை. இம்மட்டுமென்பதல்ல. இனி எண்ணிறந்த பலகோடி உலகங்களோடுகூடிய இந்த பிரும்மாண்டகோடிகளிலுள்ள ஸகல ஜீவர்களையும் இவ்வளவென்பதைப் பற்றி மனஸாலும் சிந்திக்க இயலுமா? ஸகல ஜீவர்களுக்கும் அவரவர் பூர்வ கர்மங்களுக்குத்தக்க பயனைத்தரும் இறைவனால் பிரும்மாண்டகோடிகளிலுள்ள ஸகல ஜீவர்களின் கர்மங்களும் அறியப்பட்டிருக்கவேண்டுமல்லவா! இப்படி ஸகலஜீவர்களின் கர்மங்களையும் அவைகளுக்குத் தக்கபடியுள்ள ஸுகதுக்கப்பயன்களையும் அறியாமல் கர்மபலதாதாவாக இருத்தல் இயலாது. அன்றியும் ஓர் ஜீவன்செய்த கர்மத்தை மற்றோர் ஜீவனுடையதாக எண்ணி மாறுபாடாகப்பயன் தருவோன் என்பதின்றி அவரவர் கர்மத்திற்குத்தக்கபயனை அவரவர்க்குச்சிறிதும்மாறுபாடின்றிக் கொடுப்பவனாயுமிருந்தாலொழிய கர்மபலதாதாவாயிருத்தல் பொருந்தாது. தவிரவும், எந்தெந்த ஜீவனது எந்தெந்த கர்மா எந்தெந்தகாலதேசங்களில் எப்படி எப்படிப் பயன்படவேண்டுமென்பதும் சிறிதும் மாறுபாடின்றி அவ்விறைவனால் அறியப்பட்டிருக்கவேண்டும். இவ்விதம் பிரபஞ்சத்திலுள்ள ஸகல ஜீவர்களையும் அவரவர் கருமங்களையும் அவைகள் பயன் படுவதற்குத்தக்க காலதேசங்களையும் அப்பயன்களையும்சிறிதும் பிசகாமல் அறிந்துகொண்டிருப்பவனது அறிவின் வல்லமையை என்னவென்று சொல்லத் தகுமெனின், அவனால் அறியப்படாத விஷயம் பிரபஞ்சத்தில்யாதுமில்லை என்றே சொல்லவேண்டுமென்றி அவனுடைய அறிவுஇப்படிப்பட்டதெனச்சொல்ல எவராலுமியலாது. எவனால் அறியப்படாத விஷயம் யாதுமில்லையோ அவனே ஸர்வஜ்ஞன் ஸஸர்வஜ்ஞ: என்றே சொல்லுவதாம். ஆதலால் கர்மபலதாதா ஸர்வஜ்ஞன் என்பதும் யுக்திவாயிலாகவே அறியப்படுகின்றது.

இங்ஙனம் பிரபஞ்சத்திலுள்ள ஸகலஜீவர்களுக்கும் அவரவர் பூர்வவினைக்குத் தக்கபயனை அளித்துக்கொண்டிருத்தல் என்பது எவ்வளவு காலத்திற்கு முன்னர் ஏற்பட்டது? அது இன்னம் எவ்வளவுகாலம் நடைபெறும்? எனின் இதற்கு ஆதியுமில்லை அந்தமுமில்லையென்றறிக. ஆதியந்தமில்லாமல் இடையிலும் ஓர் க்ஷணப்போதும் ஓய்வொழிவின்றி இப்படிப்பட்ட செயலைச் செய்துகொண்டிருக்கும் இவ்விறைவன் எப்படிப்பட்டவனா யிருக்கவேண்டுமெனின்

துக்க சோகாதிகள் சிறிதுமின்றி எப்போதும் ஓர் பெரிய திருப்தியை யுடையவனாகவே யிருக்கவேண்டும் என்றறியப்படுகின்றது. ஏனென்னின் உலகில் அரிதான ஓர் வேலையைச் செய்துகொண்டிருக்கும் மனிதனுக்கு மனவினில் யாதானும் ஓர் வியாகூலசிந்தை ஏற்படுமாயின் அவனால் செய்யப்படும் வேலைசரிவர நடைபெறாமல் தாறுமாறாகக்கெட்டு குற்றமுற்றதாகின்றதென்பது பிரத்தியக்ஷமாய் நம்மால் காணப்படுகின்றது. இதற்கே இப்படியானால் மனவினாலும் எண்ணுதற்கியலாததாகிய ஸகலஜீவர்களுக்கும் கர்மபலதாதாவாயிருத்தல் எனும் செய்கையைச் சிறிதும் ஓய்வொழிவின்றி நிர்வஹித்துக் கொண்டிருப்பவனாகிய இறைவனுக்கு உள்ளத்தில் ஒப்பில்லாதஅரும்பெரும் திருப்தியிருக்கவேண்டுமென்பதில் சிறிதும் ஸந்தேகிக்க இடமில்லை. ஆதலால் கர்மபலதாதாவாகிய இவ்விறைவன் நித்திய திருப்தியுடையோன் (𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍃𑌪𑍍𑌤𑌃) என்பதும் யுக்திவாயிலாகவே நிர்ணயிக்கப்படுகின்றது.

அன்றியும் க்ஷணிகமாகிய பொருளை யனுபவிப்பவனுக்கு க்ஷணிகமான திருப்தியும் நித்தியமான பொருளை யனுபவிப்பவனுக்கு நித்தியமான திருப்தியும் ஏற்படும் என்பதே உசிதம். இது மாத்திரமென்பதல்ல. ஸுகத்திற்கு ஸாதனமாயுள்ள பொருளை யனுபவித்தலால் திருப்தியும் துக்கத்திற்கு ஸாதனமான பொருளை யனுபவித்தலால் துக்கமுமே ஏற்படும் என்பதும் நிர்ணயம். ஆதலால் நித்தியமான திருப்தியோடிருப்பவனால் நித்தியமான இன்பப்பொருளே அனுபவிக்கப்பட்டுக் கொண்டிருக்கவேண்டுமென்பது நிச்சயம். தன்னாலறியப்பட்டிராத பொருளைத்தான் அனுபவிக்க இயலாததலால் அப்படிப்பட்ட நித்திய ஸுகப்பொருளை யனுபவிக்கும் அவ்விறைவனால் அப்பொருள் அறியப்பட்டிருக்க வேண்டுமென்றேற்படுகின்றது. அப்படிப்பட்ட நித்திய ஸுகவஸ்து அவ்விறைவனால் எந்த ஸமயம் முதல் முதல் அறியப்பட்டது எனின் அது கர்மபலதாதிருத்துவம் போலவே அனாதியாகவே உள்ளது. ஆதலால் அவன் அனாதிபோதன் என்பதே தகும். இவ்விதம் கர்மபலதாதாவைப்பற்றி விசாரித்துப் பார்க்கின் யுக்திவாயிலாகவே அவன் அனாதிபோதன் என்பதும் ஸித்திக்கின்றது. ஸகலஜீவர்களுக்கும் கர்மபலதாதாவாயிருப்பவனை எவனுக்காவது பாதந்திரப்பட்டிருக்கின்றானென்பது பொருந்தாது. அன்றியும் எவனுக்காவது பாதந்திரப்பட்டு அடிமையாயுள்ளவனுக்கு நித்தியமான திருப்திக்கு இடமில்லை. ஆதலால் அவன் ஸ்வதந்திரனாகவே இருக்கவேண்டுமென்பதும் ஊஹிக்கப்படுகின்றது. இந்த நியாயத்தினால், ஸர்வஜ்ஞனும் நித்தியதிருப்தனும் அனாதி போதனுமாயுள்ளவனை ஸ்வதந்திரனென்றும் நிர்ணயிக்கத்தகும். "𑌸𑍍𑌵𑌤𑌂𑌤𑍍𑌰𑌃 = தன்னிச்சைப்படி நடப்பவன்" பிறனுக்கு அடங்கியவனல்லன் என்பது பொருள்.

ஒருவன் ஓர் வேலையைச் சிலகாலம் இடைவிடாது செய்வானாயின் அவனது சக்தி குன்றுகின்றது என்பது உலகில் பிரத்தியக்ஷம். அனாதியாகவே சிறிதும் ஓய்வொழிவின்றி ஸகல ஜீவர்களின் செயல்களையும் அறிந்துகொண்டு அவைகளுக்குத் தக்கபயனையும் தந்துகொண்டிருப்பவனது சக்தியானது ஓர்

காலத்தும் சிறிதும் குன்ருததாகவே யிருக்கவேண்டுமென்பது நிர்ணயம். குன்ருத சக்தியுடையோனை “𑌅𑌲𑍁𑌪𑍍𑌤𑌶𑌕𑍍𑌤𑌃” அலுப்த சக்தியுடையோன் என்று சொல்லுவதாம்.

உலகில் ஓரோர் மனிதனுக்கு ஓரோர் செய்கையிலேயே மிகவும் திறமையிருக்கக்கூடுமென்றி பலசெயல்களில் ஸமானமான திறமையுள்ளதென்பது பொருந்தாது. சிலர் பலவகையான செயல்களில் ஸமானமான சக்தியுள்ளவராக உலகில் நம்மால் எண்ணப்படுவோராயினும் நன்ருய்க் கவனிப்போமாயின் அவர்களிடம் உள்ள பலவகை சக்திகளில் மிகவும் தாரதம்மியம் காணப்படும் என்பது நிச்சயம். மனஸாலும் சிந்திக்கவொண்ணுத அற்புதமான பற்பல செயல்களைத் தாரதம்மியமின்றிச் செய்யும் ஆற்றலுடையவனை அநந்தங்களான சக்திகளையுடையோன் என்பதேதகும். ஆதலால் ஸகலப் பிரபஞ்சங்களின் ஸருஷ்டி, ஸ்திதி, லயம், ஸம்ஹாரம், திரோதானம், அனுக்கிரஹம் எனும் பஞ்சகிருத்தியங்களையும் நடாத்துவோனும், ஸர்வக்ஞனும், நித்தியதிருப்தினும், அனுதிபோதனும், ஸ்வதந்திரனும், அலுப்தசக்தனுமாயுள்ள இவ்விறைவனை அநந்த சக்தன் (𑌅𑌨𑌨𑍍𑌤𑌶𑌕𑍍𑌤𑌃) என்றும் சொல்லப்படுகின்றது. இவ்வுண்மை

“𑌪𑌰𑌾𑌸𑍍𑌯 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌵 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇”

“இவனது ஸர்வோத் கிருஷ்டமாயுள்ள சக்தியானது பலவாருயுள்ளது”

என்பது முதலிய சுவேதாச்வதராதி ச்ருதிகளாலும்

“𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑌾 𑌤𑍃𑌪𑍍𑌤𑌿𑌰𑌨𑌾𑌦𑌿𑌬𑍋𑌧𑌃 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌤𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌲𑍁𑌪𑍍𑌤𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 । 𑌅𑌨𑌨𑍍𑌤𑌶𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌵𑌿𑌭𑍋𑌰𑍍𑌵𑌿𑌧𑌿𑌜𑍍𑌞𑌾𑌃 𑌷𑌡𑌾𑌹𑍁𑌰𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 ॥

“ஸர்வஞ்ஞத்துவம், திருப்தி, அனுதிபோதம், ஸ்வதந்திரத்துவம், அலுப்த சக்தி, அநந்த சக்தி எனும் இவ்வாறும் வியாபகனுகிய இறைவனுக்கு அங்கங்களாம்”

“𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌤𑌪𑌃 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌧𑍃𑌤𑌿𑌃 ।
𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌸𑌮𑍍𑌬𑍋𑌧𑍋 𑌹𑍍𑌯𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌚 ॥
𑌅𑌵𑍍𑌯𑌯𑌾𑌨𑌿 𑌦𑌶𑍈𑌤𑌾𑌨𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌶𑌙𑍍𑌕𑌰𑍇 ॥

“ஞானம், வைராக்யம், ஈச்வரத்துவம், தபஸ், ஸத்தியம், க்ஷமை, தரித்தல், ஸ்ருஷ்டித்தல், அந்தர்யாமியாயிருத்தல், அதிஷ்டாதாவாயிருத்தல், இவை பத்தும் இறைவனிடம் நித்தியமாயிருக்கின்றன.”

என்பது முதலிய வாயுஸம்ஹிதை பாரதம் பாகவதம் முதலிய பிரமாண க்ரந்தங்களிலுள்ள வாக்கியங்களாலும் அறிக. இவனது ஸ்வரூபம் இவ்வகைச் சக்திகளையுடையதாதலின் இந்தச் சக்திகளைக் கொண்டே இவ்விறைவனது உண்மை வடிவத்தை அறிந்துகொள்ளவேண்டும். இந்தக்ரமமாக அறிவதே

முக்திஹேதுவாகிய பரிபூர்ணுநந்த அகண்டாகார வ்ருத்தியாகிய ஸாக்ஷாத் காரத்தைப் பெறுதற்கு ஹேதுவாகும். ஆனதுபற்றியே

"ஸவ்ஜ்ஞதா த்ருப்தி ரநாதிபோத ஸ்வதந்த்ரதா நித்ய மலுப்தசக்தி: அநந்தசக்திஸ்ச விபோர்விதிஜ்ஞா: ஷடாஹுரங்காநி மஹேஸ்வரஸ்ய பரசிவஜ்ஞாயதேஸ்வபிகோக்தா"

"க்ஷேத்ரஜ்ஞா ஸர்வதேவாஸ்ச நாராயணஜா ஸ்ஸர்வ ஜீவாஸ்ச க்ஷேத்ரம் ப்ரஹ்மாண்டம் த்ரிலோக நரலோக நவ்யாவகம் சித்ராலயம் ॥ ஷடாவத்யாவ்யா தத்த்வம் சவி ஷஜ்ஞக்ஷ ஹோக்தா ரத்நம் ஜ்ஞாநாஷட் ஷக்திஹிஸ்வாம் பரசி வஹாரத்தோதிவிசாது ॥

என்பது முதலிய சுலோகங்களால் இவ்வறுவகை சக்தியே பாசிவவடிவத்தையறியப் பரமஸாதநம் எனவியக்தமாக தூர்வாஸமாமுநிவர் முதலிய சிவகணப் பெருமைவாய்ந்த பெரியோர்களால் பரசம்பு மஹிமஸ்துதி முதலிய நூல்களில் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இனி இவ்விறைவனை யுபாஸிப்பது எப்படி எனின் அதனை அடுத்த உபந்யாஸத்தில் சொல்லுவாம்.

ஐந்தாமுபந்யாஸம் முற்றிற்று.

ஆறும் உபந்யாஸம்.

ஈஸ்வர உபாஸனை

இப்போது ஈச்வர உபாஸனையின் முறையைச் சற்று உபந்யஸிப்பாம். ஈச்வரன் ஸர்வக்ஞனும் நித்ய திருப்தனும், அநாதிபோதனும், ஸ்வதந்திரனும், அலுப்த (குன்றாத)சக்தனும், அநந்த சக்தனுமாய் எங்கும் பரிபூர்ணமாய் உருவங் கடந்தவனும் ஆச்சரியமாயுள்ள ஓர் அறிவுப்பொருள் என்பதாக எதற்கனவே நடந்த உபந்யாஸத்தினல் நண்பர்கள் மனதில் நன்கு பதிந்திருக்கும். அப்படி அருபவியாபக வஸ்துவாயினும் அப்பொருள் முற்கூறிய திவ்விய மஹாமாயா சக்தி மஹிமையால், கங்கா சந்திரகலாதிகளைத் தரித்து சுத்தஸ்படிக மேனியாய் விளங்கும் சிவத்திரு வுருவத்தையோ சங்க சக்ராதிகளைத் தரிக்கும் நீலமேக சியாமள வர்ணம் பொருந்தி விளங்கும் ஸ்ரீஹரி மூர்த்தியையோ எடுத்து பக்த கோடிகளை அநுக்கிரஹிக்குங்கருணைத்திறம் பொருந்தியதாம். ஆதலின் அவனது சிவத்திருவுருவுத்தையோ ஹரித்திருவுருவத்தையோ சிந்தித்தல் அவனது உபாஸனையாமென்க. ஆனல், பரிபூர்ணனுகிய அருபப்பொருள் எனும் நிச்சயத்தை விடாமல் முற்கூறியபடி சிவ விஷ்ணுவாதி வடிவங்களைத் தியானிக்கவேண்டும்.

இங்கு இதனை அறிக. உபாஸ்தியானது விவேக உபாஸ்தி மூட உபாஸ்தி என்று இருவகைப்படும். விவேக உபாஸ்தியை முதலில் சொல்லிப் பிறகு மூட உபாஸ்தியையுஞ் சொல்லுவாம். விவேகமாவது யதார்த்தமாகிய அனுபவமே. யதார்த்தமாகிய அனுபவமாவது எவ்வகையாலும் மாற்றமுடியாத உண்மை நிலைமையே. உலகில் நடை பெற்றுவரும் ஓர் உண்மை உளது. அதாவது, அங்கியை (அரூபமாகியவஸ்துவை) அங்கத்தின் மூலமாகவே (அந்த அரூபவஸ்துவினால் வியாபிக்கப்பட்டிருக்கும் ஓர் உருவப்பொருளின் மூலமாகவே) பரிசயஞ் செய்து பழகவேண்டும் எனும் நியமமேயாம். உதாரணமாக, இந்த ஸ்தூலதேகத்தினில் வியாபித்துக் கொண்டிருக்கும் அரூபனாகிய ஜீவாத்மா அங்கி என்பதாம். அங்கி எனின் அங்கமுடையோன் அங்கமாகிய தேகத்தில் வியாபித்துக்கொண்டு தனது எனும் அபிமானத்தோடு இருக்கும்வஸ்து என்பது அதன் அர்த்தம். அதனால் வியாபிக்கப் பட்டிருக்கின்றதாகிய இந்த ஸ்தூலதேகமே அங்கமென்பதாம். அங்கியாகிய ஜீவாத்மா காணமுடியாத அரூபவஸ்துவே. அங்கமோவென்றால் கை கால் தலை மார்பு முதலிய அவயவங்களை யுடையதாய் பிரத்தியக்ஷமாய்க் காணப்படும் ஸ்தூலதேகமே. இந்த அங்கியாகிய ஆத்மாவின் பிரஸாதத்தின் பொருட்டு தேகமாகிய அங்கத்தையே உபசரிக்கவேண்டியது நியதமே.

உதாகரணமாக. ஓர் மனிதரை நம்வீட்டிற்கு அழைத்து வந்து அவர்கையில் ஓர் இனிய பழத்தைக்கொடுத்தோமானால் அவரது ஆத்மா திருப்தி அடைகின்றது. இதனில் உபசரித்தது எதனை? திருப்தியடைந்தியாது? இதனைச் சற்று கவனிக்கவேண்டும். தேகத்தின் அவயவமாகிய கையெனும் அங்கத்திலேயே பழங்கொடுக்கப்பட்டதாதலின் உபசரிக்கப்பட்டது கையெனும் அங்கமே. திருப்தி அடைந்தது யாதெனின் அக்கையையும் மற்றுமுள்ள அவயவங்களெல்லாவற்றையும் தனதென அபிமானித்துக்கொண்டிருக்கும் ஜீவாத்மாவாகிய அங்கியேயாம். உபசாிக்கப்படும் அங்கமே திருப்தியடைகின்றதென்பது ஓர் காலத்திலுமில்லை. உபசரிக்கப்படுவது கை கால் முதலிய அறிவில்லாததாகிய ஜடவஸ்துவாதலால் அதற்குச் செய்யும் உபசாரத்தினால் அவ்வங்கங்களில் நடக்கும் செயல்கள் எல்லாவற்றையும் அறிந்துகொண்டிருக்கும் சேதன வஸ்துவாகிய அரூப ஆத்மாவே திருப்தி அடைகிறான் என்பதே உண்மை.

ஜீவாத்மாவுக்கு தேகம் அங்கமாயிருப்பதுபோல ஈச்வரனுக்கு பிரம்மாண்ட முழுவதும் அங்கமாயுள்ளது. அங்கியைத்திருப்தி செய்வித்தல் அங்கத்தின் மூலமாகவே ஆகவேண்டுமென முன் நிர்ணயித்த நியாயத்தின்படி ஈச்வரனை திருப்திசெய்வித்தல் பிரம்மாண்டத்திலுள்ள யாதானும் ஒருபொருளின் மூலமாகவே ஆகவேண்டும். சங்கை, ஜீவாத்மாவுக்கு அக்ஞானம் இருத்தலால் தேகத்தில் தான் தனது எனும் அபிமானமிருக்கின்றது. ஆதலால் தேகத்தை உபசரித்தலால் திருப்தியடைகின்றான் என்பது ஒவ்வும். பிரம்மாண்டப்பொருளை யுபசரித்தலால் ஈச்வரன் திருப்தி யடைகின்றான் என்றதினால் ஈச்வரனுக்கும் அக்ஞான அபிமானங்கள் இருக்கின்றனவென்றல்லவோ ஏற்படும். அது உசிதமோ எனின் அதனுண்மையாவது ! அக்ஞான

அபிமானங்கள் சிறிதுமின்றி ஒழிந்த ஞானிகளாகிய ஜீவன்முக்தரிடம் உபதேசம் பெற வேண்டுவோர் அவரது ஸ்தூலமாகிய தேகத்தைக்காணாமலே அவரது ஆத்மாவை மாத்திரம் கொண்டு ஞானத்தைச் சம்பாதித்தல் என்பது எப்படிச் சிறிது மியலாதோ, அவருக்கு தேகத்தினில் அபிமானாதிகளிராவிடினும் க்ஷேமத்தை விரும்பும் நாம் அவரது ஸ்தூல தேகத்தோடு பழகிப்பரிசயஞ் செய்ய வேண்டியது எப்படி அவசியமோ, அப்படியே அபிமானாதிகளில்லாத இறைவனிடம் பழகி அவன் அருளைப்பெறுவது அவனுக்குத்தேகமாயுள்ள பிரம்மாண்டப் பொருள் மூலமாகவே யாகவேண்டு மென்பதாம்.

பிரம்மாண்டத்தில் அசுத்தம் சுத்தம் எனும் இருவகைப்பொருள்கள் அடங்கியிருக்கின்றன. அவைகளுள் சுத்த வஸ்துக்கள் மூலமாகவே இறைவனை ஆராதிக்க வேண்டும். எப்படி எனின் ஸ்நேஹிதருடைய ஆஸநாங்கம் கக்ஷ முதலிய அசுத்தாங்கங்களை விடுத்து கை வாய் தலைமுதலிய சுத்தாங்கங்களையே உபசரித்தல் போலென்க. இறைவனுக்கு ரத்நம்முதலிய சுத்த வஸ்துக்களிலும் மலம் முதலிய அசுத்த வஸ்துக்களிலும் வியாபகத்தன்மை ஸமானமே. ஆயினும் பூஜிப்பவராகிய மாந்தரின் அறிவு சுத்தாசுத்த பாவனைகளால் பலகாலமாய்ப் பற்றப்பட்டிருக்கின்றமையால், அசுத்த வஸ்துக்களின் மூலமாய் உபசரிக்க இயலாமல் சுத்த வஸ்துக்களின் மூலமாகவே இறைவனைப்பூஜித்து உபசரிக்க இயலுமாதலால் அங்ஙனஞ் சொல்லியது.

உலகினில் சற்று விசாரித்துப்பார்க்கின், பிளிச்சை, குரும்பை, சளி, ஊத்தை, கோழை, மலம், மூத்திரம், ரோமம், நகம் முதலியவைகளையே ஸதா வெளியிட்டுக்கொண்டிருக்கும் அசுத்தக்களஞ்சியமாகிய மனித சரீரத்தைக்காட்டிலும் கல், மண், செடி, கொடி, மரம், முதலிய பொருள்கள் சுத்தங்களென இனிது விளங்கும். ஆதலால் மனித தேகத்தைப்பூஜித்து அங்கு வியாபகனாயுள்ள இறைவனை உபசரித்தலைக்காட்டிலும் கல், மண், செடி, கொடி முதலிய பொருள்களின் மூலமாய் உபாஸித்தலே மிகவும் நன்கென அறியப்படுகின்றது. கல், மண், செடி, கொடிகள் முதலியவைகளின் இனங்களிலும் நவரத்நம் பொன், சுத்த தீர்த்தக்கரையிலுள்ளமண், துளஸீ, பில்வம், அச்வத்தம் முதலியவைகள் குணத்திலும் மற்றும் எத்தன்மையிலும் சிறந்தவையாதலால் அவைகளின் மூலமாய் பூசித்தல் உசிதமெனக் காணப்படுகின்றது.

செடி கொடி மரங்களும் ஸ்திரமாயிருப்பவையல்ல. ஆதலால் ஸ்திரமாயுள்ள ரத்நம் பொன் மண் முதலியவைகளின் மூலமாய் உபசரித்தல் அதனிலுமுசிதம். அன்றியும் நர்மதை கண்டகீ முதலிய சுத்த நதீ தீர்த்தத்தின் சம்பந்தத்தை வெகு காலமாய்ப்பெற்றுள்ளனவும், சித்தத்தை இழுத்துத்தம்மிடமே குவியச் செய்யும் ஆற்றலையுடையனவுமாகிய பாணலிங்க ஸாளக்கிராவாதி சிலைகளின் மூலமாய் இறைவனை ஆராதிப்பது மிகவும் உசிதம்.

இனி பிரம்மாண்டத்திலடங்கிய ஸகல பொருள்களும் பிருதிவிஜலம் முதலிய ஐம்பூதங்களிலேயே அடங்கியுள்ளன வாதலின் ஈசனை உபாஸிக்குமுறையும் ஐந்து வகைப்பொருள்களின் மூலமேயா மென்பதறிக. அதாவது, முற்

கூறிய நவர்த்நம், பொன், செடி, கொடி, மண் முதலியவைகளெல்லாம் பிருதிவியின் இனத்தவையாதலால் அவைகளின் மூலமாய் வழிபடுவதை பார்த்திவ ஆராதனை யென்று சொல்லப்படுகின்றது. இவ்விதமே சுத்தமாகிய தீர்த்தங்களையும் மந்திரயுக்தமான அக்நியையும் இறைவனது அங்கமாய்க்கொண்டு அவைகளின் மூலமாயும் உபாஸித்து அருளைப்பெறலாம். அப்படியே வாயு ஸூர்யன் சந்திரன் முதலிய பொருள்களும் இறைவனுக்கு அங்கங்கள். ஆதலால் அவ்வழியாலும் உபாஸிக்கலாம். இப்படி ஜடப்பொருள்களாகிய அங்கங்களை விட்டு அருபனும் மனோவாக்குகளுக்கு எட்டாதவனுமாகிய பரம்பொருளை நேரிலேயே உபாஸிக்க எவராலுமியலாதென்பதுகொண்டே விக்கிரஹாராதனை சாஸ்திரங்களில் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு பிருதிவ்யாதி ஜடவஸ்துக்கள் உண்மையிலேயே இறைவனுக்கு அங்கங்களாதலால் அப்பொருள்களே பரம்பொருளாகக்கொண்டு வேதங்களில் போற்றப்படுகின்றன. அதாவது

"ம்ருத்திகே ஹந மே பாபம் யந்மயா துஷ்க்ருதம் க்ருதம்"॥

"ஓ மண்ணே எனது பாபத்தைப் போக்குவாயாக. என்னால் என்ன பாபஞ் செய்யப்பட்டிருக்கின்றதோ"

"ஆபோ வா இதம் ஸர்வம் விஶ்வா பூதாந்யாப:"

"ஆபோ ஹிஷ்டா மயோ புவ:"

"ஜலமே இதெல்லாம், ஸமஸ்த பூதங்களும் ஜலமே" ஓ ஜலமே நீயே உலகத்தின் க்ஷேமத்திற்கு ஹேதுவாயிருக்கின்றனை

"அக்நிமீளே புரோஹிதம்"

"எல்லாவற்றிற்கும் முதல் தேவனாகிய அக்நியைத்துதிப்பாம்"

"நமஸ்தே வாயோ த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி"

"ஓ வாயுவே உனக்கு நமஸ்காரம்; நீயே பிரத்தியக்ஷமான பிரம்மமன்றோ"

"விப்ராஜமாநோ யாத்யதி... ஜாநந்"

"ஸூர்யன் எல்லாவற்றையும் நன்கறிந்து கொண்டு ஜீவர்களை ஏவுகின்றான்"

"அஸாவாதித்யோ ப்ரஹ்ம"

"இவ்வாதித்யன் பிரம்மம்"

"சந்த்ரஸூர்யாவாவஸர்வாணி ஜ்யோதீம்ஷி ஸமீயதே"॥

என்பவை முதலிய இவ்வாக்கியங்கள் இங்கு கூறிய உண்மை பற்றியே பிரவர்த்தித்தவையாம். இவ்விதம் வேத சாஸ்திரங்களில் பிருதிவ்யாதி ஜடப்பொருள்களை ஈச்வர ஸ்வரூபமாகக் கொண்டு போற்றப்பட்டிருத்தல் விவேகிகள் செய்யும் ஈஸ்வர உபாஸனையையே கருத்தாய்க்கொண்டதாம். இதற்கு பிரஹ்லா

தர் முதலியவர்களது பக்தியை திருஷ்டாந்தமாக எடுத்துக்கொள்ளலாம். அவர் திவ்ய மஹா மாயா சக்தியுடையோனும் அரூபனும் எங்கும் வியாபித்துள்ளவனு மாகிய இறைவனுக்கு உலகிலுள்ள சகல சராசரப்பொருள்களும் சரீரத்திலடங் கிய அங்கங்கள் போன்றவையே. அவனது உண்மைப்பெருமையை சராசரங்க ளான எப்பொருள் மூலமாயும் கண்டு கொள்ளலாம். எனும் திடவிவேகத்தை நன்கு கைக்கொண்டவர் என்பது பாகவதாதி நூல்களைப்படித்தவருக்கு நன் ருய் விளங்கும். ஹிரண்ணிய கசிபு அவரை மலையினின்றும் உருட்டித்தள்ளிய போதும் ஸமுத்திரத்தில் கட்டிப்போட்ட போதும் ஸர்ப்பங்களை விட்டுத் தீண்டச்செய்தபோதும் ஸர்வ பரிபூர்ணனுன இறைவன் மலை ஸமுத்திரம் முதலிய ஸகல பொருள்களிலுமிருக்கின்ருனென்பது நிச்சயமாய் அவருக்கு அறியப்பட்டிருந்தமையால் அப்படிப்பட்ட ஹிம்ஸைகளுக்கு அவன் தன்னை உட்படுத்தும் பொது, தாயிடம் சேர்ப்பிக்கப்படும் குழந்தைபோல அச்சம் சிறிதுமின்றி சந்தோஷமாக விருந்தனர். அவ்வளவு ஹிம்ஸையும் பயன்படாது ஆநந்த பரவசமாய் பிரஹ்லாதனிருப்பதைக்கண்டு ஹிரண்ணியகசிபு, அடே பிரஹ்லாதா ! இவ்வளவு ஹிம்ஸிக்கப்பட்டும் உனக்குப் புத்தி வரவில்லையே, அஹோ ஹரி எனும் பெயரையுடையவனுய் இறைவன் ஒருவன் இருப்பது உண்மையாகில் அவன் உன்னுலாவது என்னுலாவது காணப்பட்டிருக்க வேண்டு மே! அப்படி இதுவரையிலும் ஓரிடத்திலுங் காணப்படாமலிருக்கும்போது வீணில் பிதற்றிக்கொண்டு என் என்னுல் ஹிம்ஸிக்கப்படவேண்டும் என்ருன். அதற்கு பிரஹலாதர் அஹோ! அஸுரேந்திரா! உனக்கேனிப்படி மஹா மோஹம்? ஸர்வவல்லமை பொருந்தி எங்கும் வியாபகனுய், எப்பொருளிலும் எவ்வுருவோ டும் ஆவிர்ப்பவிக்கும் ஆற்றலுடையோனுகிய ஹரியில்லாத இடமுமுண்டோ?

உஹாஉாயாயாംவா நஹவிஉா⁻ᵘதிஜெ்ஞா திஷிஜவெவு
ஹாயெ்வாஷ்ஸംஹெவுஹஹதவ ஶ⁻ᵘംஹெஷிவசவாം ॥
த்ரிணைவாவுாவிஶு்ப்ர⁻ᵘவஉவிஜவாக்ஷீ வஸ⁻ᵘரவரொவ
ரீவதீ்ஹெவ்வுரംஹரிரிவஹஜ்ர ஶாகவംஹிகுஜயெஃ ॥

மஹா மாயையிலும், ஆகாசத்திலும், வாயுவிலும், தேஜஸ்ஸிலும், ஜலத்தி லும், மண்ணிலும், அதன் விகாரங்களாகிய ஸ்தம்பம் முதலியவைகளிலும் வியாபக ஞய் அங்கங்கு நடக்கும் ஸகல காரியங்களையும் கவனித்துக்கொண்டு ஹரியிருக் கின்ருன். அஹோ, ஹரி எங்கு இருக்கின்ருன், இருந்தால் காணப்படவேண்டு மேயெனச்சொல்லிய உன்து சொல்லிலு மிருக்கின்ருன். அப்படியே சிறு துரும்பிலுமிருந்துகொண்டு அவ்விறைவன் எல்லாவற்றையுங் கவனிக்கின்ருன். இதனில் சங்கைக்கிடம் வேண்டுமாயின் நீயும் பிரத்தியக்ஷமாய்க் காணலாமே. யாதுமில்லை. எனக்கூறினுர். அதைக்கேட்டு அவ்வஸுரன், அடா மூர்க்கா! எங்கு மிருக்கின்ருனெனக் கூறினையே! அது உண்மையாயின் அந்த ஹரியை இக்கம்பத் தினில் நீ காட்டவேண்டும். அப்படி காட்டாவிடில் இப்போதே உன் சிரஸ்

ஸைப் பிளந்து சிதாஅடிப்பேன் எனச்சொல்லவே அப்போதும் பிரஹ்லாதர் சிறிதுங் கலங்காதவராய்

"[illegible]"

"ஓ அஸுரேந்த்ரா! உன்னால் என்னைக்கொல்ல இயலாது. எவ்வளவோ ஹிம்ஸைகளைச் செய்தும் சிறிதும் யான் பாதை யடையாதிருப்பது உன்னால் அறியப்பட்டதே! அதைக் கவனித்தாலும் உன் சக்தியில் அடங்காத பெரியவல்லமையுள்ள இறைவன் வேறொருவன் இருக்கின்றான் என்பதை நீயே அறியலாம். நீ சொல்லும் வஸ்துவினில் அந்தஇறைவன் காணப்படாமல்போவனானால் யானே என்னை மாய்த்துக்கொள்வேன். அல்லாவிடில் அவ்விறைவனுக்கு நான் பக்தனாயிருத்தலையே விட்டுப் போடுவேன்"

என்பது முதலிய வாக்கியங்களை கவனித்தால் பிரஹ்லாதர் முதலியவர் ஈச்வரன் அருபவியாபக வஸ்துவேயாயினும் அவனது சக்தி மகிமையால் எப்பொருளினின்றும் எவ்வுருவத்தோடும் தோன்றும் இயலுடையோன் எனும் திடவிவேகத்தோடு பக்தி செய்தவர் என்பது நன்றாய் விளங்கும். அப்படிப்பட்ட விவேகமுடையவரா யிருந்ததுபற்றியே அவ்வஸுராதமன் சொல்லிய கம்பத்தினின்றும் பிரஹ்லாதனை அநுக்கிரகிக்க ஆச்சரிய உருவத்தோடு ஆவிரப்பவித்தனர். விவேக பக்தியின் இயல்பை இம்மாதிரியான சரிதங்களால் அரியத்தக்கது.

இனி மூடபக்தர்களும் பிருதிவ்யாதி ஜடப்பொருள்களின் மூலமாய் ஈச்வரனை உபாஸித்து நற்கதிபெறலாம். அதாவது ஜடப்பொருள்களாகிய லிங்கம் முதலியவைகளில் மூடமாகிய பாவனையின் உறுதியினாலேயே ஈச்வரவடிவம் தோன்றும். சிவாதிவடிவத்தைச் சிந்தித்து லிங்கமாகிய சிலாபுத்தி கிரமமாய் சிறிதுமில்லாமல் நீங்கி சிவாதி வடிவம்மாத்திரம் தோன்றப்பெறுதலின் பொருட்டாகவே பாணலிங்காதி சிலைகளில் சிவாதி பூஜை விதிக்கப்பட்டுள்ளது. தினந்தோறும் லிங்கத்தில் சிவபாவனை செய்யச்செய்ய சிலாபுத்தி குன்றும். கண் பார்ப்பது சிலையாகிய லிங்கத்தையே யாயினும், மனத்தில் தோன்றுவது சிலாவடிவம் சிறிதுமின்றி சிவஸ்வரூபமாத்திரமாய் எப்போது அமைகின்றதோ அப்போது உபாஸனை முதிர்ந்தது. அப்போது தன்னையும் மறந்து சிவமாத்திரமாய் புத்தி நின்று விடின் அந்த க்ஷணத்திலேயே அந்தச்சிலையினின்றும் சிவபெருமான் பிரத்தியக்ஷமாய் ஆவிர்ப்பவிப்பார் என்பது நிச்சயம். இதுவே உபாஸனையின் ரகஸ்யம்.

இதனில் கண்ணப்பன் முதலிய பக்தசிகாமணிகளை உதாஹரணமாய் எடுத்துக் கொள்ளலாம். ஜாதி குண கிரியா விவேகாதிகளில் அவன் மிகத்தாழ்ந்த

னே. அவன்வேட்டையாட இருவர்களோடுகூட வனத்தில் வெகுதூரம்திரிந்தான். அச்சமயம் அவனால் ஸ்ரீ காளஹஸ்தீஸ்வராலயத்தின் மணியோசை கேட்கப்பட்டது. தன்னோடு கூட வந்தவர்களை அவ்வோசைக்குக் காரணம் யாதெனவினவவே அவர்கள் அவனைநோக்கி, ஓ பிள்ளாய்! அங்கு ஓர் ஆலயமிருக்கின்றது. அங்கு அடிக்கும்மணியின் ஓசைஅதுஎன்றார்கள். அதற்குக்கண்ணப்பன் ஆலயமெனின் யாது.? அங்கு இருப்பவன்யார் என்று கேட்கவே, அவர்கள் அப்பா! அவ்வாலயத்தில் தெய்வமிருக்கின்றது. அவருடைய பூஜையின் பொருட்டு மணியடிக்கப்படும் என்றனர். அந்த பக்தன், தெய்வமாவதுயாது? அவ்வாலயத்தில் அவன் எப்படி இருக்கின்றான்? அவனை எதற்காகபூஜிக்கின்றனர்? என அவர்களை மீண்டும் வினவினான். அதற்கு அவர்கள் உத்ஸவாதிகாலங்களில் வெளிவரும் மூர்த்தியைத் தாங்கள் கண்டவாறு சொன்னார்கள். அதாவது அப்பா! பொன்மயமாய் ஜ்வலிக்கும் அழகுபொருந்திய திருவுருவம் அத்தெய்வத்திற்குளது. அவனுக்கு சிவபெருமான் எனப்பெயராம். அவனிலும் பெருமைபெற்றவன் ஒருவனுமில்லையாம். அவனை அண்டினால் கோரியபொருள்கள் ஸகலமும் கிட்டுமாம். அப்படிப்பட்ட பெருமைபெற்ற இறைவன் அங்கு வந்து தெரிசிப்பவர்களின் க்ஷேமத்திற்காக அவ்வாலயத்தில் குடிகொண்டிருக்கின்றானும் என்றனர். அவ்வசனத்தைக்கேட்கும் பொழுதே கண்ணப்பனுக்கு ஆலயத்திலுள்ளவன் அழகு பொருந்திய அபாரமகிமைபெற்ற ஈச்வரனெனும் ஓர் பிரபுவே என புத்தியுதித்ததன்றி சிலாபுத்தி சிறிதுமுண்டாகவில்லை. அன்றியும் அவன் ஆகோ! மிக்கப்பெருமை பெற்ற சக்கரவர்த்தியாயுள்ள இறைவன், மற்றவர்களின் க்ஷேமத்தை நோக்கி கோரமாகிய இக்கானகத்தின் நடுவில் அங்கியாயமாகவே அகப்பட்டுக்கொண்டானே! அந்த நிலைமையிலிருப்பவனை நாம் பார்க்காமலிருக்கக்கூடாது எனும் எண்ணங்கொண்டு, தன்னோடுகூட வந்தவர்களை விட்டுப்பிரிந்து தனியே மணியோசை வந்த திக்கை நோக்கிச் சென்றான். ஆலயமும் தென்பட்டது. அப்படிச் செல்லும்பொழுதும் அவ்வாலயத்தைக் கண்ணுற்ற பொழுதும் அவனுக்கு அங்குள்ளவன் திவ்விய புருஷன் எனும் பாவனையிருந்ததேயன்றி சிலாபுத்தி சிறிதும் ஏற்படவில்லை. ஆனதுபற்றியே ஆலயத்துக்குட் சென்றபோதும் அச்சிவலிங்கத்தைப் பார்த்தபோதும் அவனுக்குச் சிலாவடிவம் தோன்றாமல் சிவபெருமானது வடிவமே தோன்றியது. ஆயினும் தன்னையும் மறத்தலெனும் உபாஸனாமுதிர்ச்சி நிகழவில்லை. அப்படிப்பட்ட நிலைமை ஏற்படும் வரையில் சிவபெருமான் அதனினின்றும் ஆவிர்ப்பவியாது இருந்தனர்.

ருசிபார்த்த எச்சில் மாம்ஸத்தையும் பாத்திரமின்மையால் வாயில்கொண்டு வரும் தண்ணீரையும், சிவவடிவமாய்க் காணப்பட்ட அவ்விலிங்கத்தின் வாயினில் சேர்ப்பித்து வழிபட்டான் என்பதைக் கவனித்தாலும் அவனுக்கு சிலாபாவனையின்றி சிவபாவனையே இருந்ததென்பது நன்கு விளங்கும். கடித்து ருசிபார்த்த மாம்ஸத்தையும் வாயிலடக்கிக் கொண்டுவந்த தண்ணீரையும் லிங்கத்திற்குதவியதைக்கொண்டே அவனுக்குச் சிலாபுத்தி யில்லவேயில்லை இவன் இதை சாப்பிடுவான் என்னும் சைதன்னிய புத்தியேயிருந்தது என வியக்தமாகும். ஆயி

னும், தான் எனும் பாவனையை மறந்து சிவபாவனை மாத்திரமாய் மிஞ்சி நிற்றலாகிய நிலமைக்கு வேண்டிய அப்பியாஸம் திடப்பட்டுக்கொண்டு வந்தது. இவ்வாறு பாவனை திடப்பட்டு வரவே ஓர் நாள் இறைவனது கண்ணில் குற்றத்தைக்கண்டான். உடனே மனமுருகித் தன் கண்ணை எடுத்து அந்தக்கண்ணின் ஸ்தானத்தில் வைத்தான். மற்றோர் கண்ணுங்குற்ற முறவே தனது மற்றோர் கண்ணையும் பிடுங்கி இறைவனுக்கு வைத்து விடுவோம் எனத்தனது அம்பினால் கண்ணைப் பெயர்த்தெடுக்க ஆரம்பிக்கவே தன்னையும் உலகையும் மறந்து புத்தி சிவாகாரமாத்திரமாய் நின்று விட்டது. அப்படி மனம் ஏகாக்ர ஸமாதி நிலை பெறவே அவன் பாவித்த திருவுருவத்தோடு பகவான் அந்தலிங்கத்தினின்றும் ஆவிர்ப்பவித்து மஹாநுக்கிரஹத்தைச் செய்தனர். இவ்வாறு கூறப்பட்டிருக்கும் இதிஹாஸ சரிதத்தால் மூடபக்தியிலும் பாவனையின் ஏகாக்ரத் தன்மை யெனும் ஓர் தத்வம் உள்ளது என்பது விளங்கும்.

இங்கு இதனைச்சங்கிரகமாய் அறிக. இறைவன் அரூபனும் பரிபூர்ணனும் ஸகல ஜகங்களின் உற்பத்தி·ஸ்திதிலயங்களுக்குக்காரணனும் அபார சக்திமகிமை பொருந்தியவனும் எல்லாமறிவோனுமாய் உள்ளவனே யாயினும் உலகிலுள்ள ஜடப்பொருள்கள் அவனுக்கு அங்கங்களாதலால் அவைகளை வழிபட்டு அவனருளைப்பெறலாமெனும் இந்தஞானத்தோடு உபாஸித்தலே விவேக பக்தியெனவும் பரிபூர்ணத்தன்மையை யறியாமலே ஏகதேச வடிவத்தையே இறைவனது உருவமெனக்கொண்டு உபாஸிக்கும் பரிபாகமே மூடபக்தியெனவும் அறிக. இவ்விரண்டும் இறைவனருளைப்பெறச்சாதனங்களே யெனவும் இவைகளில் எது சிறந்ததெனுந் தாரதம்மியத்தைப்பற்றி யோஜிக்க வேண்டியதவசியமல்ல வெனவும் நிச்சயித்துக்கொள்க. இவ்விஷயத்தைப்பற்றி விரித்துச்சொல்ல வேண்டிய விஷயங்கள் ஏராளமாய் உள்ளன. அவகாசமின்றி இம்மட்டோடு நிறுத்திக்கொள்ளுகின்றேன். இதன் விரிவு என்னால் சில மாதங்களுக்கு முன் அச்சிட்டு வெளியிடப்பட்ட வேதசாஸ்திர தத்வமெனும் புத்தகத்தில் விரிவாய்க்காணலாம்.

விக்ரஹாராதனம் வேண்டியதல்லவெனச்சாதிக்கப்புகும் கிரந்த கர்த்தாக்களும் உபதேசகர்களும் உலகில் சிலகாலமாய்த்தோன்றி அவ்வாறே பலர்க்கு உபதேசித்துக்கொண்டு மிருக்கின்றனர். அவர்கள் இறைவனது விக்கிரஹத்தை ஆராதிக்கவேண்டாமென்று சொல்லிக்கொண்டு தமது ஆசிரியர்களது போட்டோ படங்களை அலங்கரித்தல் கர்ப்பூரந்தீபித்துக் காட்டுதல் முதலிய உபசாரங்களைச் செய்துக்கொண்டிருத்தலைத் தற்காலம் விசேஷமாய்க்காணலாம். அவர்களது உபதேசத்தையும் செயலையும் கவனிப்போமாயின், ஸர்வவல்லமை பொருந்திய இறைவனை உபாஸிக்க வேண்டியதில்லையெனவும் அற்பயோக்கியதையையுடைய மனிதர்களை, போட்டோ படங்களின் மூலமாய் உபாஸிக்க வேண்டும் எனவும் ஏற்படுகின்றது. இதனை உண்மை யறிவாளர் உசிதமாய்க்கொள்ளமாட்டார். ஸநாதநமாய் நடைபெற்று வருவதும் வேதசாஸ்திரங்களில் விசேஷமாய்ப் பிரதி பாதிக்கப்பட்டதும் ஸநகாதியர் வஸிஷ்டர்மார்க்கண்டேயர் பராசரர் வியாஸர் நாரதர் முதலிய மஹரிஷிகளாலும் ஸ்வேதர்

கௌடபாதர் கோவிந்த பகவத் பாதர் முதலிய ஆன்ஞோர்களாலும், அதற்கு முற்காலத்தவராகிய ஸ்ரீ ஞானசம்பந்த மூர்த்திகள் முதலிய தெய்வத்தன்மை பொருந்திய பெரியோர்களாலும், ஸர்வக்ஞ ஸமராய்க் கொள்ளப்பட்டிருக்கும் ஸ்ரீ வித்யாரண்ணியர் அப்பைய்ய தீக்ஷிதேந்திராள் முதலிய மஹநீயர்களாலும் விக்கிரஹாராதனஞ்செய்யப்பட்டு வந்ததென பிரமாண மூலமாய் அறியப்பட்டிருக்க, விக்கிர ஹாராதனம் மூடர்களுக்கே எனவும் அதுவேதத்தில் சொல்லப்படவில்லை எனவும் சொல்லிக்கொண்டிருக்கும் தற்காலத்தவரின் ஆராய்ச்சியின் மாறுபாட்டை என்னவென்று சொல்லுவோம்- எவ்வாற்றானும் ஜடப்பொருள்களாகிய (இறைவனது) விக்கிரஹங்களுள் யாதானும் ஒன்றின் மூலமாகவே இறைவனை உபாஸித்து அருள்பெறவேண்டும். இதுவே ஸநாதனமாகிய உண்மை.

சுபம்.